திருக்குற்றாலநாதசுவாமி கோயில் வெளியீடு

சிவமயம்

# திருக்குற்றாலயமக அந்தாதி
# திருக்குற்றாலநாதர் உலா
# திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
# திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை
# திருக்குற்றாலக் கோவை

ACL-FTS
00441

மேலகரம் மகா கவி
திரிகூடராசப்பக் கவிராய மூர்த்திகள்
இயற்றியருளியது.

திருக்குற்றாலநாதசுவாமி கோயில் வெளியீடு

சிவமயம்

# திருக்குற்றாலயமக அந்தாதி
# திருக்குற்றாலநாதர் உலா
# திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
# திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை
# திருக்குற்றாலக் கோவை



மேலகரம் மகா கவி
**திரிகூடராசப்பக் கவிராய மூர்த்திகள்**
*இயற்றியருளியது.*

*விலை அணா பத்து.*

## கோயில் நிர்வாகம்.

---

திரு. நவநீதகிருஷ்ண மருதப்ப பாண்டியன்,

*பெருநிலக்கிழார்,*

*ஆட்சி தர்மகர்த்தர்.*

திரு. A. சேதுராமலிங்க முதலியார் *பீ. ஏ.,*

*நிலக்கிழார்.*

திரு. A. C. ஷண்முகநயினர் *பீ. ஏ., பீ. எல்.,*

*அட்வகேட்,*

*தர்மகர்த்தர்கள்.*

---

திரு. V. சங்கரநாராயண பிள்ளை,

*எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்.*

உ

சிவமயம்

# முன்னுரை.

---

இப்புத்தகத்தில் திருக்குற்ருலத் தலபுராணம் திருக்குற்ருலக்குறவஞ்சி முதலிய அரிய நூல்களை இயற்றியருளிய மேலகரம் மகாகவி திருகூடராஜப்பக் கவிராய மூர்த்திகள் அருளிச்செய்த "திருக்குற்ருலயமகவந்தாதி" "திருக்குற்ருல நாதர் உலா", "திருக்குற்ருலச் சிலேடை வெண்பா", திருக்குற்ருலப் பரம்பொருள் மாலை" "திருக்குற்ருலக் கோவை" யில் 51 பாட்டுகள் அடங்கியிருக்கின்றன. "யமகவந்தாதி" "உலா" முழுநூல்களும், "சிலேடைவெண்பாவில்" ஒரு பாகமும் 1939-ம் வருஷத்தில் திருக்குற்ருலநாதசுவாமி கோயிலார் வெளியிட்டனர். சிலேடைவெண்பா முழுநூலுங் கிடையாமையால் 100 பாட்டுகளில் 49 பாட்டுகளே அப்போது வெளிவந்துள்ளன. இப்போது அக்குறை நீக்கப்பெற்று முழு நூலும் வெளியிடப்படுகின்றது. பரம்பொருள்மாலையின் சுவடி அப்போது அகப்படாததால் வெளியிடப்படவில்லை. இப்போது வெளிவருகின்றது. குற்ருலக் கோவையில் 51 பாட்டுகளே கிடைத்தன. முழுநூலுங் கிடைக்கவில்லை. ஆகையால் கிடைத்தவற்றை வெளியிடுகின்ருேம். "சிலேடைவெண்பாவில் வெளிவராத பாட்டுகளையும் "பரம்பொருள் மாலை" முழுவதும் குற்ருலக்கோவையிற் சில பாக்களையும் நூலாசிரியர் வழித்தோன்றலும் திருநெல்வேலி ஹிந்து உயர்தரக்கலாசாலையில் தலைமைத் தமிழ் ஆசிரியராய் அமர்ந்திருந்தவரும் ஆங்கில சாம்ராஜ்ய மன்னர் 8-வது எட்வர்டு, வேல்ஸ் இளவரசராய் இந்தியா வந்தபோது அவரால் கிலத்தும் சால்வையும் அளிக்கப் பெற்று மரியாதை செய்யப்பட்ட பெருந்தமிழ்ப் புலவருமான மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களின் திருமகனுர் செங்கோட்டை வக்கீல் திரு S. சொக்கலிங்கக் கவிராயர் அவர்கள் அன்புடன் கொடுத்து உதவினுர்கள். அன்னுர் தாராள குணமும் தமிழார்வமும் பாராட்டுதற்குரியன. அவர்கள் அன்புதவிக்குக் கோயிலாரும் தமிழுலகமும் நன்றி கூறக்கடப்பாடுடையவர்களாவர். இவர்களும் இவர்கள் குடும்பத்தாரனைவரும் வாழ்க. இப்புத்தகத்திற் காணப்பெறும் 'யமக அந்தாதி'யின் உரை முற்கூறிய மே. சொ. சுப்பிர மணியக்கவிராயர் அவர்களால் எழுதப்பெற்றது.

நூலாசிரியர் இயற்றிய 14 நூல்களில் "குழல்வாய்மொழி கலிப்பாமாலை, குழல்வாய்மொழி கோமளமாலை, குழல்வாய்மொழி வெண்பா அந்தாதி, குழல்வாய்மொழி பிள்ளைத் தமிழ், நன்னகர் வெண்பா இவ்வைந்தும் இன்னும் அச்சுவாகன மேறியதாகத் தெரியவில்லை. ஏட்டுச் சுவடிகளாவது கையெழுத்துச் சுவடிகளாவது கிடைத்தால் அவற்றை வெளியிடக் கோயிலார் ஏற்பாடு செய்ய முன் வரலாம். தமிழறிஞர்களும் அன்பர்களும் நூற் சுவடிகள் இருக்குமாயின் கொடுத்து உதவினால் அது போற்றற்குரிய இறைபணியாகும்.

அந்தாதி யென்பது அந்தாதித் தொடையால் பாடப்படும் பிரபந்தம். அந்தாதித் தொடையாவது முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக வருமாறும் நூலின் ஈற்றுச் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் முதற்செய்யுளின் முதலாக மண்டலித்துவருமாறும் தொடுப்பது. யமகம் என்பது பாக்களில் வந்த சொல்லே அடிகளில் திரும்பிவருதல், யமக இயல்பும் அந்தாதி இயல்பும் பாக்களில் ஒன்றுசேர்ந்து வருவது யமகவந்தாதி,

உலாவென்பது இளமைப் பருவமுற்ற தலைமகனைக் குலங்குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரையிவற்றானின்றனென்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பவனிவர பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய ஏழு பருவப் பெண்களுங் கண்டு மயங்கியதாக புலவராற் புனைந்து கலி வெண்பாவாற் பாடப்பெறும் பிரபந்தம். ஏழு பருவங்களுக் கேற்ற செயல்களாகிய சிற்றிலிழைத்தல், சிறு சோறடுதல், கழங்காடல், கிளி பூவையொடு குலவுதல், யாழ்வாசித்தல், பொழிலாட்டு, புனல்விளையாட்டு, மலர்விழாவெடுத்தல் ஊசல் முதலியனவும் பாட்டுடைத் தலைவன் சிறப்புகளும் வரும்.

சிலேடை யென்பது பாவின் ஓர் அலங்காரம். முன்னர் வைத்த பொருளையும் பின்னர் வைத்த பொருளையும் ஒரு சொற்றொடரால் சிலேடித்துக் கூறுவது. வெண்பா வென்பது பாவினங்களில் ஒன்று. ஈற்றடிமுச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்றுவரும் பா. மாலையென்பது கட்டளைக் கலித்துறைச்செய்யுள் அல்லது வெண்பாவினால் பாடப்பெறும்

ஓர் பிரபந்தம். கோவை யென்பது கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் ஆக்கப்படும் அகப்பொருள் நூல். மணிகளை ஓரினமாக ஒழுங்காகக் கோப்பது போல் அகப்பொருட் கிளவிகளைக் கோப்பது கோவையாகும்.

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
களவு கற்பெனும் வளரவுடைத்தாகி
நலனுறு கலித்துறை நானூருக
ஆறிரண்டுறுப்பு மூறின்றி விளங்கக்
கூறுவதகப் பொருட் கோவையாகும்.

இலக்கண விளக்கம்.

கோவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அறிவாற்சிவனேயாகும் மணிவாசகப் பெருமான் அருளிய "திருச்சிற்றம்பலக்கோவை" யாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து இப்புத்தகத்திலடங்கிய நூல்கள் திருக்குற்ருல தலத்தில் கோயில்கொண்டருளியிருக்கும் திருக்குற்ருலநாதர் குழல்வாய்மொழியம்மையின் அருமை பெருமைகளை இலக்கிய நயங்கள் செறிந்து மனதைக் கவர்ந்து பக்தி விளைவிக்கும் இயல்புடையன. திருக்குற்ருலம் பாண்டி நாட்டிலுள்ள 14 சிவஸ்தலங்களுள் முக்கியமான தொன்று. அகத்தியமுனிவர் வழிபட்ட தலம். திருஞானசம்பந்தப் பெருமான் இங்குள்ள இயற்கையின் எழில் நலன்களையும் அருவிகளையும், நுண்டுளியாகிய சாரல் மழையையும் விழாப் பொலிவுகளையும் கண்டு திருப்பாடல்கள் அருளிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசக சுவாமிகள் வழிபட்டு காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கிப்பாடிய தலம். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஅங்கமாலை சாற்றிய தலம். பட்டினத்தார், அருணகிரிநாதர் வழிபட்டு வாழ்த்தியதிருத்தலம் மாகாணத்திலிருந்து பல துறைமக்கள் வைகாசி — ஆவணி மாதங்களில் வந்து இங்கு வீசுகின்ற தென்றற் காற்றையும் சாரல்மழையையும், இயற்கை வனப்பையும் அனுபவித்து உடல் நலம் பேணி மனநலம் பெறுவது வழக்கம். இத்தலத்தின்பெருமைகளை திருக்குற்ருலத் தலபுராணத்தில் விரிவாகக் கண்டு களிக்கலாம்.

இந்த நூல்களின் ஆசிரியர் திரிகூடராஜப்பக் கவிராய மூர்த்திகள் திருக்குற்ருலத்தையடுத்த மேலகரம் என்னுஞ் சிறிய ஊரில் 256 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். தாயுமான சுவாமிகள் காலத்தவர் என்று கணிக்கப்படுகிறது. திருக்குற்ருலநாதர் பேரில் இவ்வாசிரியரின் ஆழ்ந்த பக்தியையும்

இடையறு அன்பையும் அவரியற்றிய நூல்கள் புலப்படுத்தும். நூல்கள் எல்லாம் இலக்கியச் செறிவுகள் நிறைந்தும் நுண் கருத்துக்கள் மலிந்தும் கற்பனைகள் சிறந்தும் படிப்பவர் மனதை ஈர்த்து திருக்குற்றாலநாதர்பால் அன்பைப் பிணிக்குந் தகைமை வாய்ந்தவை. புராணங்களில் திருக்குற்றாலத்தல புராணமும், குறவஞ்சியில் திருக்குற்றாலக் குறவஞ்சியும் இணையற்றன வென்றும் நவில்தொறும் நவில்தொறும் நூல் நயம் காணற்குரியனவென்றும் அறிவுலகம் போற்றுகின்றது. பக்திவலையிற்படுவோனாகிய பரம்பொருளின் திருவருள்நிரம்பப் பெற்ற இவ்வாசிரியர் நூல்கள் முழுதும் தெய்வமணங் கமழ்வது ஓர் வியப்பன்று.

பழங்காலத்தில் திருக்கோயில்களும், திருமடங்களும் தமிழ்மொழிக்கும் சைவசமயத்திற்கும் வளர்ப்புப்பண்ணை களாகத் திகழ்ந்தன. தமிழ்நாடு செய்த தவக்குறைவால், ஆங்கில ஆட்சியின் கீழ் இப்பண்பு மிகவும் குறைந்துகொண்டே வந்தது. நாடு சுதந்தரமடைந்தவுடன் இந்நிலைமைமாறி இவ்விரண்டும் புத்துயிர் பெற்றுத் தங்கள் கடமையை உணர்ந்து இப்பணியில் கருத்தைச் செலுத்தி வருவது மொழி வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் ஓர் நற்குறியாகும். கோயில் களும் மடங்களும் ஒல்லும் வகையால் இவ்வற வினைகளை ஓவாதே செய்தக்கால் மொழித் தொல்லைகளும் சமயப்பிணக்கு களும் மறைந்து பக்தியும் உண்மையறிவும் முன்னேறி மக்களை அறவழியில் நடாத்துமென்பதற்கு ஓர் ஐயமுமில்லை. இப் புத்தகங்களிலடங்கிய நூல்கள் இதற்குத் துணையாய் நிற்கும். இந்நூல்கள் புகழ்கின்ற தலைவனாகிய திருக்குற்றாலத்திறைவன் தவிர வேறு உற்றார் யார் நமக்கு உளர்? அவன் அருளாலே அவன் தாள் வணங்கி முந்தைவினை முழுதும் ஓய இப்பாக்களைப் பாடி அவனுக்கு மாலையாகச் சாற்றி சிந்தை நிறைந்து வழி பட்டு அவன் கருணைபெற்று யாதொரு குறைவுமின்றி இனிமை யாக வாழ்வோமாக.

சுற்றாத ஊர் தோறுஞ் சுற்றவேண்டாம் புலவீர்
குற்றாலமென்றொருகாற் கூறினால்—வற்றா
வட வருவியான் மறுபிறவிச் சேற்றில்
நட வருவியானே நலம்.

திருக்குற்றாலம்,
1—6—'54.

*A. C.* ஷண்முக நயினார்,
அட்வகேட் & டிரஸ்டி.

கணபதி துணை.

# திருக்குற்றாலயமகவந்தாதி.

## காப்பு.

புயல்காட்டும் பொன்மதிற் குற்றாலத் தண்ணலைப் போற்றுதமிழ்
இயல் காட்டும் பாடலந் தாதிக்கு மேற்பொருள் யாவுந்தந்து
செயல்காட்டுந் தென்னிலஞ்சிக்கும ரேசன்முற் செல்வன்செய்கள்
கயல்காட்டு மேலகரத்தூரிற் செண்பகக் கற்பகமே.

(1)

*(இ-ள்) தென் இலஞ்சிக் குமரேசன் முற்செல்வன் — தென் இலஞ்சியில் எழுந்தருளியிருக்கும் குமரக்கடவுளுக்குத் தமையனாராகிய, செய்கள்கயல்காட்டும் மேலகரத்தூரில் செண்பக் கற்பகம்—வயல்களில் கயல்மீன்கள் பொருந்திய மேலகரம் என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கின்ற செண்பக விநாயகர் என்னும் திருநாமத்தையுடைய கற்பகம், புயல் காட்டும் பொன்மதில்—மேகங்கள் படிகின்ற பொன்னாலாகிய மதில்களாற் சூழப்பட்ட, குற்றாலத்து அண்ணலைப் போற்று— திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைத் துதிக்கும், தமிழ் இயல்காட்டும் பாடல் அந்தாதிக்கு— தமிழிலக்கணம் பொருந்திய செய்யுட்களையுடைய அந்தாதி என்னும் பிரபந்தத்திற்கு, மேற்பொருள் யாவுந்தந்து — (வேண்டுவனவாகிய) மேலான பொருள்களை எல்லாம் கொடுத்து, செயல்காட்டும்—அடியேன் செய்தலுக்குரிய வழி காட்டும். கற்பகம் செயல்காட்டும் என முடிக்க.*

*அந்தாதி—அந்தாதித் தொடையால் பாடப்படும் பிரபந்தம். அந்தாதித் தொடையாவது முன்னின்ற செய்யுளின் ஈற்றி லுள்ள எழுத்தேனும் அசையேனும் சீரேனும் அடியேனும் அடுத்து வரும் செய்யுளின் முதலாக வருமாறும், நூலின் ஈற்றுச் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும்*

சீரேனும் அடியேனும் முதற் செய்யுளின் முதலாக மண்டலித்து வருமாறும் தொடுப்பது. மேற்பொருள்—உயர்ந்த கருத்துக்கள், இலஞ்சியென்பது திருக்குற்றாலத்திற்கு வடபாலுள்ள முருகக் கடவுளுக்குரிய ஒரு தலம். முற்செல்வன்—பண்புத்தொகை. சிவபெருமானது மூத்த பிள்ளையார் என்றபடி. இங்கே விநாயகரைக் கற்பகமெனக் கூறியதை விளக்கி "காமலி தருப்போ லைந்துகைவலான்" (திருக்குற்றாலக் குறவஞ்சி) என்றார் வேறு நூலினும். குற்றாலம்—மலையாத்தி. சிவபெருமான் இத்தலத்தில் மலையாத்தி நீழலமர்தலால் இது திருக்குற்றாலமெனப் பெயர்பெற்றது. இது வடமொழியிற் குத்தாலம் என வழங்கும். இதனை

'நிமலனும் பிரமசாரி நின்மலை யென்னு ஞானக்
குமரிபா லகிலங் தோன்றக் குற்றாலங் கோவிதாரஞ்
சமருக மென்னும் நாமந் தருவரை யாத்திநீழ
லமர்தலாற் றிருக்குற்றால மாயது மூலட்டானம்'

எனவரும் திருக்குற்றால புராணச்செய்யுளாலறிக.

சிவாலயங்களிற் சந்நிதி வாயலில் வலப்பால் விநாயகரும் இடப்பால் சுப்பிரமணியரும் வீற்றிருத்தல் முறையாகும். திருக்குற்றாலச் சிவாலயத்திற்கு வலப்பால் விநாயகர் மேலகரத்துச் செண்பக விநாயகரும் இடப்பால் முருகக்கடவுள் தென்னிலஞ்சிக் குமரக்கடவுளுமாகக் கொள்வது ஐதிகம். இக்காரணம் பற்றியே, 'தென்னிலஞ்சிக் குமரேசன் முற்செல்வன்' எனக் குமரக்கடவுளை இக்காப்பிலும் உடம்படுபுணர்த்திக் கூறுகிறார்.

இச் செய்யுளின் முதல் மூன்றடிகளின் எதுகைகளும் திருக்குற்றாலப் புராணக் காப்புச் செய்யுளுடன் ஒற்றுமையாக வருதல் கவனிக்கத் தக்கது. அச்செய்யுள்

புயல் காட்டும் பணிவரையின் பிடிதழுவுஞ்
சிவவேழம் பொருப்பில் வானில்
இயல் காட்டு மிருபிடிசேர் முந்நாலு
துதிக்கையன் முன்னின்ற ஞானச்
செயல் காட்டு மொருகோட்டி னிருகோட்டு
வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல் காட்டுந் திருமேனி மழைமதச் செண்பகக்
களிற்றை மனத்துள் வைப்பாம்.

இருகவிகளும் செண்பக விநாயகரையே காப்புக் கடவுளாகக் கொண்டன.

திருவாக்கு நன்னகர்ச் செல்வரந் தாதிக்குச் செய்ய தமிழ்
வருவாக்குஞ் சொல்லுமெல் லாந்தரு வான்றிரு மாலையர
னுருவாக்குங் கும்ப முனிக்குப தேச முணர்த்தியருட்
குருவாக் குடிகொண்ட செவ்வே ளிலஞ்சியிற் கொற்றவனே.

(2)

(இ-ள்) திருமாலை அரன் உருவாக்கும் கும்பமுனிக்கு—விஷ்ணுமூர்த்தியைச் சிவவடிவாகச் செய்த அகத்தியமாமுனிவருக்கு, **உபதேசமுணர்த்தி — உபதேசத்தையருளி,** அருட்குருவா —அருளையுடைய ஆசாரிய மூர்த்தியாக, இலஞ்சியிற் குடிகொண்ட செவ்வேள் கொற்றவன்—திருவிலஞ்சித் திருப்பதியிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற செவ்வேளாகிய தலைவர், திருவாக்கும் நன்னகர்ச் செல்வர் அந்தாதிக்கு—அழகைச் சொரிகின்ற நன்னகரில் எழுந்தருளியிருக்கும் திருவருட் செல்வராகிய திருக்குற்றாலநாதருடைய அந்தாதிப் பிரபந்தத்திற்கு, செய்ய தமிழ் வருவாக்கும் சொல்லும் எல்லாம் தருவான்—செவ்விய தமிழ்ச் சொற்கள் வருகின்ற வாக்கினையும் சொற்களையும் பின்னும் வேண்டிய யாவற்றையும்தந்தருளுவார், (எ—று) நன்னகரென்பது திருக்குற்றாலத்திற்குரிய திருநாமங்களுள் ஒன்று. "நம்பான் மேய **நன்னகர்** போலு நமரங்காள்" என்பது **தேவாரம்.**

அரனுருவாக்கும் உபதேசம் கும்பமுனிக்கு உணர்த்தி என்று கூட்டிச் சிவவடிவமாகச் செய்தற்கு வேண்டும் உபதேசத்தை அகத்தியருக்கு அருளிச் செய்து என்று பொருள் பண்ணுதலும் ஆகும். குற்றாலத்திற்குச் சென்ற அகத்தியர் வைணவர்களாலே தடுக்கப்பட்டுத் திருவிலஞ்சியிற் சென்று வெண்மணலாற் சிவலிங்கம் பாணித்து இரண்டு நாள் பூசித்துக் குமரக் கடவுளிடத்து வரங்கிடந்து அம்மூர்த்தியின் உபதேசம் பெற்று வைணவ வேடம் பூண்டு குற்றாலம் எய்தி வைணவரால் உபசரிக்கப்பட்டு உட்சென்று திருமாலைச் சிவவடிவாக்கினர் என்பது வரலாறு. இச்செய்தியைக் கந்தபுராணம் குற்றாலச்சருக்கத்தாலும் திருக்குற்றாலப் புராணம் திருமால் சிவபிரானுன சருக்கத்தாலும் அறியலாம்.

குருவா—குருவாக ஆகவென்பது ஆவெனக்கடை குறைந்தது. வேள் இருவருளராதலின் செவ்வேளென்ருர். கருவேள் - மன்மதன்.

**கலைமகள், மூவர்.**

கலைமகள் பாதமலர்போற்றி நன்னகர்க் கண்ணுதல் பான்
மலைமகள் பாலுண்ட வாயனை வாழ்த்தி மலைபுணையா
அலைமக நீத்தங் கடந்தானை யேத்திமுன் னந்தணற்குத்
தலைமகன் மாமுத லைவாய்த்தந் தான்புகழ் சாற்றுதுமே. (3)

(இ-ள்) கலைமகள் பாதமலர் போற்றி—சரஸ்வதியினுடைய திருவடித்தாமரைகளைத் துதித்து, நன்னகர் கண்ணுதல்பால்—குற்ருலத்தில் எழுந்தருளியிருக்கிற நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானது (இடப்) பாகத்திலிருக்கின்ற, மலைமகள்பால் உண்ட வாயனை வாழ்த்தி—இமயமலையரசன் மகளாகிய உமாதேவியார் அருளிய ஞானப் பாலை உண்டருளிய திருஞானசம்பந்தப் பெருமானைத் தோத்திரஞ் செய்து, மலைபுணையா—(சமணராலே கட்டப்பட்ட) கல்லைத் தெப்பமாகக்கொண்டு, அலைமக நீத்தம் கடந்தானை ஏத்தி—அலைகளையுடைய பெரிய கடலினின்றும் கரையேறிய திருநாவுக்கரசரைத் துதிசெய்து, முன் அந்தணற்கு தலைமகன் மாமுதலை வாய்த்தந்தான்—முற்காலத்தில் (அவிநாசியிலுள்ள) அந்தணனுக்கு முதற்பிள்ளையைப் பெரியமுதலைவாயினின்றும் (அழைத்து) கொடுத்தவராகிய சுந்தரமூர்த்திகளுடைய, புகழ் சாற்றுதும்—கீர்த்தியைப் புகழ்ந்து பாடுவோம்.

அவர்களை வணங்கினல் யான் சொல்லத் தொடங்கிய இவ்வந்தாதி யென்னும் பிரபந்தத்துக்கு அவர்கள் அனுக்கிரகஞ் செய்வார்களென்பது கவியிருதயம்.

மகா என்பது மக என வந்தது குறுக்கல் "மருந்தொன்றுநாடியன்ருே மகமேரு வலங்கொள்வதே" (தஞ்-வா)

இருவா சகத்தர்க் கரியார்குற் றுலத்தை யேத்துதற்குத்
திருவா சகத்தமிழ் செய்தான் செயலுண்டு தேவருக்குங்
குருவாச வற்குங் குறுகாத தேவைக் குறுகெனவே
யொருவா சகத்தி லுருகச் செய் தானென் னுளத் திலுண்டே. (4)

*(இ-ள்) இருவு ஆசு அகத்தர்க்கு அரியார்—பொருந்திய குற்றத்தையுடைய மனத்தையுடையார்களுக்கு அறிதற்கரியவ ராகிய சிவபெருமானது, குற்றுலத்தை—திருக்குற்றுலத்தை, ஏத்துதற்கு — துதிப்பதற்குத் துணையாக, திருவாசகத்தமிழ் செய்தான் செயல் உண்டு—திருவாசகம் என்னும் தமிழ் (வேதத்தைச்) செய்தருளிய மணிவாசகப் பெருமானுடைய திருவருட் செயலும் (எனக்கு) இருக்கிறது, தேவருக்கும் — தேவர்களுக்கும், குருவாசவற்கும்—அவர்களுக்கு அரசனாகிய இந்திரனுக்கும், குறுகாத தேவை—அடையமுடியாத சிவபெரு மானை, குறுகு என ஒரு வாசகத்தில்—குறுகுக என ஓர் சொல்லினாலே, உருகச்செய்தான் — (நின்ற திருக்கோலமாகிய திருமால் வடிவம்) உருகிச் (சிவலிங்க வடிவமாக ஆகும்படிச்) செய்த அகத்திய முனிவரும், என் உளத்தில்—அடியேனுடைய மனத்தில், உண்டு—,*

*இவ்விருவருடைய செயல்களுமிருப்பதால் அடியேன் செய்யத் துணிந்த நூல் இடையூறின்றி முற்றுப் பெறுமென்பது குறிப்பு.*

*இருவாசகத்தரென்பதற்கு முன்பின் விரோதமாகிய சொற் களைச் சொல்வாரென்பதும் ஆகும்.*

*குரு—அரசன்; "அரசனுங் குருவென வாகு மென்ப" (பிங்கலந்தை).*

## நூல்.

புவிதந்த வாரண ஞரண ஞனவன் பூரணச்சம்
புவிதந்த வாரண வீதிய ஞதியன் பூதிநயப்
புவிதந்த வாரண வோங்குங்குற் றுலத்திற் புந்திதிருப்
புவிதந்த வாரணம் போன்முத்தி வீடு புரக்க நெஞ்சே. (1)

(இ—ள்) நெஞ்சே—மனமே, தந்தவாரணம்போல்—தந்தத்தையுடைய யானையைப்போல், முத்திவீடு புரக்க—மோட்சமாகிய பதவியை யடைதற்கு, புவிதந்த ஆரணன் நாரணன் ஆனவன்—பூமியைப் படைத்த பிரமனும் திருமாலுமாக முன்னே எழுந்தருளியிருந்தவரும், பூரணச் சம்பு—எங்கும் நிறைந்த சம்பு என்னும் திருநாமமுடையவரும், விதந்தவாரண வீதியன்—யாவரும் எடுத்துப் புகழ்கின்ற சங்க வீதியை யுடையவரும், ஆதியன்—முதன்மையை யுடையவருமாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற, பூதி நயப்பு விதம் தவார் அணை ஓங்கும்—திருநீற்றை விரும்புந் தன்மை நீங்காத அடியார்கள் அணுகும்படி உயர்வாக விளங்குகின்ற, குற்றாலத்தில்—திருக்குற்றால மென்னும் திருப்பதியில், புந்தி திருப்புவி—புத்தியைத் திரும்பும் படிச் செய்வாயாக.

சாத்திரங்களை ஓதி யுணர்ந்து விதிப்படி சிவார்ச்சனை செய்ய வலிமையில்லாதமனமே மோட்சத்தை விரும்புகின்றாய். ஒரு யானையானது கோடைகாலத்தில் உணவின்றி நீரின்றிக் காடெலாமலைந்து அத்தியாயத் தோலாய்த் தூங்கலாய்த் திரிகூட மலையையடைந்து அங்குள்ள வளங்களாற் களித்துத் துதிக்கையால் வடவருவி நீரைமொண்டு வீசி மலர் இலை கனிகளை உதிர்க்க அவைகுறும்பலா வீசன் சன்னிதானத்தில் முறையே திருமஞ்சனமாய் அர்ச்சனையாய் நிவேதனமாயமைய அந்த யானைக்குக் குற்றாலநாதர் சிவலோகங் கொடுத்தருளினார். ஆதலினத்தலத்தில் புந்தி செலுத்துகென நெஞ்சறிவுறுத்தவாறு. குற்றாலநாதர் மும்மூர்த்தியுமானவர் என்பதை.

திருமால் சிவபிரானான சருக்கத்தில் அகத்தியர்

'' ஒருகத்திலயனாகி யோருகத்திலரியாகி யுடையதேவன்
பேருகத்தி லரனாக வீற்றிருக்குந் தலமிதுவோ, ''

என்பதனா லறிக.

ஆலயம் சங்கத்தின் தோற்றம் போல இருத்தலின் சங்க வீதி யெனப்பட்டது. திருப்புவி — ஈரேவல் '' செய்யென் .......... ......இணையினீரேவல் (நன்—பத—கக•) புந்தி—அறிவு; நெஞ்சு—மனம்.

புரந்தர னூடு தனிற் பிற வார்புவி மேற்பிறந்து
புரந்தர னூடுமி யத்துமி யார் பொன்னின் மேருவைக்கோ
புரந்தர னூடுந் திரிகூடத் தாலயம் போற்றுமன்பர்
புரந்தர னூடுந் திருவடிக் கீழ்வைக்கப் பொங்குவரே. (2)

(இ-ள்) பொன்னின் மேருவை—பொன் மயமாகிய மகா மேரு மலையை, கோபுரம் தரன்நாடும்—கோபுரம் ஒப்பு நோக்கு கின்ற, திரிகூடத்து ஆலயம் போற்றும் அன்பர்—திரிகூட மலையின் சாரலிலுள்ள கோயிலைத்துதி செய்கின்ற அடியார்கள், புரந்தரன் நாடுதனிற் பிறவார்—இந்திரனுடைய உலகத்திற் பிறக்கமாட்டார்கள். புரம் தரல் நாள்துமிய துமியார்—உடலைத் தருதலையுடைய வாழ் நாள்கழிய இறக்க மாட்டார்கள்; (தேவ ராயும் மனிதராயும் ஆகாரென்றபடி) அரன் புரந்து ஆடும் திருவடிக்கீழ் வைக்க—சிவபெருமான் காத்தருளி நடனம் புரி கின்ற திருவடியின் கீழே வைத்தருள, பொங்குவர்—(அழியாப் பதவியாகிய மோட்சத்தில்) என்றென்றும் வாழ்வார்கள்.

" திருவடியே வீடாயிருக்கு மென்றார் " (திருமுருகு 62-3. நச்-உரை) என்பது இங்கே அறிதற்குரியது.

தரம், தரன் மகரனகரப்போலி.

பஞ்ச சபைகளுள் ஒன்றாகிய சித்திரசபை ஈண்டுளதாதலின் " ஆடுந்திருவடி " என்றார்.

குவலயம் பார்க்குல வுங்கொடித் தேடைக் கோற்றவன்வா
குவலயம் பாக்கு நிலைப்பணப் பாம்பினன் கூர்குழைதாக்
குவலயம் பார்க்கும் விழியுமை கோன்றிரி கூடவெற்பா
குவலயம் பார்க்குங் கமலமும் பார்க்குமேன் கோதை கண்ணே.
(3)

(இ-ள்) குவலயம்—பூமியை, பார்குலவும் கொடி—தேர்த் தட்டிலே குலாவுகின்ற கொடிகளையுடைய, தேருடைக் கொற்ற வன்—தேராகவுடைய தலைவனும், வாகுவலயம் பார்க்கு நிலை பணம் பாம்பினன்—தோளணியாகப் பூமிக்கு நிலைக்களமாகிய படத்தையுடைய சர்ப்பமாகக் கொண்டவனும், கூர்—கூர் மையானது, குழைதாக்கு—காதினை மோதுகின்ற, வலை அம்பு ஆர்க்கும் விழி உமைகோன்—வலையையும் அம்பையும் அடக்கு

*கின்ற கண்களையுடைய உமாதேவிக்கு நாயகனுமாகிய சிவபெருமானது, திரிகூட வெற்பா—திரிகூடமலையின் கணுள்ள தலைவனே, என்கோதை கண்—என் தலைவியினுடைய கண்கள், குவலயம் பார்க்கும்—இரவு வந்துவிட்டதோ வென்று குவளை, மலரைப் பார்க்கும், கமலமும் பார்க்கும்—(பகல் வந்துவிட்டதோ வென்று) தாமரை மலரைப் பார்க்கும்.*

*இரு பொழுதும் நீவருவா யென்று எதிர்பார்த்திருக்கிறாள்.*

*ஆதலின் இரண்டு பொழுதும் நீ வருக என்று குறிப்பாகச் சொன்னபடி.*

*பார்—தேர்த்தட்டு, கூர்விழி, குழைதாக்கு விழியெனக் கூட்டுக.*

*ஆர்க்கும்—கட்டும்; இஃது இங்கே அடக்கு மென்னும் பொருளில் வந்தது.*

*இது தோழிகூற்று. பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.*

**கோதை யரங்கத்து வண்டாடும் வேணியன் கோதின்மறைக்**
**கோதை யரங்கத் துறையாறு கண்டவன் கூறுமன்பர்**
**கோதை யரங்கத் துடைப்பான் குற்றாலங் குறுகப்பெற்றார்**
**கோதை யரங்கத்து மோகாந்த காரங் குறுகலரே.** (4)

*(இ-ள்) கோதை அரங்கத்து வண்டு ஆடும் மேனியன்—மாலையாகிய சபையிலே வண்டுகள் ஆடுகின்ற சடையையுடையவனும், கோதுஇல்—குற்றமில்லாத, மறைக்கோதையர்—வேதத்தைக்கற்கும் ஒழுங்கை யுடையவருக்குரிய, ஆறு அங்கம் துறை கண்டவன்-ஆறு வேதாங்கங்களாகிய துறைகளைச் செய்தவனும், கூறும்—தன்னைத் துதிக்கின்ற, அன்பர் கோதை—அடியார்களுடைய குற்றங்களை, அரங்க—அழுந்த, துடைப்பான்-போக்குபவனும் ஆகிய சிவபெருமானது, குற்றாலம் குறுகப்பெற்றார்—திருக்குற்றால மென்னுந் தலத்தையடையப் பெற்றவர்கள், கோதையர் அங்கத்து மோகம் அந்தகாரம்—பெண்களின் உடலழகிலுண்டாகின்ற மயக்கமாகிய இருளை, குறுகலர்—அடைய மாட்டார்கள்.*

அரங்கம் என்றதற் கேற்ப ஆடும் என்றார். வேதாங்கம் ஆறு. "ஆறங்கஞ்சிக்ஷை கற்பம் ஆம்வியாகரண மற்றும், வீறிய நிருத்தஞ் சந்தோ விசிதஞ் சோதிட மென்றாகும், (சூடாமணி நிகண்டு) மோக+அந்தகாரம்-மோகாந்தகாரம். தீர்க்கசந்தி.

குறும்பல வன்புரி வெம்பவ நோய்க்குக் குழைக்குழிவாய்க்
குறும்பல வன்புரி தண்பணை நீர்வளங் கூர்ந்தெயினா
குறும்பல வன்புரி யென்றார்க்கு நன்னகர்க் கோன்சுருதிக்
குறும்பல வன்புரி வேணியன் பாதமுட கொண்மின்களே. (5)

(இ-ள்) குறும்—குற்றுகின்ற பலவன்புஉரி—பலவாகிய வலிய செயல்களையுடைய, வெம்பவ நோயக்கு—வெம்மையாகிய பிறவிப்பிணியை நீக்கிக்கொள்ளற் பொருட்டு, குழைகுழிவாய்—சேறுதங்கிய குழியினிடத்து. குறும்பு—சிறுவிளையாடல்களை, அலவன்புரி—நண்டுசெய்கின்ற, தண்பணை—மருதநிலம் சூழ்ந்த, நீர்வளம்—, கூர்ந்து—மிக்கு, எயினர்—வேடர்களுக்குரிய, குறும்புஅல—பாலைநிலத்து ஊரன்று, வன்புரி—வலிய நகரம் என்று, ஆர்க்கும்—கூறிக்கண்டோர்கள் ஆரவாரித்தற்குக் காரணமாகிய, நன்னகர்க்கோன்—திருக்குற்றால நகர்த் தலைவனும், சுருதி — வேதசொரூபமாகிய, குறும்பலவன்—குறும்பலா நீழலிலுறைபவனும், புரிவேணியன்—முறுக்கிய சடையையுடையவனும் ஆகிய சிவபிரானது, பாதம்—திருவடிகளையே, உட்கொண்மின்கள்—தியானிப்பீர்களாக. (எ—று)

பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் "உட்கொண்மின்கள்" என்றார்

இஃது ஏகதேச உருவகம். முல்லையுங் குறிஞ்சியுமுறைமையிற்றிரிந்து பாலையென்னுமோர் படிவங்கொள்ளும். ஆதலின் குறிஞ்சி நிலமாகிய இதன்கண் எயினரூர் இதுகொலோ வென ஐயப்பாடு தோன்றியதென்க. வேதமே குறும்பலவாக வந்ததென்பது வரலாறு. வேதங்கள்தாம் அழியாத தன்மையடையக் குற்றாலத்தில் பலாமரமாய் நின்று தவஞ்செய்யச் சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளி "நமக்கு வேண்டும் வரம் கேண்மின்" என்ன, வேதங்கள் தேவிக்கும் உமக்கும்

யாங்கள் நிழல் செய்து கொண்டிருக்க வேண்டும், நீங்கள் இருவீரும் அந்நிழலே கோயிலாகக் கொண்டிருந்து அனுக்கிரகஞ் செய்யவேண்டும். யுகாந்த காலத்திலும் குற்ருலத்தலம் போலவே யாங்களும் அழியாதிருக்கவேண்டும் எனப் பிரார்த்திப்ப,

,'முந்து வர மிவை மூன்றுந் தருகவெனப் பரவுதலு முக்கண் மூர்த்தி
யந்தவரங் கொடுத்தருளி யொருவடிவாய்ப் பலவடிவா யமரா நிற்பச்
சொந்தமறை யொருநான்கு மொருவடிவாய்ப் பலவடிவாய்த் தோன்றிற் (றன்றே
யெந்தை பிரானடியரைத்தா னிருந்தபடி யிருத்துவது மியற்கைத்தம்மா''

ஆகையாற் சதுர்வேதந் தருவாக மூலமதன் மூலமாகப்
பாகையா னவையிரண்டுங் கவராகச் சுருதியெலாம் பணைக ளாகச்
சாகையா னவைபசிய சாகையா வுபநிடதந் தவிராச் சூல்கொண்
டோகையார் தருமமுதற் பெறும்பலவுங் குறும்பலவே யுதவுமாதோ
( குறும்பலாச் சருக்கம் 18, 19-வது செய்யுட்கள். )

**களங்கந் தரத்தன் றிரிகூடத் தேவர கண்டனண்டர்**
**களங்கந் தரத்துநின் றேத்தும் பிரான்பெருங் காதலவைக்**
**களங்கந் தரத்திற் குளிர்ந்தா யெனைத்தினங் காயவந்தாய்**
**களங்கந் தரத்தது கண்டா யுனக்குக் கலைமதியே. (6)**

(இ-ள்) கலைமதியே—கலைகளோடு கூடிய சந்திரனே. களம் கந்தரத்தன்—ஆலகால விஷத்தைக் கழுத்தின்கண் அடக்கியவனும், திரிகூட தேவரகண்டன் - திரிகூடாசலத்தில் எழுந்தருளிய தேவரகண்டன் என்னும் திருநாமமுடையவனும், அண்டர்கள் அங்கு அந்தரத்து நின்று ஏத்தும்பிரான் - தேவர்கள் அங்கு ஆகாயத்திநின்று துதிக்கின்ற சிவபெருமான் பாற், பெரும்காதல் அவைக்களம்—பெரிய அன்புடையோர் கூட்டத்தில், கந்தரத்தின் குளிர்ந்தாய்-மேகத்தைப் போலக் குளிர்ந்து விளங்குகின்ருய், தினம் எனைக்காயவந்தாய்—நாடோறும் என்னைச்சுடுவதற்கே வந்து கொண்டிருக்கின்ருய் (ஆகையால்) உனக்குக் களங்கம் தரத்தது—உன்மேற் களங்கமிருப்பது தகுதியானதேயாகும் (எ-று).

தலைவி மதியைப்பழித்தல்.

மதியா தவனந்தி மாலைவந் தான்றந்தி மாலைகொண்டான்
மதியா தவன்வஞ்சி மாலையெண் ணுன்பகன் மாலைதந்த
மதியா தவன்முன் கொடியோநின் மாலிகை யோவினித்தா
மதியா தவட்கருள் வான்றிரி கூட மலையத்தனே. (7)

*(இ—ள்) வான் திரிகூடமலை அத்தனே—பெருமையையுடைய திரிகூடமலையின்கணுள்ள தலைவனே, மதி ஆதவன்—சந்திரனாகிய சூரியன், அந்திமாலை வந்தான்—சாயங்காலத்தில் வந்து விட்டான், தந்திமாலை கொண்டான்—யானையாக இரவைக் கொண்ட மன்மதன், மதியாதவன்—மதியாதவனாகி, வஞ்சிமாலை எண்ணுன்—தலைவியின் மயக்கத்தைக் கருதுகின்றுனில்லை, பகல் மாலைதந்த—பகலில் இரவுஉண்டாக்கிய. மதி—அறிவையுடைய, யாதவன் முன்—கண்ணபிரான் முன்னவனாகிய பலதேவரது, கொடியோ—கொடியாகிய பனையையோ, நின் மாலிகையோ—நினது கொன்றை மாலையையோ (ஏதேனும் ஒன்றை), இனி தாமதியாது—, அவட்கு அருள்—தலைவிக்கு அருள்வாயாக (எ—று).*

*வெம்மையுடைமை பற்றி மதியை ஆதவன் என்றுள்.*

*பலதேவன் துவசம் பனை. அஃது ஈண்டுப் பனைமடலையுணர்த்திற்று.*

*மாலைதராவிடின் மடலேறத் துணிந்தாளென்று குறிப்பித்தபடி பெண்கள் மடலேறுதல் இன்றெனினும் ஏறுவேமென அவர்கள் கூறுவதாகச் சொல்வது கவிமதம். இது திருமங்கை மன்னன் வாக்காகிய சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பவற்றுலும் அவற்றின் உரைகளாலும் பெறப்படும்.*

*இந்நூலிலேயே 68-ஆம் செய்யுளில் "என்பணியாய புனைவேன்" என்றதும் இக்கருத்துடையதே.*

*இது, தோழி தலைவியின் காம மிகுதி உரை.*

மலைய முனிக்குளிர் கங்கைகொண் டானும் வடநெடும்பொன்
மலைய முனிக்கு வளைத்த பிரானு மலரம்பினன்
மலைய முனிக்கு வளைத்தானை வென்ற வரதனுந்தேன்
மலைய முனிக்குமுன் னின்றுற நன்னகர் மன்னவனே. (8)

(இ-ள்) மலையமுனி - அணிந்துகொள்ள நினைத்து, குளிர் கங்கை - கொண்டானும் - குளிர்ச்சி பொருந்திய ஆகாய கங்கையை ஏற்றவனும், வடநெடும் பொன்மலை-வடக்கின்கணுள்ள பொன்மயமாகிய மகாமேரு மலையை, அமுனிக்கு வளைத்த பிரானும் - அந்த (திரிபுர சங்காரஞ் செய்ய) வில்லுக்காக வளைத்த பெருமானும், மலர் அம்பினால் - புட்ப பாணங்களினால், மலைய-பொருதற்காக, முன் - முற்காலத்தில், இக்கு வளைத்தானை-கரும்பை வில்லாக வளைத்தவனாகிய மன்மதனை, வென்ற வரதனும் - வெற்றிகொண்ட வரந்தருபவனும், தென் மலையம் முனிக்கு-தெற்கின்கணுள்ள பொதிய மலையையுடைய அகத்திய முனிவனுக்கு, முன் நின்றானும் - (கலியாணக் கோலங்காட்டி) முன்னே நின்று அருள் செய்தவனும் நன்னகர் மன்னவனே - நன்னகரென்னும் திருக்குற்றாலத்திலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே (எ - று)

வன்பு செய்வாரைத் தண்டித்தருளலும், அன்பு செய்வாரை முன்னின்றருளலும் உடையார் திருக்குற்றாலநாதரென்றதினால் அவரையே பணிந்துய்க வென்பது குறிப்பு.

மன்னிய மத்து முதலாகும் யோகத்து வாஞ்சைவிடா
மன்னிய மத்து நினைவா ருளத்தும் வலம்புரிநா
மன்னிய மத்தும் வடகயி லாய வரையிடத்து
மன்னிய மத்து மதியணிவா யெனை வாழ்விப்பையே (9)

(இ-ள்) மன் - உறுதியாக, இயமத்து முதலாகும் யோகத்து - இயமம் முதலாக எண்ணுகின்ற (அட்டாங்க) யோகத்திலே, வாஞ்சை விடாமல் - விருப்பம் நீங்காமல், நியமத்து நினைவார் உளத்தும் - முறையாக நினைவா (தியானஞ்செய்வா) ருளத்திலும், வலம்புரி நாம நியமத்தும் - சங்கமென்னும் பெயரையுடைய கோயிலினிடத்தும், வடகயிலாய வரையிடத்தும் - வடகயிலாய மலையினும், மன்னிய-எழுந்தருளியிருக்கின்ற. மத்துமதி அணிவாய் - ஊமத்தையும் சந்திரனையும் அணிபவனே, எனை வாழ்விப்பை - அடியேனை வாழும்படி அநுக்கிரகஞ் செய்வாய்

ஏ ஈற்றசை (எ - று)

இயமம் முதலாகும் யோகம் என்றது அட்டாங்கயோகத் திணை. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன.

நாமன்னியமம் இதில் னகர வொற்று விரித்தல் விகாரம்.

**விப்பிர சங்கந் தமிழ் வாணர் சங்கம் விராவுறுகல்**
**விப்பிர சங்கம் பெறுமுணர் வீர்சங்க வீதியின்மே**
**விப்பிர சங்கமழ் கொன்றையந் தாமனை மெய்யனைச்சே**
**விப்பிர சங்கதப் பொய்யாம் பிறப்பை விடுவதற்கே. (10)**

(இ-ள்) விப்பிரசங்கம் - (வடமொழியாளராகிய) பிராமணர்களுடைய சபைகளிலும், தமிழ் வாணர்சங்கம் - தமிழ் வித்துவான்களுடைய சபைகளிலும், விராவுறுகல்விப் பிரசங்கம் - வடமொழி நூல்களையும் தமிழ் நூல்களையுங் கலந்து பேசுகின்ற பிரசங்கங்களை, பெறும் உணர்வீர் - வீடுபேறு கருதிக்கேட்கப் பெற்ற அறிவுடையோர்களே, அசங்கதம் - அவமதித்தற்குரிய, பொய்யாம் பிறப்பை விடுவதற்கு - நிலையில்லாத பிறவியை நீக்கிக்கொள்வதற்கு, சங்கவீதியின்மேவி - திருக்குற்றாலத்திலுள்ள சங்கவீதியை யடைந்து, பிரசம் கமழ் கொன்றையந் தாமனை - தேன் சொரிகின்ற வாசனையையுடைய கொன்றை மாலையை யணிந்தவனை, மெய்யனை - உண்மையே சொரூபமாகவுடையவனை, சேவிப்பிர் - வணங்குவீர்களாக. (எ-று)

பல பிரசங்கங்களைக் கேட்டலாற் சந்தேக விபரீதங்கள் நீங்கி மெய்ப்பொருளை யடைவது கஷ்டசாத்திய மென்பதும், குற்றாலப் பெருமானை வலம் வந்து வணங்கி வீடு பேறெய்தல் சுலபசாத்திய மென்பதும் உணர்த்தியவாறு.

**விடங்கனி கண்டத்த னண்டர் பிரான்சங்க வீதிச்சைவ**
**விடங்கனி கண்டப் பரவா தியர் கண்டன் விண்ணுலகை**
**விடங்கனி கண்டளக் குந்திரி கூடத்தை மேவப்பெற்றால்**
**விடங்கனி கண்டத்து வேண்டாப் பெருஞ்சென்ம வேட்கையுமே**
**(11)**

(இ-ள்) விடம்கனி கண்டத்தன் - ஆலகாலவிடம் கனிந்த கண்டத்தையுடையவனும், அண்டர்பிரான் - தேவர்களுக்குத்

தலைவனும், சங்கவீதி சைவ விடங்கன் - சங்க வீதியிலே (உலா வருகின்ற) சைவப் பேரழகுடையவனும், நிகண்டப் பரவாதியர் கண்டன் - திகம்பரசமணராகிய அந்நிய சமயிகளையடக்கும் வீரனுமாகிய சிவபெருமானது, விண் உலகை - தேவலோகத்தை, விடம் - மலையானது, கனிகண்டு அளக்கும் - கன்னிராசியைத் தொட்டு அளக்கின்ற, திரிகூடத்தை - திரிகூடத்தை, மேவப்பெற்றால் - அடையப்பெறுவோமானால், கனி கண்டத்து- குமரிகண்டத்தில், வேண்டா - யாரும் விரும்பாத, பெரும் சென்மவேட்கையும் - பெரிய பிறப்பு வேண்டுமென்ற விருப்பத்தையும், விடம் - விடமாட்டோம். (எ-று)

திரிகூடாசலத்தை யடைந்திருக்கப் பெறுவோமானால் வெறுக்கத்தக்க இப்பிறவியாசையை விடமாட்டோம் என்றார். "இனித்தம்முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே" என்பது (திருநாவுக்கரசர் தேவாரம்) விடங்கம் - பேரழகு. விடங்கன் - பேரழகுடையவன். டங்கம்-உளி, உளியாற் செய்யப்படாதவன் என்றும் ஆம். (சுயம்புமூர்த்தி) கண்டம் - உடை. நிகண்டம் - உடையில்லாமை, உடையில்லாதவர் நிகண்டர் - சமணருள் ஒருவகையர் (திகம்பரசமணர்) வி, நி இன்மை எதிர் மறைப் பொருளை உணர்த்துவன. "அ அந்த நி கு வி வருமொழிப் பொருளை, யின்மைபிறிது மறையினுளொன்றாக்கும்" (இலக் - கொத்து)

"திங்கள்வான் முகடளக்குந் திரிகூடச் சிலம்புஞ்
சிவமதுகங் கைத்துறையுஞ் செண்பகா டவியும்
பைங்கண்வரை வடவருவிப் படித்துறைச்சந் நிதியும்
பாதலவாய் தலுங்கருணை பழுத்தகுறும் பலவும்
சங்கவீ தியும்பதினெட்டாம்படிக்கோ புரமுந்
தயங்கொளிச்சித் திரசபையுந் தரணிபீ டமுமென்
கங்கைநா யகவுனக்கங் கேயுண்டென் றுரைத்தாற்
கயிலைவரைக் கொருதரம் போய்க்கண்டு வரக்கருத்தே
(திரிகூடக்கலம்பகம்)

வேட்ட வரங்க நுதலார் வலைப்பட்டு வெஞ்சமனூர்
வேட்ட வரங்கத்து வீழ்பசுக் காளிம வேதண்டமான்
வேட்ட வரங்கதம் பூண்டார்குற் ருலத்து மேவப்பெற்ருல்
வேட்ட வரங்கள் பெறலாம் பெறுவது மேற்கதியே. (12)

(இ-ள்) வேள் தவர் அங்கம் நுதலார் - மன்மதனுடைய வில் வடிவம்போன்ற புருவத்தையுடைய பெண்களது, வலைப் பட்டு - மயக்க வலையிலகப்பட்டு, வெஞ்சமனூர்-கொடிய யமனுருடைய, வேட்ட அரங்கத்து வீழ்பசுக்காள்-வேட்டஞ் செய்கின்ற யுத்த அரங்கத்திலே விழுகின்ற உயிர்களே, இமவேதண்டம் மான் - இமயமலையரசன் மகளாகிய உமாதேவியை, வேட்டவர்- விவாகஞ் செய்தவரும், அங்கதம் பூண்டார் - சர்ப்பாபரணத் தைத் தரித்தவருமாகிய சிவபெருமானது, குற்ருலத்து மேவப் பெற்ருல் - திருக்குற்ருலத்தைச் சேரப் பெறுவீராளுல், வேட்ட வரங்கள் பெறலாம் - நீர் விரும்பிய வரங்களைப் பெற்று வாழ லாம், (அன்றியும்) பெறுவதும் - பிற்காலத்தில் அடையப்பெறு வதும், மேற்கதியே - மேலான மோட்சமேயாகும் (எ-று)

"நுதலென்ப புருவநெற்றி" சூடாமணி நிகண்டு.

கதிக்கு மழுக்குடங் கையார் சிவமது கங்கை நண்ணிக்
கதிக்கு மழுக்கு விடமுழு கீரணங் கார்மயற்ச
கதிக்கு மழுக்கு மழுக்கடைந் தீர்கதை யானமன்சங்
கதிக்கு மழுக்குவ தாற்றுவி ரோவொரு கண்ணிமைக்கே (13)

(இ-ள்) கதிக்கும் - ஒலித்தெழுகின்ற, மழுகுடங்கையார்- மழுவேந்திய கையையுடையவராகிய குற்ருலநாதருடைய, சிவ மது கங்கை நண்ணி - சிவமது கங்கையை யடைந்து, கதிக்கும் அழுக்கு விட - மிகுந்த குற்றங்கள் நீங்க, முழுகீர் - முழுகமாட் டீர்கள், அணங்கார் மயல் சகதிக்கு - பெண்களுடைய மயக்க மாகிய சேற்றைப் பார்க்கிலும், மழுக்கும் - ஒளியை மழுக்கு கின்ற, அழுக்கு அடைந்தீர் - குற்றத்தை அடைந்திருக்கிறீர் கள், யமன் சங்கதிக்கு - யமபடர்கள் திசையிலே, கதையால் மழுக்குவது - தண்டாயுதத்தால் அடிப்பதை, ஒரு கண் இமைக்கு - ஒரு கண்ணிமைக்கும் அளவுள்ள காலத்துக்கு ஆற்றுவிரோ - சகிப்பீர்களா? (எ-று)

யமதண்டம் சகிக்க முடியாதாகையால் சிவமது கங்கையில் மூழ்கிக் கதியடையுங்களென்று கூறியவாறு. அழுக்கு - பாவம். எல்லாருடைய பாவத்தையும் போக்கும் கங்கையானவள் தன் பாவந்திரச் சிவபெருமானை மதுவினால் ஆட்டிப்பூசித்து மூழ்கிய தீர்த்தம் சிவமது கங்கை. இதனை திருக்குற்ருலப் புராணம் சிவமது கங்கைச் சருக்கம்.

" பரமர் தமைக் கங்கை மங்கை மதுவினுற் பூசைபுரி பரிவினுலே
யரணமா மத்துறையு மாதி சிவமதுகங்கை யாயதென்ருர் "

என்பதனுலறிக.

மைக்கண்ட னத்து விலைமாதர் பொய்க்கு வழங்குவர்வாய்
மைக்கண்ட னத்து வழக்கஞ்செய் யார்பின் மறலிகோடு
மைக்கண்ட னத்து வருந்துவர்காண் குழல் வாய்மொழிசேர்
மைக்கண்ட னத்து விதமுண ராத மடநெஞ்சரே. (14)

(இ-ள்) குழல்வாய் மொழிசேர் - குழல்வாய் மொழியம்மையையணந்திருக்கின்ற, மைக்கண்டன்-கரிய கண்டத்தையுடையவனுகிய சிவபெருமானது, அத்துவிதம் உணராத மடநெஞ்சர்- அத்துவித ஞானத்தை அறியாத மூடமனமுடையவர்கள், மைகண் தனத்து விலைமாதர்-மைதீட்டிய கண்களையும் கொங்கைகளையும் உடைய பரத்தையர்களது, பொய்க்கு - நிலையில்லாத இன்பத்திற்கு, வழங்குவர் - (பொருளைக்) கொடுப்பார்கள், வாய்மைக்கண்-உண்மையான காரியங்களில், தனத்து வழக்கம்- பொருள் கொடுத்தல், செய்யார் - செய்யமாட்டார்கள், (அவர்) பின் - பிற்காலத்தில், மறலி கொடுமைக்கண்டனத்து - யமனுடைய கொடுமையாகிய தண்டனையிலே, வருந்துவர்- வருத்தம் அடைவார்கள். (எ-று)

காண் - அசை, வழக்கம் - தொழிற்பெயர்; வழங்கு - பகுதி, அம் தொழிற்பெயர் விகுதி.

மடவன முண்டகத் தாராதி தாமம் வளைந்து வேங்க
மடவன மூண்டகத் தார்கடிந் தாய்மன்னு நன்னகராய்
மடவன முண்டகங் கூர்சைவ வேதியர் வாழ்வுறச்சு
மடவன முண்டக நீரேழித் தார்குழ மாற்றினையே. (15)

(இ-ள்) மட அனம் முண்டகத்தார் ஆதி தாமம் வனைந்து-மடப்பம் பொருந்திய அன்னப்பறவைகள் உறையும் தாமரையாகிய மாலை முதலிய மாலைகளை அணிந்து, வெம் கமட வனம் முண்டகத்தார் கடிந்தாய்-வெம்மை பொருந்திய ஆமைகள் நிறைந்த நீர் அருகே உள்ள தாழையினது பூவை வெறுத்தவனே; மன்னு நன்னகராய்—; மட அன்னம் உண்டு அகம் கூர் சைவர் வேதியர் வாழ்வுற-மடங்களில் உணவை உண்டு மன மகிழ்வுமிக்க சைவர்களும் அந்தணர்களும் வாழ்வுபெறும் வண்ணம், சுமடவனம் முண்டகம் நீறு ஒழித்தார் குழுமாற்றினை-அறியாமை மிகுதியுடையவரும், நெற்றியில் திருநீறிடுதலை நீக்கியவருமாகிய வைணவர் கூட்டத்தை மாற்றினாய் (எ—று).

இது திருக்குற்றாலநாதர் பிரமவிஷ்ணுக்களாயிருந்தமையும் வைணவர்களை அகத்தியரால் அடக்கினமையும் கருதிக் கூறியசெய்யுள்.

முண்டகத் தாராதி என்றதனால் துழாய் மாலையையும் கொள்க. முண்டகத்தார் கடிந்தாய் என்பதிலுள்ள தார் பூவென்னும் பொருளது. சுமடம்-அறிவின்மை. வனம்-மிகுதி.

"தகை பெறு குசுமம் போது தார் அலர் சுமன சூந்தான்
மிகுமண மலரே தாமம் வீயிணர் துணர்பூ வின்பேர்"
(சூடாமணி நிகண்டு).

மாற்றி னடிக்குமுன் றறடைத் தானை வழுதிமுன்கான்
மாற்றி னடிக்கும் பிரானையன் ஞேன்மக வாசைபண்டு
மாற்றி னடிக்கு விசையங்கண் டானை வரந்தருகை
மாற்றி னடிக்குஞ் சிதம்பணி வீர்சித்ர மன்றகத்தே. (16)

(இ-ள்) மாற்றின்-பிரம்பினலே, அடிக்குமுன்-(அரிமர்த்தனபாண்டியன்) அடிப்பதற்கு முன்னே, ஆறு அடைத்தானை-(வையை) நதியை அடைத்தவனை, வழுதிமுன் கால் மாற்றிநடிக்கும் பிரானை-(இராஜசேகர) பாண்டியன் முன்னே

திருவடியை மாற்றி நடனஞ்செய்த பெருமானை, அன்னோன் மகவு ஆசை பண்டுமாற்றினள் - மலயத்துவஜ பாண்டிய னுடைய பிள்ளையாசையைத் (தடாதகைப் பிராட்டியாக) அவதரித்து மாற்றினவளாகிய உமாதேவியினது, திக்குவிசயம் கண்டானை - திக்குவிஜயத்தைக் கண்டவனை, சித்ரமன்றகத்தே - சித்திர சபையிடத்தே, வரந்தருகை மாற்றின் - வரந்தருகை மாற்றினையுடைய, குஞ்சித அடிபணிவீர் - (எடுத்து) வளைந்த திருவடியை வணங்குவீர்கள் (எ—று).

இது உலகத்தாரை நோக்கிச் சித்திரசபேசன் அடியார்க் கெளியன் என்பதையும், வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என்பதையும் குறிப்பிஞலுணர உபதேசித்தவாறு. வரந்தருகைமாறு

"தந்ததுன்றன்னை கொண்டதென்றன்னை" என்பது திருவாசகம்

மன்றத்து வந்துவ மாஞ்சேன்ம பாச மயக்கமுற்றேன்
மன்றத்து வந்துரு வித்தேளி யேன்வரு காலபடர்
மன்றத்து வந்துழி யேதுசேய் வேனருள் வாழிசித்ர
மன்றத்து வந்து நடித்தாய்முக் கோட்டு வரையண்ணலே (17)

(இ—ள்). சித்ரமன்றத்து உவந்து நடித்தாய் - சித்ரசபை யிடத்தே மகிழ்ந்து நடனஞ்செய்தவனே, முக்கோட்டுவரை அண்ணலே - திரிகூடபருவதத்தில் எழுந்தருளிய கடவுளே, மன்ற - உறுதியாக, துவந்துவமாம் சென்ம பாச மயக்கம் உற்றேன் - ஒன்றற்கொன்று தொடர்ந்திருப்பதாகிய பிறவிக்கு ஏது வாகிய பந்தங்களில் மயக்கமடைந்திருக்கின்றேன், மன் - நிலை பெற்ற, தத்துவம் துருவித் தெளியேன் - உண்மையான தத்து வங்களை ஆராய்ந்து தெளிய வலிமையில்லேன், வருகால படர் மன் - கடைக்காலத்தில் வருகின்ற கால படர்களுக்குத் தலைவ ஞகிய யமனுடைய, தத்துவந்துழி - மோசம் வந்தகாலத்து, ஏது செய்வேன் - அடியேன் யாது செய்வேன், அருள் - அடி யேனை ஆண்டு அருள்புரிவாயாக (எ—று).

வாழி - அசை. துவந்துவம் - இன்ப துன்பம் போல ஒன் றற்கொன்று மாறுபட்டது.

பாசம் - மண்ணுசை பெண்ணுசை பொன்னுசைகள்.

வந்த + உழி = வந்துழி. இதில் அகரம் தொகுத்தல்.

வரையா தளிக்குடை மன்னர்பெய் வார்தன மாதர்தனம்
வரையா தளிக்குந் தனமல்லவே வருக்கைப் பெருமான்
வரையா தளிக்கும் பொருப்பீர் பொருப்பர் வருமுன்னரே
வரையா தளிக்கு மதுவூற்றுந் தண்டழை வாங்குவரே. (18)

(இ-ள்) குடை மன்னர் தனம் வரையாது அளி பெய்வார் - பொருந்திய குடையையுடைய அரசர்கள் தங்கள் திரவியங்களை அளவில்லாமல் அள்ளிக்கொடுப்பார்கள், மாதர் தனம் - பெண்களுடைய தனங்கள், வரையாது - மணந்து கொள்ளாமல், அளிக்குந் தனமல்லவே - கொடுக்கத்தக்க தனமல்லவே, வருக்கைப்பெருமான் - குறும்பலாவடியிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான், வரையாது அளிக்கும் பொருப்பீர் - நீங்காமற் பாதுகாக்கின்ற பொருப்பிலுள்ள தலைவனே, பொருப்பர் வரும் முன்னர் - பொருப்பிலுள்ள (உறவினர்) வருவதற்கு முன், ஐயா - தலைவனே, தளிக்கும் மதுவூற்றும் தண் தழை - துளிக்கின்ற மதுவைச் சொரிகின்ற குளிர்ச்சி பொருந்திய (உனது) தழையை, ஏவர் வாங்குவர்-எவர்தாம் வாங்குவார்கள். (எ-று)

இது தோழி கையுறை மறுத்தல்.

வாங்கு திரைக்கடல் வாள்விழி பாகர் மதுகங்கையார்
வாங்கு திரைக்கடல் வேதங்கோண் டார்வண்மை நீங்கிக்கன்மால்
வாங்கு திரைக்கட வார்கடவாச்சுமை மண்ணின் மண்ண
வாங்கு திரைக்கடக் குங்காய பாண்ட மலச்சுமையே. (19)

(இ-ள்) மண்ணில்-பூமியில். அவாம் மண்குதிரை கடக்கும்-விரும்பப்பட்ட மண்ணாலாகிய குதிரை (மண்கூட்டை) (அழியுந்தன்மையில்) வென்ற, காயபாண்ட மலச்சுமை-சரீரமட்பாண்டமாகிய மலப்பாரம், வாங்கு திரைக்கடல் வாள்விழிபாகர் -வளைந்த அலைகளையுடைய கடலையும் வாளையும் ஒத்த கண்களையுடைய உமாதேவியைப் பாகத்திற் கொண்டவரும், மதுகங்கை

யார் - சிவமதுகங்கையை யுடையவரும், வாம் குதிரைக்கு அடல் வேதம் கொண்டார் - தாவுகின்ற குதிரையாக வலிமை பொருந்திய வேதத்தைக் கொண்டவரும் ஆகிய சிவபெருமானுடைய, வண்மைநீங்கு-அருள்வன்மை நீங்கத்தக்க, இக்கன்மால்வாங்கு திரை - கரும்பு வில்லையுடைய மன்மதனாலுண்டாகின்ற மயக்கமாகிய நீண்ட திரைச்சீலையை, கடவார் - கடக்க முடியாதவர்களுக்கு, கடவாசுமை - விலக்கமுடியாத பாரமாகும். (எ - று).

காயபாண்ட மலச்சுமை மதமயக்கம் ஒழியார்க்கு நீங்காச் சுமையாகும் எனமுடிக்க. வாங்குதல் - நீளல்.

மலங்குதிக் குந்தவ ளைவாயிற் றேறல் வழியச் செங்க
மலங்குதிக் குந்தவ ளைவாவி நன்னகர் வாழ்வை யெண்ணு
மலங்குதிக் குந்தவ றெண்ணுநெஞ் சேபின் மறலிவந்தான்
மலங்குதிக் குந்தவம் வந்தெய்து மோபவ மாற்றுகைக்கே. (20)

(இ - ள்) உதிக்கும் தவளை வாயில் தேறல்வழிய - பருத்த தவளையின் வாயில் தேன் ஒழுகும்படியாக, செங்கமலம் - செந்தாமரை மலரில், மலங்கு குதிக்குந்து - மலங்குமீன்கள் குதிக்கின்ற, அவளைவாவி நன்னகர் வாழ்வை எண்ணுமல் - அந்தச் சங்குகள் நிரம்பிய தடாகங்களினாற் சூழப்பட்ட குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை மனதினாலே தியானியாமல், அம் கு உதிக்குந்தவறு எண்ணும் நெஞ்சே - அழகிய உலகத்திலே பிறக்கின்ற குற்றத்தை யெண்ணி வருந்துகின்ற மனமே, பின் மறலி வந்தால் - கடைக்காலத்தில் யமன் வந்தால், பவம் மாற்றுகைக்கு - பிறப்பை யொழித்தற்கு, மலம் குதிக்கும் தவம் வந்து எய்துமோ - ஆணவ மலத்தினின்றும் கடந்து செல்லக்கூடிய தவம் வந்து அடையுமோ, (எ-று).

குதிக்குந்து - குதிக்கும், "செய்யுமெனச்ச வீற்றுயிர் மெய்ச்சேறலும் செய்யுளுள் உம் உந்து ஆகலும்" (நன்னூல்). மலம் குதிக்கும் - ஆணவத்தைத் தாண்டுகின்ற, கடக்கின்ற. "கூற்றங் குதித்தலுங்கைகூடும்" (திருக்குறள் 269.)

கையாறு மாறுபடாத் தொண்டர் கூட்டங் கலந்து திருக்
கையாறு மாறு பெறுவதென் ருேகய மாமுகனைக்
கையாறு மாறும் பெற் ருனைப்பெற் ருய்மது கங்கையிற்கங்
கையாறு மாறுடைக் குந்திரி கூடக் கறைக்கண்டனே. (21)

*(இ-ள்) கயமாமுகனே—யானை முகத்தையுடைய விநாயகனை யும், கைஆறும் ஆறும் பெற்ருனை-கைகள் பன்னிரண்டு பெற்ற முருகனையும், பெற்ருய்-பிள்ளையாகப்பெற்றவனே, மதுகங்கையில் - சிவமதுகங்கையில், கங்கைஆறு - கங்காநதி, மால் துடைக்கும் - தன்னுடைய (பாவ) மயக்கத்தை நீக்கிக்கொள் கின்ற, திரிகூடம் - திரிகூடவரையிலுள்ள, கறைக்கண்டனே - விஷந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமானே, கையாறு - ஒழுக்க நெறியினின்று, மாறுபடா - வேறுபடாத, தொண்டர் கூட்டம் கலந்து-அடியார்கள் கூட்டத்தோடு சேர்ந்து, திருக்கை- என்மாறு பாட்டை, ஆறுமாறு - நீங்கும்விதம், என்ருே - எக் காலமோ? (எ-று.)*

*கை - ஒழுக்கம் ஆறுதல் - நீங்குதல் " ஆருவிடரென் வயினுக்கினையால் " [ கந்தபு (அக்கினி......235.) ]*

கறைக்கண் டனைய பரூஉத்தாட் கருமலை கைக்கணைபாய்
கறைக்கண் டனையடர் செம்மலை யாய்நுங்கள் கானத்துவை
கறைக்கண் டனைய பிறைக்கோட் டுடன்வரக் கண்டதுண்டோ
கறைக்கண் டனையன் றிரிகூட மால்வரைக் கன்னியரே. (22)

*(இ-ள்) கறைக்கண்டன் ஐயன் - விடந்தங்கிய கழுத்தினை யுடைய சிவபெருமானது, திரிகூடமால்வரைக் கன்னியரே - திரிகூடமாகிய பெரிய மலையின்கணுள்ள பெண்களே, கறை கண்ட அனைய பரூஉ தாள் கருமலை - உரலைக்கண்டாலொத்த பருத்தகால்களையுடைய ஒரு கரும்லையானது, கைகணை பாய் கறை கண்டனை அடர் - கையிலுள்ள அம்பு பாய்தலாகிய இரத்தத்தையும், கண்டித்தலையும் நெருங்கிய, செம்மலையாய் - சிவந்த மலைபோலாகி, நுங்கள் கானத்து - உங்கள் காட்டினிடத் தே, வைகறைக்கண்-விடியற்காலத்தில், தன் ஐயபிறைக் கோட்*

டுடன் - தன்னுடைய அழகிய பிறைபோன்ற கொம்புடனே. வர கண்டதுண்டோ - வர நீங்கள் கண்டீர்களோ. (எ-று.)

இது வேழம் வினாதல்.

**கன்னி வரைக்குண் மதுகங்கை யான்முது கங்கைபொன்னி**
**கன்னி வரைக்கும் பரவுகுற் றாலத்தன் காவி விழிக்**
**கன்னி வரைக்குழல் வாய்மொழி பாகன் கனவிடைப்பா**
**கன்னி வரைக்கு ளிருத்தியென் றானெனைக் கையமைத்தே. (23)**

(இ-ள்) கன்னி - அழியாத, வரைக்குள் - மலையின்கணுள்ள, மதுகங்கையால் - சிவமது கங்கையையுடையதனால், முதுகங்கை பொன்னி கன்னி வரைக்கும் - பழமாகிய கங்கை காவிரி கன்னியாகுமரி வரை, பரவுகுற்றாலத்தன் - துதிக்கின்ற குற்றாலம் என்னும் தலத்தையுடையவனும், காவி விழி கன்னி - நீலோற்பல மலர்போன்ற கண்களையுடைய கன்னியாகிய, வரைக்குழல்வாய் மொழிபாகன் - மூங்கிலாகிய புல்லாங்குழல்போன்றமொழியை யுடையவளாகிய உமாதேவியைப் பாகத்தில் வைத்தவனும், கனவிடைப்பாகன் - பெரிய இடப வாகனத்தையுடைய வனுமாகிய சிவபெருமான், எனை - என்னை, கையமைத்து - கையின் அமைப்பினால், இ வரைக்குள் - இவ்வெல்லையில், இருத்தி என்றான் - இருப்பாய் என்று கூறினான். (எ-று.)

கங்கை முதலிய தீர்த்தங்கள் தமது பாவம் போக்கிக் கொள்வதால் அவை சிவமது கங்கையைப் பரவுவவாயின. குழல் வாய்மொழி இத்தலத்து அம்பிகை பெயர். இது:-

"குழல்வாய்மொழி மங்கை பங்கன் குற்றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரைவா யல்லதில்லை யிப்பூந்தழையே" திருக் கோவையாரிற் சொல்லப்பட்டிருக்கிறது.

**அமையம் பலநெல்லை யாய்தில்லை யாய்தொல்லை யாரணத்தின்**
**அமையம் பலவிடை யாய்விடை யாயகி லாண்டம்பெற்ற**
**அமையம் பலகன கண்ணிபங் காவபங் காவுனைநான்**
**அமையம் பலவுமொன் றாய்நின்று போற்ற வருள்புரியே. (24)**

(இ—ள்) அமை அம்பலம் நெல்லையாய் - மூங்கில் வனத்தில் நெல்லை அம்பலத்தையுடையவனே, தில்லையாய் - சிதம்பரத் தலத்தை யுடையவனே, தொல்லை - பழமாகிய, ஆரணத்தின் அமை - வேதங்களினுலே அமைந்த, அம் - அழகிய, பலவு இடையாய் - குறும்பலாவடியிலெழுந்தருளியவனே, விடையாய் இடபவாகனத்தையுடையவனே, அகிலாண்டம் பெற்ற அமை - அண்டங்களை யெல்லாம் பெற்ற தாயாகிய, அம்பு அலகு என கண்ணிபங்கா - அம்பின் அலகை யொத்த கண்ணையுடையவளாகிய உமாதேவியைப் பாகத்திலுடையவனே, அபங்கா-குற்றமில்லாதவனே, நான் உனை அமையம் பலவும் - எல்லா அமையங்களிலும் அடியேன் உன்னை, ஒன்ருய் நின்று போற்ற-வேறுபாடில்லாமல் துதிக்க, அருள்புரி - கிருபை செய்வாய். (எ—று.)

வேத சொரூபம் குறும்பலா. அமை, இடைக்குறை.

புரியா வணர்சடைப் பெம்மா னிருந்தும் பொற்கோயில்வலம்
புரியா வணமிருந் தம்புவி மீதிற் புடார்ச்சுனமா
புரியா வணங்குறு பாகா வேனச்சென்று போற்றிவலம்
புரியா வணமிருந்தையோ பொய்யாய்த்தினம் போனதுவே. (25)

(இ—ள்) புரியா - முறுக்காக, வணர் - வளைந்த, சடை பெம்மானிருந்தும் - சடையையுடைய குற்ருலநாதர் (அருள் செய்வதற்கு) இருக்கவும், பொன்கோயில் வலம்புரி ஆவணம் இருந்தும் - பொன்மயமாகிய கோயிலின் சங்கவீதி யிருக்கவும், புவிமீதில் - பூமியிலே, புடார்ச்சுன மாபுரியா - புடார்ச்சுன புரமென்னும் தலத்தையுடையவனே, எனச்சென்று போற்றி- என்று குற்ருலத்திற்போய் வணங்கி, வலம்புரியாவணமிருந்து- பிரதக்கணம் செய்யாமலிருந்து, தினம் - நாளெல்லாம், பொய் யாய் போனதுவே - பொய்யான விடயங்களிலேயே சென்று விட்டனவே (எ—று).

அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்திற்காகத் தவஞ்செய்யும் போது சிவபிரான் வேடஞக வந்து சண்டையிட அர்ச்சுனன் பூசைச்சம்புடம் தவறியதாகச் சிவபிரான் அனுக்கிரகித்தபடி

அதனைக் குற்ருலத்திற் கண்டெடுக்கப் பெற்றதனுல் அதற்குப் புடார்ச்சுன புரமென்ற பெயராயிற்று.

" ஆதிநாட் சம்புடங் கண்டருச்சுன னெடுத்த வாற்ருற்
பூதி சாதனத்தோர் போற்றும் புடார்ச்சுனபுரமாமிவ்வூர்"

(பு. தலமகிமை. 68-ம் செய்யுள்.)

**போனகங் காளங் கரியுரி யாடை பொருந்துமிருப்**
**போனகங் காளங் குயிலார்க்குஞ் சண்பகப் பூம்பொழில்சாய்**
**போனகங் காள விழியார் மயங்கப் புறம்பலிக்குப்**
**போனகங் காள னிரந்தார்க் களிப்பது பொன்னுலகே.** (26)

(இ-ள்) போனகம் காளம் - உணவோ விடம், ஆடை கரி உரி - ஆடையோ ஆனையின் தோல், பொருந்தும் இருப்போ நகம் காளம்குயில் ஆர்க்கும் சண்பகப் பூம்பொழில் - தங்கியிருக்கும் இடமோ மலையும் மன்மத காகளத்தைக் குயில் சப்திக்கின்ற சண்பகப் பூஞ்சோலையுமாம், சாய்போல் நகம் காள விழியார் மயங்க - பஞ்சாய்க் கோரையின் அடிபோன்ற நகங்களையும் கரியவிழிகளையுமுடைய (தாருகாவனத்து முனிபத்தினியர்) மயங்கும் படியாக, புறம்பலிக்குப் போனகங்காளன் - புறத்தே பிச்சைக்குச்சென்ற கங்காளவேடமுடைய சிவபெருமான், இரந்தார்க்கு - தன்னிடம் வந்து யாசித்தவர்க்கு, அளிப்பது பொன்னுலகே - கொடுப்பது பொன்னுலகமாகும். (எ-று).

பொன்னிவ ரம்புனை பாவையொத் தாளுடல் பூமலர்கண்
பொன்னிவ ரம்பு படுத்ததொப் பாகினள் பொன்னரங்கா
பொன்னிவ ரம்புயப் பூவாவி நன்னகர்ப் புங்கவவெண்
பொன்னிவ ரம்புதி யாலுக மாமொரு போதிரவே. (27)

(இ-ள்) பொன் அரங்கா - கனகசபையுடையவனே, பொன் - திருமகள், இவர் - ஏறியிருக்கும், (விரும்பும் என்றும் ஆம்) அம்புயப்பூவாவி-தாமரைப்பூக்கள் நிறைந்த தடாகங்களினுற் சூழப்பட்ட, நன்னகர் புங்கவ - திருக்குற்ருலத்தில் எழுந்தருளிய பெரியோனே, உடல் (தேமலுற்ற) சரீரத்தினுல்,

பொன் இவர் அம்புனே பாவை ஒத்தாள் - பொன்ஞல் பரந்த அழகாகச் செய்யப்பட்ட பாவையை ஒத்தவளாகிய பெண், பூ மலர்க்கண் - அழகிய மலர் போன்ற கண்கள், பொன்னி வரம்பு படுத்தது ஒப்பாகினள் – (கண்ணீர்ப்பெருக்கால்) காவிரி நதி கரையை உடைத்ததை ஒப்பாளுள், பொன் நிவர் - சூரியன் எழுகின்ற, அம்புதியால் – சமுத்திரத்திஞலே, ஒரு போது இரவு - ஒரு நாளிராத்திரியானது, உகமாம் - அவளுக்கு ஓர்யுக மாகவேயிருக்கின்றது, எண் இத்துயர்களே நீக்கத் திருவுளங் கொள்வர்யாக. (எ—று).

முதலடியில் இவர்தல் — பரத்தல் பொன் — சூரியன்.
3 ... ... — ஏறுதல்
4 ... நிவர்தல் — எழுதல்

போது மணங்கமழ் சண்பகக் காவும்புத் தேளிர்வந்தெப்
போது மணங்கள் புரிதிரி கூடமும் பூதரத்திற்
போது மணங்கமர் பாகர்பொற் கோயிலும் போற்றினெஞ்சே
போது மணங்கமர் போக்காத மும்மலம் போக்கிடவே. (28)

(இ-ள்) நெஞ்சே – மனமே, அணங்கு அமர் போக்காத - துன்பமாகிய போரை ஒழிக்காத, மும்மலம் போக்கிட — (ஆணவம் கன்மம் மாயையென்னும்)மூன்று மலங்களேயும் நீக்குதற்கு, போது மணங்கமழ் சண்பகக்காவும் - புட்பங்கள் பரிமளிக்கின்ற சண்பகச் சோலையையும், புத்தேளிர் வந்து எப்போது மணங்கள் புரிதிரிகூடமும்-தேவர்கள் வந்து எக்காலமும் மணங்களேச் செய்கின்ற திரிகூடாசலத்தையும், பூதரத்திற்போதும் அணங்கு அமர் பாகர் பொன் கோயிலும் – இமயமலேயில் அவதரித்த உமாதேவி பொருந்திய பாகத்தையுடைவராகிய குற்ருல நாதருடைய பொன்மயமாகிய கோயிலேயும், போற்றின் - துதித்தால், போதும் - அமையும் (எ—று)'

நெஞ்சே மும்மலம் போக்குதற்குச் சண்பகக்காவையும் திரிகூடாசலத்தையும் கோயிலேயும் துதித்தலே அமையும் என்றபடி.

இடக்கண் டனைவைத் தினமலர் சூட்டி யிணைவிழிமை
இடக்கண் டனையரு மேதில ரோவென்று மேந்தெழின்மான்
இடக்கண் டனைபுரி செவ்வானை நோக்கி யெழுதுமன்றர்
இடக்கண் டனைவலக் கண்ணனை தென்னு மெதிர்மறுத்தே. (29)

(இ-ள்) எழில் ஏந்தும் மான் - அழகினையுடைய என் பெண்ணனவள், இடக்கண் தனைவைத்து – ஓரிடத்திலே தன்னை வைத்து, இனம்மலர் சூட்டி - பலவகை மலர்களையும் முடித்து, இணைவிழிமை இடகண்டு - இரண்டு விழிகளுக்கும் மைதீட்டப் பார்த்து, (அவள்)அனையரும் ஏதிலரோ என்னும் - தாய்மாரும் அயலாரோ என்று சொல்லுவாள், இடம் கண்டனைபுரி செவ்வானை நோக்கி - விசாலமாகிய வருத்தத்தைச் செய்கின்ற சிவந்த வானைப் பார்த்து, எழுதும் மன்றர் இடக்கண் தனை எதிர்மறுத்து வலக்கண் ஆனது என்னும் - சித்திர சபேசருடைய இடது கண்ணுகிய சந்திரனை மாறுபாடாக வலக்கண்ணுகிய சூரியன் வந்து விட்டதென்று சொல்வாள் (எ–று).

இடவான், கண்டனை புரிவான். எனஇயைக்க இது தோழி கூற்று.

மறுவடக் குங்குறை வான்மேன் மதிய மலைந்துதெற்கு
மறுவடக் குங்குடக் குங்குண பாலும் வளைந்ததென்றன்
மறுவடக் குங்குமக் கொங்கைபொன் பூத்தது மாலைதந்து
மறுவடக் குங்கு வனஞ்சூழ்குற் ருலத்து வாழ்பவனே. (30)

(இ–ள்) உங்குவனஞ் சூழ் குற்ருலத்து வாழ்பவனே – இவ்விடத்தில் வனங்களினுற் சூழப்பட்ட குற்ருலத்திலெழுந்தருளிய பெருமானே, மறுஅடக்கும் குறைவான் மேல் மதியம் - களங்கத்தை உள்ளே அடக்கிய குறையையுடைய ஆகாயத்தில் வருகின்ற சந்திரன், மலைந்து - போர்செய்ய, தென்றல் - தென்றற் காற்ருனது, மறு வடக்கும் - ஏனைய வடதிசையிலும், குடக்கும் - மேற்றிசையிலும், குணபாலும் - கீழ்த்திசையிலும், வளைந்த - வளைந்துகொண்டது, மறுவடம் குங்குமம் கொங்கை - மறுத்தவடத்தையுடைய (வடமணியாத) குங்குமமணிந்த தனம்

*பொன்பூத்தது - பொன்போலும் தேமலுண்டாயது. மாலைதந்து - (ஆகையால்) உன் மாலையைக்கொடுத்து, மறு அடக்கு - அக் குற்றங்களை ஒழிப்பாயாக (எ—று).*

*தென்றல் வளைந்த - துவ்விகுதிதொக்கது. மலைந்து செய்தெனெச்சம் மலைய எனச் செயவெனெச்சப் பொருளில் வந்தது.*

*தலைவி தலைமகனை வேண்டல்.*

பவனத் தவனறுஞ் சண்பகச் சோலைப் பலாநிழல் வாழ்
பவனத் தவன மணிமிடற் றுயிருள் பாற்றுசுடர்
பவனத் தவன விழிப்பர மாபரு மப்பகடூர்
பவனத் தவனம் புரிபோ தேனக்குன் பதம்புகலே. (31)

*(இ—ள்) பவ - சிவனே, நத்தவ - சங்கை யேந்தியவனே, நறும் சண்பகச் சோலை பலாநிழல் வாழ்பவ - வாசனை பொருந்திய சண்பகச் சோலையில் குறும்பலா நீழலில் வாழ்கின்றவனே, நத்தம்வனமணிமிடற்றுய் - இருள் நிறமாகிய கரியகண்டத்தை யுடையவனே, இருள்பாற்று சுடர் - இருளைக்கெடுக்கிற சூரிய சந்திரர்களையும், பவனதவனம் விழி - காற்றின் சகாயனாகிய அக்கினியையும் கண்களாகவுடைய, பரமா - மேலானவனே, பருமம் - பருத்த, பகடுஊர்பவன் - கடாவை வாகனமாகச் செலுத்துகின்ற யமன், அ தவனம் புரிபோது - அந்த நரகத்தில் வீழ்த்தி வெப்பஞ்செய்யுங்காலத்து, உன்பதம் புகல்-உன்னுடைய திருவடிகளே தஞ்சமாவன (எ—று).*

*திருமாலாக முன் இருந்தமையின் குற்றாலநாதர் நத்தவ என அழைக்கப்பட்டார். சங்கம் குழையாகக்கொண்டவனுமாம். வாயுவிலிருந்து அக்கினி தோன்றியதால் பவனத்தவனமென்று அக்கினியைக் கூறினர். பவனம் - உலகம், உலகிலுள்ள அக்கினி யென்னினு மமையும். பருமம் சேணமுமாம்.*

புகலும் பரம்பரன் குற்றாலத் தையன்பொற் றுளிணையே
புகலும் பரம்பரத் தேவர் பிரான்புவி யாழியஞ்சப்
புகலும் பரம்பரம் போல்வீ ழருவிப் புனல்படிவார்
புகலும் பரம்பர வீடெய்தி வாழ்வரேப் போதைக்குமே (32)

(இ-ள்) பரம்பு அரன் - எங்கும் நிறைந்த அரனாகிய, குற்றாலத்து ஐயன் பொன் தாளிணையுமே - திருக்குற்றால நாதருடைய திருவடிகளிரண்டுமே, புகல்-தஞ்சமும், புகலும் - சொல்லுகின்ற, பரம்பரத் தேவர்பிரான் – பழமையாகிய தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானது, புவி ஆழி அஞ்ச - பூமிக்கு (ஆடையாகிய) கடல் அஞ்சும்படி, புகல் – புகுதலை யுடைய, உம்பர் அம்பரம் போல் - ஆகாயத்தின் ஆடைபோல, வீழ் அருவி புனல்படிவார் - விழுகின்ற அருவித் தீர்த்தத்தில் முழுகுகின்றவர்கள், புகலும்-விரும்புகின்ற, பரம்பர வீடுஎய்தி- மிகமேலாகிய மோட்சத்தையடைந்து, எப்போதைக்குமே வாழ்வர் - எக்காலத்திலுமே வாழ்ந்து கொண்டிருப்பர் (எ–று).

புகல் - தஞ்சம், சொல், புகுதல், விரும்புதல் (புறநானூறு) மகிழ்தல் (சீவகசிந்தாமணி)

பரம்பரம் – பழமை, மேலினுமேல். உம்மை பிரித்துக் கூட்டுக.

போதக மஞ்சன காதியர்க் கோதிய புங்கவன்கார்ப்
போதக மஞ்சன கண்டத்த னண்டத்தன் பொற்பனைக்கைப்
போதக மஞ்சன மாட்டுகுற் றாலப் புனிதன்மனப்
போதக மஞ்சனம் போலிருப் பானருட் போதகர்க்கே. (33)

(இ–ள்) போதகம் - ஞானத்தை, அம்சனக ஆதியர்க்கு - அழகிய சனகர் முதலாகிய இருடிகளுக்கு, ஓதிய - உபதேசித்த, புங்கவன் - மேலோன், கார்போது அகம் மஞ்சு அன கண்டத்தன் – கார்காலத்து (நீருண்) மேகத்தை ஒத்த கழுத்தையுமுடையவன், அண்டத்தன் - எல்லா அண்டங்களுக்குந் தலைவன், பொற்பனைகை - பொன் பனைபோன்ற கையையுடைய, போதகம் - ஓர் யானையானது, மஞ்சனம் ஆட்டுகுற்றாலப்புனிதன் - திருமஞ்சனத்தை அபிடேகித்த குற்றாலத்திலெழுந்தருளியிருந்த பரிசுத்தமானவன், அருட்போதகர்க்கு - தனது அருளையடையும்படியான ஞானிகளுக்கு, மனம் போது அகம் - இருதய தாமரையின் உள்ளே, மஞ்சு அனம் போல் இருப்பான் – அழகிய அன்னம் போல வீற்றிருந்தருள்வான். (எ–று).

சனகாதியர், சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனு தனர். யானை பூசித்தது முன் கூறப்பட்டது.

தகவடி யாய்முடி யாயதேண் ணுய்சண்ப காடவிப்போ
தகவடி யாயிழை பாகவேன்ணுய் சைவ சாதனவித்
தகவடி யாருடன் போற்ருய்குற் ருலத்தன் ருள்பரவா
தகவடி யாயநேஞ் சேநம ஞர்க்கேன்னதான் செய்வையே. (34)

(இ-ள்) குற்ருலத்தன் தாள்பரவாத கவடி ஆய நெஞ்சே - திருக்குற்ருலநாதனுடைய திருவடிகளைத் துதியாத வஞ்சகத்தையுடைய மனமே, தக - தகுதியாக, அடியாய் முடி ஆயது எண்ணுய் - ஆதியும் அந்தமுமாகிய (சிவம்) என்பதை ஆராய மாட்டாய், சண்பக அடவி போதகவடி ஆயிழைபாக என்னுய் - சண்பக வனத்தி லெழுந்தருளிய ஞான சொரூபியே! இழைக்கப் பெற்ற ஆபரணத்தை யணிந்த உமாதேவி பாகனே யென்று துதியாய், சைவசாதன வித்தக அடியாருடன் போற்ருய் - விபூதி ருத்திராக்கம் புனைந்த திறமைப் பாட்டையுடைய அடியாரோடு போய் வணங்கமாட்டாய், நமனுர்க்கு - (பின்பு துன்பஞ் செய்கின்ற) யமனுரிடத்தில், என்னதான் செய்வையே - என்ன செய்யப்போகின்ருயோ. (எ-று).

சண்பக + அடவி = சண்பகாடவி, வடமொழிச் சந்தி.
சைவ சாதனம் — விபூதி ருத்திராக்கம்.

செய்ய வனந்தனில் வெய்யவர் போல்பவன் செய்யவர்க்குச்
செய்ய வனந்த மறைப்பொரு ளான்செய்ய தாமரைமேற்
செய்ய வனந்தங்கு நன்னகர்க் கூத்தனைச் சேவைதுதி
செய்ய வனந்தம் விழிநாவந் தோவயன் செய்திலனே. (35)

(இ-ள்) செய்யவனம் தனில் - சிவந்த நிறத்திலே, வெய்யவர்போல் பவன் - அநேக சூரியரை ஒப்பவனும், செய்யவர்க்குச் செய்யவன் — செம்மையான ஒழுக்கமுடையவர்களுக்கு நேரான நல்லோனும், மறை அந்தம் பொருளான் - வேதாந்தப் பொருளா யுள்ளவனுமாகிய, செய்யதாமரைமேல் - செந்தாமரை மலரில், செய்ய - வயல்களினிடத்துள்ள, அனம் தங்கும் அன-

ளங்கள் தங்கியிருக்கின்ற, நன்னகர்க்கூத்தன் - குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற கூத்தன் என்னும் பெருமானை, சேவைதுதிசெய்ய - தரிசிக்கவும் துதிக்கவும், அனந்தம் விழிநா- அளவில்லாத கண்களையும் நாவுகளையும், அந்தோ — ஐயோ, அயன் செய்திலனே – பிரமன் படைத்தானில்லையே (எ–று)

குற்றாலநாதனுக்குக் கூத்தனென்பதும் ஒரு பெயர்.
"குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்" (தேவாரம்)
"குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா" (திருவாசகம்)
சேவை செய்ய விழி, துதி செய்ய நா எனக்கூட்டுக.
இது நிரனிறை.

இலங்கைக்கு மன்பொரு ளென்றென்றும் வாஞ்சிக்கு மில்லறத்தீர்
இலங்கைக்கு மன்மத் துறவறத் தீரிடத் தாள்விரலால்
இலங்கைக்கு மன்னை யிறுத்தகுற் றாலத் திறையை யுள்ளே
இலங்கைக்கு மன்ன விருத்தீ ரிடும்பை யிராவணமே. (36)

(இ–ள்) கைக்கு மன்பொருள் இலம்என்று என்றும்வாஞ் சிக்கும் இல் அறத்தீர் - கையிலே மிகுந்த செல்வம் இல்லோம் என்று சொல்லி எப்பொழுதும் (பொருளையே) விரும்புகின்ற இல்லற வாழ்வை யுடையவர்களே, இலம் கைக்கும் மன்மத்துற வறத்தீர் - இல்வாழ்வை வெறுக்கின்ற மர்மத்தையுடைய துறவற முடையவர்களே, இடந்தாள் விரலால் - இடதுகால் விரலினாலே, இலங்கைக்கு மன்னை - இலங்கைக்கு மன்னனாகிய இராவணனை, இறுத்த - அழுத்தி வருந்தச் செய்த, குற்றாலத்து இறையை - திருக்குற்றாலத்தி லெழுந்தருளியிருக்கிற தலைவனை, இடும்பை இராவணம் - துன்பம் வராதபடி, உள்ளே - மனதினிடத்தே, இலங்கைக்கு - விளங்குதற்கு, மன்ன - நிலைபெற, இருத்தீர் - இருத்துங்கள். (எ–று)

இரா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

வணங்கா தரம்புரி யீர்திரிகூட வரதர் சங்கா
வணங்கா தரவொலி கேட்கநிற் பீர்நும் மறுபிறப்பு
வணங்கா தரவொப்ப மாயுங்கண் டீர்முன் வணங்கியிந்த
வணங்கா தரமொழித் தார்பண்டு தானவர் வானவரே. (37)

(இ-ள்) திரிகூட வரதர் - திரிகூடாசலத்தி லெழுந்தருளி யிருக்கின்ற வரதருடைய, சங்கு ஆவணம் - சங்கவீதியிலே, காது அர ஒலி கேட்க நிற்பீர் — காதில் அரகர சப்தம் கேட்கும்படியாக நில்லுங்கள், வணங்க ஆதரம் புரியீர் - (அவரை) வணக்கஞ் செய்தற்குரிய அன்புகொள்ளுங்கள், (அங்ஙனம் செய்யின்) நும் மறுபிறப்பு - உங்களுடைய அடுத்த பிறவி, உவணம் காது அரவொப்பமாயும் - கருடனால் மோதப்பட்ட சர்ப்பம் (மாய்வதைப்) போல மாய்ந்துவிடும், பண்டுதானவர் வானவர் - முற்காலத்தில் அசுரர்களும் தேவர்களும், இந்தவணம் முன் வணங்கியே — இந்தவிதமாகத் திரிகூடநாதர் சந்நிதானத்தில் வணக்கஞ்செய்தே, காதரம் — (தங்கள்) துன்பத்தை, ஒழித்தார் - நீக்கிக்கொண்டார்கள். (எ-று)

கண்டீர், — முன்னிலையசை.

வான வரம்பன் வழுதிகொண்டாடும் வடிதமிழான்
வான வரம்பரஞ் சூழ்திரி கூடத்தில் வல்லை சென்றுன்
வான வரம்பயில் கண்ணியை மீட்பன் வருந்தலன்னே
வான வரம்பள வோரடி யாமையர் மால்விடைக்கே. (38)

(இ-ள்) வானவரம்பன் வழுதி கொண்டாடும் வடிதமிழான் — சேரனும் பாண்டியனும் பாராட்டுகின்ற தெள்ளிய தமிழையுடைய குற்றாலநாதனுடைய, வானவர் அம்பரம் சூழ் திரிகூடத்தில் — தேவர்கள் ஆகாயத்தில் சூழ்கின்ற திரிகூட மலையில், வல்லைசென்று - விரைவாகப்போய், வான அரம்பயில் கண்ணியை - பெரிய அரத்தை ஒத்த கண்ணை யுடையவளாகிய (நின்மகளை) மீட்பன் - திரும்ப வரச்செய்வேன், அன்னே - தாயே, வருந்தல் - வருந்தாதே, ஐயர்மால்விடைக்கு — நாம் வணங்குங் கடவுளாகிய குற்றாலநாதருடைய திருமாலாகிய இடபத்திற்கு, வானவரம்பு அளவு - ஆகாய எல்லையினளவு, ஓரடியாம் - ஓரடி அளவுள்ளதேயாகும். (எ-று)

வான் - பெருமை, வான-பெருமையையுடைய, பெரிய கண் எனக்கூட்டுக. தடங்கண் என்றதுபோல.

ஐயர் விடைக்கு உலகெல்லாம் ஓரடியளவாகிய எளிமையை யுடையது, அவரடியாராகிய நமக்கு ஆற்ற எளிதாம் என்றது. இவ்வுலகு முழுவதும் தேடிவருவேன்; அஃது எளியதொரு செயலென்று குறிப்பித்தபடி.

மாலைய னங்கத மாலைய னன்னகர் வாசன் கொன்றை
மாலைய னங்கனை பாகன் வரானடை வாது கொண்டேன்
மாலைய னங்கழ ருதுநல் லீர்குழல் வன்மத்தினுல்
மாலைய னங்கனைப் போர்க்கோலஞ் செய்தது வந்துவந்தே (39)

(இ-ள்) மால் அயன் - திருமாலும் பிரமனுமானவனும், அங்கதமாலையன் - பாம்பை மாலையாகவுடையவனும், நன்னகர் வாசன் - குற்ருலத்தில் வசிப்பவனும், கொன்றை மாலையன் - கொன்றை மாலையை யணிந்தவனும், அங்கனைபாகன் – உமா தேவியைப் பாகத்திலுடையவனுமாகிய சிவபெருமான், வரான் - வரக்காணேன், நல்லீர் - பெண்களே, என்மாலை - எனது மயக்கத்தை, அனம் நடைவாது கொண்டு கழருது - (தூது சொல்லக்கூடிய) அன்னமானது நடையின் வந்த பகைமையினுல் (அவனிடம் போய்ச்) சொல்லாது, மாலை - இரவானது, குழல் வன்மத்தினுல் - கூந்தலின் வந்த பகையினுல், வந்து உவந்து - வந்து மகிழ்ச்சிகொண்டு, அனங்கனை – மன்மதனை, போர்க்கோலம் செய்தது - யுத்த சந்நத்தன் ஆக்கிவிட்டது. (எ-று).

அந்+அங்கன் — அநங்கன். அங்கமில்லாதவன்.

"அ அந்நி குவி வருமொழிப் பொருளை, யின்மை பிறிது மறையினுளொன்ருக்கும்". (இலக்கணக்கொத்து)

வந்தனை யார்வரி னும்புரி யேனை மறமலிபா
வந்தனை யார்வழி நீங்கேனைத் தீங்கில் வருபொருட்டா
வந்தனை யார்வதில் வாஞ்சைவி டேனைமண் மேற்புரக்க
வந்தனை யார்வமேன் சொல்கேன் குற்ருல மகாலிங்கமே. (40)

(இ-ள்) குற்ருல மகாலிங்கமே—திருக்குற்ருலத்தில் எழுந்தருளுயிருக்கின்ற சிவலிங்கப்பெருமானே, யார்வரினும் வந்தனை புரியேனை - யார்வந்தாலும் வழிபாடு செய்யாதேனை, மறம் மலி

பாவந்தனை ஆர்வழி நீங்கேனை - கோபத்தால் மிகுகின்ற பாவத்தைப் பொருந்துகின்ற நெறியை நீங்காதேனை, தீங்கில் வரு பொருள் தாவம் - தீய நெறியிலே வருகின்ற பொருளின் தாவம், தனை ஆர்வதில்-என்னை வந்து நிறைவதில், வாஞ்சை விடேனை - ஆசை நீங்காத என்னையும், மண்மேல் — இந்தப் பூமியிலே புரக்கவந்தனை - காப்பாற்றுவதற்காக எழுந்தருளினை, ஆர்வம் - உனது திருவருளை, என் சொல்கேன் - என்னதான் சொல்லித் துதிப்பேன். (எ—று).

மகரத் தகரக் குழலார் முயக்கின் மயங்கிமன
மகரத் தகரத் தழியார்க் கெளிதுமன் வள்ளற்பிரான்
மகரத் தகரக் குழையா னுலகமும் வானும் பிதா
மகரத் தகரமும் வெட்குங்குற் ருலப்பொன் மாநகரே. (41)

(இ—ள்) வள்ளற்பிரான்-கருணை வள்ளலாகிய சிவபிரானது, உலகமும் - சிவலோகமும், மகரத்தகரம் குழையான் உலகமும் - மகரவடிவாகிய ஒளிபொருந்திய குண்டலத்தையுடைய திருமால் உலகமாகிய வைகுண்டமும், வானும் - தேவலோகமும், பிதா மகர் அத்து அகரமும் - பிரமாவினுடைய செம்மையாகிய சத்திய லோகமும், வெட்கும் - வெட்கும்படியான, குற்ருலப் பொன்மா நகர் - குற்ருலமாகிய பொன் நிறைந்த பெரிய நகரமானது, மகரத் தகரக் குழலார் முயக்கின் - பூந்தாதும் மயிர்ச்சாந்தும் பொருந்திய கூந்தலையுடைய பெண்களோடு சேர்வதிலே, மனமயங்கி — மனமயக்கமுற்று, மகரம் தகரத்து அழியார்க்கு - மதத்தாலே கெடாதவர்களுக்கு, மன் எளிது - உறுதியாக (அடைவதற்கு) எளிதாகும் (எ—று).

உலகம் என்பதை யிரண்டிடத்துங் கூட்டுக. மகரம் தகரம் என்பவற்றிலுள்ள கரம் என்பன எழுத்தின் சாரியைகள்.

மானத் தரங்க மிசைச்சு லுளைந்து மதியுடுக்கண்
மானத் தரங்களி லாணிமுத் தீனும் வரநதிச
மானத் தரங்க மதுகங்கை யான்மறை பாடச்சித்ர
மானத் தரங்க நடிப்பானென் சிந்தையுள் வாழ்பவனே. (42)

(இ—ள்) மால்நத்து அரங்கமிசை - பெரிய சங்கங்கள் ஆற்றிடைக் குறைகளிலே, சூல் உளைந்து - கர்ப்பத்திஞல் வருந்தி, மதி உடுக்கள் மான - சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் ஒப்ப, தரங்களில் — தகுதி தகுதிகளாக, ஆணிமுத்து ஈனும் — வயிர முத்துக்களைப் பெறுகின்ற, வரநதி சமான - கங்கையை ஒத்த, தரங்கம் மது கங்கையான் - அலைகளையுடைய சிவமது கங்கையையுடையவஞகிய, மறை பாட சித்ர மானத்து அரங்கம் நடிப்பான் ஏ - வேதங்கள் முழங்கச் சித்திரம் எழுதிய விமானத்தையுடைய சபையிலே நடனஞ் செய்கின்ற சிவபெருமானே, என் சிந்தையுள் வாழ்பவன் — எனது மனத்தினுள்ளே வாழ்கின்றவன் (எ—று).

பவஞ சனம்புனை வேணிப் பிரான்பன்றி யாய்நிலங்கீழ்
பவஞ சனம்புறந் தேடநின் ருன்றவப் பார்கும்போற்
பவஞ சனம்புரிந் தேத்துகுற் ருலத்தன் பாதமென்றும்
பவஞ சனம்பு மனமே யனுதினம் பத்திவைத்தே. (43)

(இ—ள்) மனமே; பவஞசனம்புனை வேணிப் பிரான் - சர்ப்பத்தை அணிந்த சடையையுடைய பெருமானும், பன்றியாய் நிலம் கீழ்பவன் - பன்றி வடிவாகிப் பூமியைத்தோண்டிய திருமாலும், ஆசு அனம் - குற்றத்தையுடைய அன்னவடிவாகிய பிரமனும், புறம் தேட நின்ருன் - வெளியிலே தேடும்படியாக (சோதியாக) நின்றவனும், தவப்பார் கும்போற்பவன் — தவப் பெருமையுடைய அகத்திய முனிவன், ஆசனம் புரிந்து ஏத்தும் - சடுத்தாசனஞ் செய்து (பூசித்துத்) துதிக்கின்ற, குற்ருலத்தன் — குற்ருலத்தில் எழுந்தருளியிருக்கின்றவனுமாகிய சிவ பெருமானுடைய, பாதம் — திருவடிகள், என்றும் பவஞசம் — எப்பொழுதும் பிறவியை அழிப்பதற்குக் காரணமான, அநுதினம் - தினந்தோறும், பத்தி வைத்து நம்பு - அன்பு வைத்து நம்புவாயாக (எ—று).

பவன + அசனம் - காற்றை உணவாகக் கொள்வது - பாம்பு, பவஞசனம், கும்போற்பவன் - வடமொழிச்சந்திகள், ஆசனம் -

சடுத்தாசனம் அல்லது சலாசனம் என்பது சிவபூசையில் சுவாமியை யெழுந்தருளச் செய்கிறது. "சலாசனமனந்தருந் தன் மாதியொரு நான்கும், நலா ரெண்ணுமம் புயமு நாடு" (சைவ சமய நெறி 513). அகத்தியர் மகுடாகம விதிப்படி பூசை செய்தாராகலின் ஆசனம் புரிந்தேத்தும் என்றார். பொய் சொன்ன குற்றமுடையதனால் ஆசு அனம் எனப் பட்டது.

பத்தினி யாயக் கலைகவர்ந் தாய்பணி வார்க்குயர்சம்
பத்தினி யாய பதாம்புயத் தாய்வரைப் பன்னிவிருப்
பத்தினி யாய மலாதிரி கூடப் பரமவென்றே
பத்தினி யாயங்க ளாய்ப்பாடி யாடிப் பரவுதுமே. (44)

(இ-ள்) பத்தினி ஆயம் கலைகவர்ந்தாய் - தாருகாவன முனி பத்தினியர் புடைவைகளை (கங்காள வேடம் பூண்டு பலிக்குப் போய்) நழுவிடச் செய்தவனே, பணிவார்க்கு - வணங்குகின்ற தொண்டர்களுக்கு, உயர் சம்பத்து இனி ஆய - உயர்வாகிய செல்வப்பேறு இப்பொழுதேயாகிய, பத அம்புயத்தாய் - பாத தாமரையை உடையவனே, வரைப் பன்னி விருப்பத்து இனியாய் - இமயமலையின் புத்திரியாகிய உமாதேவியினது வேட்கைக்கு இனிமையானவனே, அமலா - நின் மல மானவனே, திரிகூடப்பரம என்றே - திரிகூடத்தில் எழுந்தருளியிருக்கின்ற பரமா எனத்துதித்தே, பத்தி நியாயங்களாய் பாடி ஆடி பரவுதுமே - பத்தி முறைகளாகப் பாடியும் ஆனந்தக் கூத்தாடியும் துதி செய்வோமாக (எ-று),

சிவபெருமானை அடையும் மார்க்கம் இரண்டாம். விதி மார்க்கம் பக்தி மார்க்கம் என்பன. விதி மார்க்கத்தின் ஒழுகுதற்கு வலிமையில்லை. பக்தி மார்க்கத்தினாலாவது கதியடைவோம் என்று மனதை நோக்கிக் கூறியவாறும். பதாம்புயம் - வடமொழிச்சந்தி. இனி இப்பொழுதே.

பரவை யகத்துக் கிடந்தானுந் தூதொரு பாவலற்காப்
பரவை யகத்து நடந்தானு மண்டபம் பலபடைத்தும்
பரவை யகத்து வீருந்தானுந் தேரேனப் பாய்திரையம்
பரவை யகத்துழி நின்றானு நன்னகர்ப் பண்ணவனே. (45)

(இ-ள்) பரவை அகத்து கிடந்தானும் - (திருப்பாற்) கடலிலே பள்ளி கொண்ட திருமாலும், ஒரு பாவலற்கா - ஒரு பாவலனுக்காக (சுந்தரமூர்த்தி சுவாமிகள்), பரவை அகத்து தூது நடந்தானும் - (திருவாரூரில்) பரவை நாச்சியாருடைய வீட்டுக்குத் தூது நடந்தவனும், பல அண்டம் படைத்தும் பரவு ஐ அகத்துள் இருந்தானும் - பல அண்டங்களைச் சிருட்டித்தும் துதி செய்கிறவருடைய அழகிய மனதிலே யிருந்தவனும், தேர் என - ரதமாக, பாய்திரை அம்பர வையகத்துழி நின்றானும் - தாவுகின்ற அலைகளையுடைய கடலாகிய ஆடை பொருந்திய பூமியிலே நின்றவனும், நன்னகர் பண்ணவனே - திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளே யாவன் (எ-று).

பண்ண வனந்தம் பரிசம்பு சாலத்தன் பாடலுமை
பண்ண வனந்தந் தருணடத் தான்றவப் பாரகும்பப்
பண்ண வனந்தரங் கப்பெரு மானங்கம் பாவையுருப்
பண்ண வனந்தணன் வாழ்கோயில் வேதப் பலாநிழலே. (46)

(இ-ள்) பண்ண - சேனத்தையுடைய, அனந்தம் பரி - அளவில்லாத குதிரைகளாக்கிய, சம்பு சாலத்தன் - நரிக்கூட்டங்களையுடையவன், பாடலுமை பண்ண வனம் தந்தருள் நடத்தான் - பாடலுக்குரிய உமாதேவியார் இராகத்தோடு கூடிய வர்னங்களைப் பாடும் நடனத்தை யுடையவன், தவப்பாரகும்பப் பண்ணவன் அந்தரங்க பெருமான் - தவப்பெருமையுடைய அகத்திய முனிவருக்கு ரகசியமாக அருள்செய்த பெருமானும், அங்கம் பாவை உரு பண் அவன் அந்தணன் - எலும்பைப் பெண்ணுருவமாகச் செய்த திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் தண்ணளி புரிதற்குக் காரணமான வேதியனாகிய திருக்குற்றாலநாதன், வாழ்கோயில் - தங்கியிருக்கின்ற கோயில், வேதப் பலா நிழலே - வேத வடிவமாகிய குறும்பலா மரத்தின் நிழலே யாகும் (எ-று).

பலவிருந் தாமத் தளவார் விரகப் பரவைபுக்கீர்
பலவிருந் தாவிக் கரைபுக வேண்டிற் பவனத்தும்பர்
பலவிருந் தாடி மணமாடுஞ் சண்பகப் பைம்பொழில்வாய்ப்
பலவிருந் தானொரு வன்னிரு தாட்புணை பற்றுகவே. (47)

(இ-ள்) பல் அவிரும் தாமம் தளவார் - பற்கள் பிரகாசிக்கின்ற முல்லை யரும்பு போன்றவருடைய, விரகம் பரவை புக்கீர் பலவிரும் - காமக் கடலிலே அமிழ்ந்த நீவிர் எல்லாம், தாவிகரை புக வேண்டின் - அக்கடலினின்றும் தாவிக் கரையை அடைய வேண்டுமானால், பவனத்து உம்பர் பலம் விருந்து ஆடி மணம் ஆடும் - சுவர்க்க லோகத்திலுள்ள தேவர்கள் பழங்களாகிய விருந்தைக் களித்து வாசனையில் மூழ்கியிருக்கின்ற, சண்பகப்பைம் பொழில்வாய் - பசுமையாகிய சண்பகச் சோலையிலே, பலவு இருந்தான் ஒருவன் இருதாள் புணை பற்றுக - குறும்பலா வடியில் எழுந்தருளிய சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளாகிய புணையைப் பற்றுங்கள் (எ-று).

உகந்த வளைக்குல முத்தீனும் வாவியி லோங்குபங்கே(ர்)
உகந்த வளைக்கு மதுவீனு நன்னகர் யோகியைக்கண்(ட்)
உகந்த வளைக்குழை மாதரெல்லாம் பெரிதோ கைபெற்றார்
உகந்த வளைக்குலங் கைசோரச் சோருமென் னோவியமே. (48)

(இ-ள்) உகந்த - விரும்பப்பட்ட, குலமுத்து வளை ஈனும் - உயர்ந்த முத்துக்களைச்சங்கங்கள் ஈனுகின்ற, வாவியில் - தடாகத்தில், ஓங்கு பங்கேருகம் தவளைக்கு மது ஈனும் - உயர்ந்த தாமரைகள் தவளைகளுக்குத் தேனைச்சொரிகின்ற, நன்னகர் யோகியைக் கண்டு — திருக்குற்றாலப் பெருமானைப் பார்த்து, கந்தம் வளை குழை மாதர் எல்லாம் - வாசனை பொருந்திய வள்ளைக் கொடிபோன்ற காதையுடைய பெண்கள் எல்லோரும், பெரிது ஓகைபெற்றார் — மிகவும் சந்தோஷத்தை அடைந்தார்கள், என் ஓவியம் — என்னுடைய பாவைபோல்வாளாகிய பெண்ணானவள், உகு அந்த வளை குலம் கைசோர - கையினின்று கழன்ற அழகிய வளையற் கூட்டங்கள் சோர்ந்து போக, சோரும் — சோர்ந்து விடுகின்றாள் (எ-று)

*சோர்தல் — வாடுதல், இவளுக்கும் அருள் செய்ய வேண்டுமென்பது குறிப்பு. இது தோழி கூற்று. ஓவியம் — உவமையாகுபெயர். அந்தம் - அழகு, "அந்தமே அழகேறென்ப" (சூடாமணி நிகண்டு.)*

**வியந்திருப் பாவந் தருமமேண் ணார்செல்வ மீறிற்றமை**
**வியந்திருப் பார்கெடிற் றெய்வமேன் பார்சங்க வீதியன்கா**
**வியந்திருப் பார்வைதன் பாகமுன் னாரவன் மீது சொல்கா**
**வியந்திருப் பாருருப் போலிருப் பார்சன்மம் வீண்சன்மமே. (49)**

*(இ-ள்) வியம் திரு பாவம் தருமம் எண்ணார் - பெருமையும் செல்வமும் பாவமும் தருமமுமாகிய இவைகளை நினைக்க மாட்டார்கள், செல்வம் மீறில் – செல்வம் அதிகரித்தால், தம்மை வியந்திருப்பார் - தம் வலிமையையே வியந்து கொண்டிருப்பார்கள், கெடில் - செல்வக்குறைவு வருமாயின், தெய்வம் என்பார் - தெய்வத்தாலெய்தியது என்பார், சங்க வீதியன் காவி அம் திருப்பார்வைதன் பாகம் உன்னார் - சங்க வீதியையுடையவராகிய குற்றாலநாதரையும் நீலோர்ப்பல மலர் போன்ற அழகிய கண்களையுடைய உமாதேவியாரெழுந்தருளியிருக்கும் வாம பாகத்தையும் நினையார், அவன் மீது சொல் காவியம் திருப்பார் – அந்தச் சிவபெருமான்மேல் சொல்லியிருக்கும் காவியங்களைத் திருப்பியும் பாரார், உருப்போலிருப்பார் – பண்ணிய உருவம்போல இருப்பார்கள், சென்மம் - அவர்களுடைய பிறப்பானது, வீண் சென்மமே - பயனற்ற பிறப்பேயாகும் (எ–று).*

மேவல ரங்க மணிவார்குற் றாலர் மிகுங்கொடைக்கு
மேவல ரங்கலர்த் தாமமொன் றீகலர் மெல்லணைமேல்
மேவல ரங்கச பாணமொப் பானது வீசுதென்றல்
மேவல ரங்கவன் போர்க்கள மானதேன் மின்கொடிக்கே. (50)

*(இ-ள்) மேவலர் அங்கம் அணிவார் - பணியாதவராகிய பிரமவிட்டுணுக்களுடைய எலும்பை அணிந்துகொள்வார், குற்றாலர் - திருக்குற்றாலத் தலைவர், மிகும் கொடைக்குமே வலர் - மிகுந்த கொடைக்குமே வல்லவர், அங்கு அலர் தாமம் ஒன்று*

சகலர் - அவ்விடத்திலுள்ள கொன்றைப்பூமாலை ஒன்றையேனும் கொடுக்கிருரில்லை, மெல்லணைமேல் மேவு அவர் அங்கசபாணம் ஒப்பானது — மெல்லிய சயனத்திலே பொருந்திய புஷ்பங்கள் மன்மத பாணத்துக்குச் சமானமாயிருக்கிறது, வீசுதென்றல் மேவல் அரங்கு, வீசுகின்ற தென்றல் அதிகரித்து விளங்குகின்ற அரங்கு, என் மின் கொடிக்கு - என்னுடைய மின்போல்வாளாகிய பெண்ணுக்கு, அவன் போர்க்களமானது - அவனுடைய யுத்தகளம் ஆயிற்று. (எ—று)

மேவல் - அதிகரித்தல்.

**கோடியா ரிடபமுங் கைம்மான் மழுவுங் குலவிமயக்**
**கோடியா ரிடமுங் கொடுதோன்றி யென்னைக்குற் ருலப்பிரான்**
**கோடியா ரிடம்புக் குழலாது காப்பது கூர்கருணை**
**கோடியா ரிடருந் தவிர்ப்பா னவன்புகழ் கூறுகவே. (51)**

(இ—ள்) குற்ருலப்பிரான் — திருக்குற்ருலத்தில் எழுந்தருளிய சிவபெருமான், கொடி ஆர் இடபமும் - கொடியிலே பொருந்திய இடபமும், கை மான் மழுவும் — கையில் ஏந்திய மானும் மழுவும், குலவு இமயம் கொடியார் இடமும் கொடு தோன்றி - விளங்குகின்ற இமயமலை மகளாகிய உமாதேவி தங்கிய இடப்பாகத்தையுங் கொண்டு பிரசன்னமாய், என்னை - அடியேனை, கொடியார் இடம்புக்கு உழலாது - கொடியவர்களிடம் அடைந்து வருந்தாமல், காப்பது - காப்பாற்றுவது, கூர்கருணை கொடு - மிகுந்த கிருபையைக் கொண்டு, இயாரிடரும் - யாவருடைய இடையூறுகளையும், தவிர்ப்பான்-நீக்குவான், (ஆகையால்) அவன் புகழ் கூறுக — அவனுடைய புகழையே கூறித்துதிப்பீர்களாக (எ—று).

குற்ருலப்பிரான் தோன்றி, கொண்டு, யாரிடருந்தீர்ப்பான் என முடிக்க. இது உலகத்தாரை நோக்கிக் கூறியது. கொடு - கொண்டு என்பதனிடைக்குறை.

வேத வனத்தன் குறும்பல வீச்சுரன் விண்டுவெஞ்சு
வேத வனத்தனு மாகநின் றான்வெண் ணிலாப்புரைய
வேத வனத்தம் புனைகுழை யானருண் மெய்யைவிட
வேத வனத்தந் தகன்பொரு நாட்டுணை வேறிலையே (52)

*(இ-ள்) வேதவனத்தன் — திருமறைக் காட்டையுடைய வனும், குறும்பலவு ஈச்சுரன் — குறும்பலவில் எழுந்தருளிய கடவுளும், விண்டுவும் சுவேத அனத்தனும் ஆக நின்றான் - திருமாலாகவும் வெண்மையாகிய அன்னவாகனத்தையுடைய பிரமனாகவும் முன்னிருந்தவனும், வெள் நிலா புரைய - வெள்ளிய சந்திரனை யொப்ப, வேத - தரிக்கப்பட்ட, அநத்தம் புனை குழையான் - அந்தச் சங்கக்குண்டலத்தை அணிந்தவனுமாகிய சிவபெருமானது, அருள் மெய்யைவிட - அருளாகிய உண்மையைப் பார்க்கிலும், வேதவனத்து அந்தகன் பொருநாள் — வேகின்ற வெப்பத்தையுடைய யமன் வருத்துகின்ற காலத்தில், வேறு துணை இல்லை - வேறு துணையாதுமில்லை (எ—று).*

*பலா, பலவு "குறிய தன் கீழ் ஆக்குறுகலும் அதனோடு கர மேற்றலும்" (நன்னூல். கஎஉ)வேதல் — வேய்தல், தரித்தல்.*

இலையா யினுந்தந்தி செய்கையுன் னேன்மண்ணி லெத்திசைக்கோ
இலையா யினுஞ்சங்கக் கோயிலெண் ணேனெழிற் பாதலவாய்
இலையா யினுநினை யேன்வினை யேனினி யென்செயல் வே(று)
இலையா யினுமினி யாய்தனி யேனைவந் தேற்றருளே. (53)

*(இ-ள்) வினையேன் - வினைகளையுடையவனாகிய அடியேன் இலை ஆயினும் — இலைகளைப் பறித்தாலும், தந்தி செய்கை உன்னேன் - யானையின் செய்கையை நினைக்க மாட்டேன், மண்ணில் — பூமியிலுள்ள, எத்திசை கோயிலை ஆயினும் - எத்திசைக்கோயிலைப்பற்றி ஆராய்ந்தாலும், சங்கக்கோயில் எண்ணேன் - சங்கக்கோயிலைப் பற்றி ஆராய்ச்சி செய்யமாட்டேன், எழில் பாதல வாயிலை யாயினும் - அழகிய பாதல வாயிலையாவது தியானி*

யேன், இனி என்செயல் வேறிலை-இனிமேல் அடியேன் செய்யத் தக்க செய்கை யாதும் இல்லை, ஆயினும் இனியாய் - தாயினும் இனிமையானவனே, தனியேனை - வேறு துணையின்றி வருந்து கின்றவனாகிய அடியேனை, வந்து ஏற்று அருள் - எழுந்தருளி வந்து எடுத்து அருள்புரிவாய். (எ-று)

தந்தத்தை உடையது தந்தி, தந்தி செய்கை-இலைமுதலிய வற்றைப் பறித்து எறிய அதனைப் பூசையாக (அபுத்தி பூர்வசிவ புண்ணியம்) ஏற்றுக்கதி கொடுத்தார் குற்றால நாதரென்பது (கு-புராணம்).

பாதலவாயில்: வாசுகி சித்திரசபை நடன தரிசனம் வேண் டித்தவம்புரிய வந்தவழி. இது திருக்கோயிலின் நான்குவாயில் களோடு ஐந்தாவது வாயிலாகக் கூறப்படும். திருக்குற்றாலப் புராணம் திருநடனச் சருக்கத்திற் காண்க.

ஏற்ற மருந்திய வல்வினைப்போக மிடைக் குறைந்தும்
ஏற்ற மருந்தியு நோயுழந் தீரிவை தீரவுமக்கு
ஏற்ற மருந்தது மாத்திரை யேனுமினிதுட் கொள்வீர்
ஏற்ற மருந்திரி கூடப் பிரான்பொன் னிணையடியே. (54)

(இ-ள்) ஏற்று அமர் உந்திய-எதிர்த்துப்போர் செய்கின்ற, வல்வினைப்போகமிடை — வலிய வினைப்போகத்தில், குறைந்தும் ஏற்றம் அருந்தியும் - குறைவாகவும் அதிகமாகவும் அநுபவித்தும், நோய் உழந்தீர் - துன்பத்தினால் வருந்துகின்றவர் களே, இவை தீர - இத்துன்பங்கள் ஒழிய, உமக்கு ஏற்ற மருந்து - உமக்குத் தக்கமருந்து, ஏற்று அமரும் - இடப வாகனத்தில் எழுந்தருளிய, திரிகூடப்பிரான் - திரிகூடாசலப் பெருமானுடைய, பொன் இணையடியே - பொன் போன்ற இரண்டு திருவடிகளுமே, இது மாத்திரையேனும் - இவ்வள வேனும், (அத்திருவடிகளை) இனிது உட்கொள்வீர் - இனிமை யாக உள்ளே கொள்ளுங்கள். (எ-று.)

வினைப்போகம் வினைக்குத் தக்கபடி மிகுந்தும் குறைந்தும் அநுபவிக்கப் படுவது. போகமிடை - அத்துச்சாரியை பெறாத

7-ம் வேற்றுமை. உட்கொள்ளுதல் – மனதிலே தியானித்தல், மருந்து என்றதற் கேற்ப உட்கொள்வீர் என்ருர். இது மாத்திரை - இம்மாத்திரை. இதுபோது, இப்போது என்பது போல, " இதுபொழுது காத்திலேயேல் எமக்கிறுதி யின்றேயாம் (காஞ்சிப்புராணம்).

அடியன கஞ்சத்தன் காணு முடிமே லருச்சுனன்வில்
அடியன கம்புற மாயெங்கு மான வனுதிப்பலா
அடியன கன்குழல் வாய்மொழி மாதுட னுகவந்தே
அடியன கம்புகுந் தானிருந் தானம்மை யப்பனென்றே. (55)

(இ–ள்) அடியன - தாளையுடையனவாகிய, கஞ்சத்தன்— தாமரை மலரிலிருக்கின்ற பிரமன், காணு முடிமேல் - காணுத சிரசில், அருச்சுனன் வில் அடியன்-அருச்சுனனுல் அடிக்கப்பட்ட வில் அடியை உடையவனும், அகம்புறமாய் எங்கும் ஆனவன் - அகமும் புறமும் ஆகி எங்கும் நிறைந்திருப்பவனும் (சர்வ வியாபகன்) ஆதி பலா அடி - முதன்மையாகிய குறும்பலாவின் கீழிருக்கின்ற, அனகன்-பாவமில்லாதவனுமாகிய குற்ருலநாதன், குழல்வாய்மொழி மாது உடனுக வந்து - குழல்வாய்மொழி யம்மை கூடவர எழுந்தருளி, அடியன் அகம் புகுந்தான் - அடியேனுடைய மனதிலே புகுந்தவனுகி, அம்மை அப்பன் என்றே இருந்தான் - அம்மையும் அப்பனுமாகவே எழுந்தருளி யிருந்தான். (எ–று.)

ஆகையால் எல்லாப்பேறும் பெறுவேனென்று உறுதி கொண்டபடி. எங்குமான அனுதிப் பலா அடி அனகன் - சர்வ வியாபியான ஆதி காணப்படாத பலாவின் கீழிருந்த அனகன். குழல்வாய் மொழி - இதன் வடமொழிப்பெயர் வேணுவாக்வாதி னி. புகுந்தானிருந்தான் - புகுந்திருந்தான். இது முற்றெச்சம்.

அப்பன சத்தி லிருப்பா னறம்பொரு ளாதிகள்வந்து
அப்பன சத்திரஞ் சூழ்திரி கூடத்த னம்பகம்வாள்
அப்பன சத்தி குழல்வாய் மொழிபங்கி லண்ணலெங்கள்
அப்பன சத்தியர்க் கெய்தா னெதிர்நிற்ப னன்பருக்கே. (56)

'(இ-ள்) அப்பனசத்தில் இருப்பான் - அந்தக் குறும்பலாவின் கீழ் எழுந்தருளியிருப்பவன், அறம் பொருள் ஆதிகள் வந்து அப்பு - தருமம் பொருள் முதலியன வந்து சேர்கின்ற, அனசத்திரம் சூழ் திரிகூடத்தன் - அன்ன சத்திரங்கள் சூழ்ந்த திரிகூடத்தை யுடையவன், வாள் அப்பு அன அம்பகம் - வாளையும் அம்பையும் ஒத்த கண்களையுடைய, சத்தி குழல்வாய்மொழி மொழி பங்கில் அண்ணல் - சத்தியாகிய குழல்வாய்மொழி யம்மையைப் பாகத்தில் வைத்திருக்கின்ற தலைவன், எங்கள் அப்பன் - எங்கள் தந்தைபோல்வான், அசத்தியற்கு எய்தான் - சத்தியம் இல்லாதவரிடத்தில் - அடையமாட்டான், அன்பருக்கு எதிர் நிற்பான் - அவர்களுக்கு முன் நிற்பான். (எ-று.)

அப்பு - வலித்தல் விகாரம், நான்காவது அடி.

"நெக்கு, நெக்கு நினைபவர் நெஞ்சுளே. புக்கு நிற்கும் பொனார் சடைப்புண்ணியன், பொக்க மிக்கவர் பூவுநீருங்கண்டு, நக்கு நிற்பனவர் தமை நாணியே" என்னும் தேவாரத்தின் பொருள்.

பருவந்த வாரணம் பூசித்த வாசண் பகவனத்தும்
பருவந்த வாசக் குறும்பல வாநின் பவனிகண்ட
பருவந்த வாமங்கை கொங்கையெல் லாமதன் பாணம்பட்டுப்
பருவந்த வாவென்கொ வாமெந்தை நீமுன்பு பார்த்ததுவே. (57)

(இ-ள்) பருவந்த - துன்பப்பட்ட, வாரணம் பூசித்தவா - யானையாற் பூசை செய்யப்பட்டவனே, சண்பகவனத்து உம்பர் உவந்த வாசம் குறும்பலவா - சண்பகவனத்திலே தேவர்கள் விரும்பியவாசம் பொருந்திய குறும்பலவில் எழுந்தருளியவனே, நின்பவனி கண்ட,பருவம் தவாமங்கை - உன்னுடைய திருவுலாவைத் தரிசித்த பருவம் நீங்காத பெண்ணினது, கொங்கையெல்லாம் - தனங்கள் முழுவதும், மதன் பாணம் பட்டு - மன்மதனுடைய பாணங்கள் தைத்து, பருவந்தவா - சிலந்தி வந்தது என்ன ஆச்சரியம்? எந்தை - என் தந்தையே, நீ முன்பு பார்த்ததுவே - நீ முன்னாலே பார்த்து எரித்த செயல், என் கொலாம் - என்னாயிற்று? (எ-று).

வந்தவாறு என்பது வந்தவா எனக்கடை குறைந்து நின்றது.

பாரிட மேவிய பல்படை யாய்வளி பாணியங்கி
பாரிட மேவிரி வாய்ப்படைத் தாய்மலர்ப் பாதநினைப்
பாரிட மேவிளை யாட்டாய்குற் ருலப் பரமவேனைப்
பாரிட மேவிய தேவிபங் காநின் பரமெனக்கே. (58)

*(இ—ள்) பாரிடம் - பூதங்களை, ஏவிய் பல் படையாய் - ஏவப்பட்ட பல படையாகவுடையவனே, வளி பாணி அங்கி பார் இடம் - காற்றையும் நீரையும் அக்கினியையும் பூமியையும் ஆகாசத்தையும், விரிவாய் படைத்தாய் - விசாலமாகப்படைத்தவனே, மலர்ப்பாதம் நினைப்பார் இடமே விளையாட்டாய் - தாமரைமலர் போன்ற பாதங்களை நினைப்பவரிடமே திருவிளையாடலுடையவனே, குற்ருலப்பரம - குற்ருலத்தில் எழுந்தருளிய மேலோனே, இடம் மேவிய தேவி பங்கா - இடப்பாலிற் பொருந்திய உமாதேவியைப் பாகமாகக் கொண்டவனே, எனைப்பார் - என்னைக் கடாட்சித்தருள். எனக்கு நின்பரம்-என்னைக்காப்பது உனக்குப் பாரமாகும் (எ—று). இடம்—ஆகாயம்.*

பரமா கமங்கள் பயின்குற் ருலப் பழம்பதிதா
பரமா கமன்னிப் பரனடி போற்றிப் படாந்திசையம்
பரமா கமழ்கொன்றைத் தாமாவென் பாரிகம் பார்புரந்து
பரமா கமங்கல நாடளிப் பார்வெண் பகடுகைத்தே. (59)

*(இ—ள்) பரம ஆகமங்கள் பயின்று-சிவாகமங்களைப்படித்து, குற்ருலப்பழம்பதி - குற்ருலமென்னும் பழமையாகிய தலத்தை, தாபரம் ஆகமன்னி - நிலைப்பாக அடைந்து, பரன் அடிபோற்றி - சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, படாம் திசை அம்பரமா - ஆடையைத் திக்குகளாக உடைய அழகிய பரமா, கமழ்கொன்றைத்தாமா - பரிமளிக்கின்ற கொன்றமாலையையுடையவனே, என்பார் - என்று துதிப்பவர்கள், இகம் - இவ்வுலகிலே, பார்புரந்து - அரசராய்ப் பூமியைக்காவல் செய்து' பரம் - பரலோகத்திலே, மாக மங்கலநாடு - மேலேயுள்ள (முத்தித்தானமாகிய) மங்கள நாட்டை, வெண்பகடு உதைத்து அளிப்பார் - வெண்மையாகிய இடபத்தைச் செலுத்திக் காப்பார்கள். (எ—று).*

*பயின்று மன்னி போற்றி என்பார் புரந்து உதைத்து அளிப்பார். வெண்பகடு உகைத்துமாக மங்கலநாடு அளிப்பர்-வெள்ளையானையை ஊர்ந்து தேவலோகத்தை (இந்திரராக)க் காப்பார் என்றுமாம்.*

கடுவிடக் கண்டன் றிரிகூடத்தேவர கண்ட னண்டங்
கடுவிடக் கண்ட கனறரித் தான்கலந் தாரைச்சேன்மக்
கடுவிடக் கண்டவோட் டான்வரைக் காளைபின் னைகவன்னே
கடுவிடக் கண்டகப் பாலைசென் றாளின்றுன் கன்னிகையே. (60)

*(இ-ள்) கடு இடம் கண்டன் - விடத்திற்கு இடமாகிய கழுத்தையுடையவனும், திரிகூடம் தேவரகண்டன் - திரிகூடாசலத்திலெழுந்தருளிய தேவரகண்டன் என்னும் பெயரையுடையவனும், அண்டங்கள் துவிட கண்டகனல் தரித்தான் - அண்டங்களை உண்டிடச்செய்த அக்னியைத் தரித்தவனும், கலந்தாரை - தன்னையடைந்தவரை, சென்மம் கடுவிடக்கு அண்ட ஒட்டான் - பிறவியிலே கடுமையாகிய உடலை அடைய ஒட்டாதவனுமாகிய சிவபெருமானது, வரைக்காளை பின்னை அன்றே - மலையிலுள்ள தலைவன் பின்னை அல்லவா, இன்று உன் கன்னிகை இன்றைக்கு உன்பெண்ணானவள், கடுவிடம் கண்டகம்பாலை சென்றாள் - கடுமரங்களையும் விடம் போன்ற முட்களையுமுடைய பாலை நிலத்திற சென்றாள் (எ-று).*

*தேவரகண்டன்-தேவர்களால் அளவறியப்படாதவன். கடு-ஒருவகை மரம்.*

*இது பாங்கி செவிலிக்குணர்த்தல். விடக்கு - ஊன். இங்கே உடல்.*

கையம் புயங்கங் கடிமார்பு தாள்குழை கந்தரம்வா
கையம் புயங்களு மெங்கள்குற் றாலத்துக் கண்ணுதல்பூண்
கையம் புயங்க முணராய் கோலோவேளைக் காய்வதென்னே
கையம் புயங்கப் பொரமார னேவுதென்கால் வையமே. (61)

(இ—ள்) கை அம்பு உயங்கபொர-வெறுக்கத்தக்க பாணங்களிஞலே வாடும்படியாகச் சண்டை செய்வதற்காக, மாரன் ஏவு வையம் தென்காலே - மன்மதனுற் செலுத்தப்பட்ட தேராகிய தென்றற்காற்றே, எங்கள் குற்ருலத்துக்கண்ணுதல் - எங்கள் பெருமாஞகிய நெற்றிக்கண்ணையுடைய குற்ருலநாதன், கைஅம்புயம் - கையாகிய தாமரை மலர்களிலும், கம் - சிரசிலும், கடி மார்பு தாள் குழை கந்தரம் - இடையிலும் மார்பிலும் பாதத்திலும் காதிலும் கழுத்திலும், வாகையம் புயங்களும் - வெற்றியையுடைய தோள்களிலும், பூண்கை - தரித்தல், அம்புயங்கம் - அழகிய பாம்பு என்பதை, உணராய் கொலோ - தெரியாயோ, என்னைக் காய்வது என்ஞே — என்னை நீ வருத்துவது என்ன வலிமை கொண்டோ. (எ—று.)

இரண்டாமடியில் அம்சாரியை - பாம்பு காற்றை உண்ணுவது, எம்பெருமான் அங்கம் முழுவதும் பாம்பை அணிந்திருப்பதஞல் அவைகள் உண்டு விடும் என்பது.

வையம் படைக்கணல் லார்காம வெம்மைக ளேன்மட்டுமோ
வையம் படைக்கவல் லார்மலர் மேவினர் வாங்குபர
வையம் படைக்கவல் லார்கடன் மேவினர் வாகைமழு
வையம் படைக்கலங் கோண்டார்குற் ருல வரைநண்பனே. (62)

(இ—ள்) வாகை மழுவை அம்படைக்கலம் கொண்டார் - வெற்றி பொருந்திய மழுவாயுதத்தை அழகிய படைக்கலமாகக் கொண்டவராகிய சிவபெருமானது, குற்ருலவரை நண்பனே - குற்ருல மலையிலுள்ள நண்பனே, வை அம்பு அடைகண் நல்லார் - கூர்மையாகிய அம்பின் இலையைப்போன்ற கண்களையுடைய பெண்களது, காமவெம்மைகள் - காமத்தாலுண்டாகிய வெப்பங்கள், என்மட்டுமோ - என்னளவிலேதாஞே, வையம் படைக்கவல்லார் — பூமியைச்சிருட்டிக்க வல்லவராகிய பிரமதேவர், மலர் மேவினர் - (வெம்மையாற்ருது) தாமரை மலரையடைந்தனர், வாங்குபரவை அம்பு அடைக்கவல்லார் - வளைந்த கடற்றண்ணீரை (இலங்கைக்குப்போவதற்காக)

அடைத்து (அணைகட்ட) வல்லவராகிய திருமால், கடல் மேவினர் - திருப்பாற்கடலைச் சேர்ந்தனர். (எ—று)

படைக்கவுங் காக்கவும்வல்ல கடவுளர்க்கே யிவ்வாருயின் நான் வெப்பத்தாற் றுன்புறுதலைச்சொல்லவும் வேண்டுமோ (எ—று).

தலைவன் கழற்றெதிர் மறுத்தல் அம்பு அடு ஐகண் நல்லார் எனலும் ஆம்.

வரையா தரிக்குலஞ் சூழதிரி கூடத்த வல்வினையை
வரையா தரிக்கு மதுகங்கை வாண மகாரெனமூ
வரையா தரிக்கும் பரைபீடத் தாயென்றும் வைதிகர்சை
வரையா தரிக்கும் படியருள் பார்மங்கை பாகத்தனே. (63)

(இ—ள்) வரையாது - நீங்காமல், அரிக்குலம் சூழ் - சிங்கக் கூட்டங்கள் சூழ்ந்து வருகின்ற, திரிகூடத்த-திரிகூட மலையை யுடையவனே, வல்வினையை வரையாது அரிக்கும் - கொடிய வினைகளை அளவின்றிக் கெடுக்கின்ற. மதுகங்கைவாண - சிவமது கங்கையில் வாழ்பவனே, மகாரென மூவரை ஆதரிக்கும் பரை பீடத்தாய் - பிள்ளைகளாகப் பிரமவிட்டுணு ருத்திரர்களைப் பெற்றுப்பாது காத்தருளிய பராசத்தி பீடத்தையுடையவனே, மங்கை பாகத்தனே - உமாதேவியைப் பாகத்திலுடையவனே, என்றும் - எப்பொழுதும், வைதிகர் சைவர் தரிக்கும்படி - வைதிகரும் சைவரும் நிலைத்திருக்கும்படி, ஐயா அருள் பார் - ஐயனே உனது திருவருள் நோக்கம் புரிவாய் (எ—று).

வைதிகர் - வேதவழி நிற்போர். சைவர் - ஆகமவழி நிற்போர். வைதிகராகிய சைவர் எனினும் அமையும்.

பராசத்தி முத்தொழிலையுஞ் செய்யும்படி மும்மூர்த்திகளையும் பெற்று வளர்த்தாள் சத்திபீடச்சந்நிதியில். "சகமெலாந் தொழுநின்ருடுந்தாணு மாலயப்பூந்தொட்டில்" இதன் விரிவைத் திருக்குற்ருலப் புராணம் பராசத்திபீடச் சருக்கத்திற் காண்க.

பாகத் திருக்கு மறைப்பொரு ளாமுனைப் பாடியேன்சு
பாகத் திருக்கும் படியருள் வாய்தண் பலாவுறைநம்
பாகத் திருக்குழவிப் பணிசேர் பணியாய் சுறவின்
பாகத் திருக்குழை யாய்விழை வாகநின் பாதங்களே. (64)

*(இ-ள்) தண்பலா உறைநம்பா - குளிர்ந்த குறும்பலா வடியிலெழுந்தருளிய சிவபெருமானே, கத்திரு குழவிப்பணி சேர்பணியாய் - கத்திரு என்பவள் பெற்றகுழந்தைகளாகிய பாம்புகள் சேர்ந்த ஆபரணத்தையுடையவனே, சுறவின்பாகம் திருக்குழையாய்-சுறாமீன் வடிவின் பகுதியமைந்த குண்டலத்தை யுடையவனே, நின்பாதங்களே விழைவுஆக - உனது திருவடி களையே விருப்பமாக, பாகத்து - சுவைகளையுடைய, இருக்கு மறைப்பொருளாம் உனை - இருக்குமுதலாகிய வேதத்தின் பொருளாகிய உன்னை, பாடி - தோத்திரஞ்செய்து, என் சுபாகத்து இருக்கும்படியே - என்னுடைய நல்லபக்குவத்தில் இருக்கும்படியே, - என்னுடைய நல்லபக்குவத்தில் இருக்கும் படியே, அருள்வாய் - கிருபை செய்வாய் (எ-று)*

*கத்துரு - ஆதிசேடன் முதலிய பாம்புகளைப் பெற்ற காசி பன் மனைவி கத்திருவென்றும் வரும். பணம் — படம் பணத்தையுடையது பணி.*

*பாகம் - சுவைவகை, பக்குவம், பகுதி.*

பாவனை யும்பர முங்குறி யாமற் பரிவிலாசம்
பாவனை யும்பட ருங்குறித் தீர்பண்டு மூவர்தமிழ்
பாவனை யும்பர மன்றிரி கூடம், பரவிலுங்கள்
பாவனை யும்பகர் வீடா மவன்மலர்ப் பாதங்களே, (65)

*(இ-ள்) பாவனையும் - தவமும், பரமும் - மோட்சமும், குறியாமல் - எண்ணாமல், பரிவு இலர் சம்பாவனையும் - அன்பில் லாதவர்கள் கொடுக்கும் வெகுமதியையும், படரும் - உங்கள் துன்பங்களையுமே, குறித்தீர் - எண்ணினீர்கள், பண்டு - முற் காலத்தில், மூவர் தமிழ்ப்பாவனையும் - சம்பந்தர் அப்பர் சுந்தரர் என்ற மூவராலும் பாடப்பட்ட தேவாரப்பாடல் களையும் அலங்காரமாக அணிந்த, பரமன் - மேலான சிவபெரு*

மான்து, திரிகூடம் பரவில் - திரிகூடாசலத்தைத் துதித்தால், உங்கள் பாவம் நையும் - உம்முடைய பாவங்கள் கெடும், அவன் மலர்பாதங்களே பகர்வீடுஆம் - அந்தக்குற்றாலநாதருடைய திருவடிகளே சொல்கின்ற உங்கள் வாழ்விடமாகும் (எ-று).

பாதவ மாகப் பறவைக ளாகப் பவந்தோறுந்தப்
பாதவ மாகப் பிறந்தலுத் தேனொண் பலாவுறைநம்
பாதவ மாகம் வருந்திச்செய் யாத பதகனுக்கப்
பாதவ மாகதி சேரவெவ் வாறருள் பாலிப்பையே. (66)

(இ-ள்) பாதவம்ஆக — மரங்களாகவும், பறைவைகள்ஆக - பட்சிகளாகவும், பவந்தொறும், (இன்னும்பல) பிறவிகள்தோறும் தப்பாது - தவறாமல், அவமாகப்பிறந்து அலுத்தேன் - வீணாகப் பிறந்து சலித்து விட்டேன், தவம்ஆகம் வருந்திச்செய்யாத பதகனுக்கு - உடல் வருந்தி தவஞ்செய்யாத பாவியாகிய அடியேனுக்கு, ஒண்பலா உறைநம்பா-ஒள்ளிய குறும்பலாவடியி லெழுந்தருளி யிருக்கின்ற சிவனே. அப்பா - ஐயா, மாகதிசேர - பெரிய மோட்சத்தையடைய, தவ அருள் - மிகுதியாக அருளை, எவ்வாறு பாலிப்பையே - எப்படிக் கொடுத்தருளுவையோ (எ—று).

பாலிக்கு மாரமு தாலமதாய்ப் பைங்குழல் பின்னலாய்ப்
பாலிக்கு மாரன் பகையா யுனையுமொப் பாயினளேம்
பாலிக்கு மாரத் தொடைதா வெனத்தண் பலாவுறைகா
பாலிக்கு மாரமுன் சொல்லார்நல் லாரிவர் பான்மையென்னே. (67)

(இ—ள்) பாலிக்கும் - கொடுக்கின்ற, ஆர் அமுது ஆலம தாய் - அருமையான பாலமுது விடமாகியும், பைங்குழல் பின்னல் ஆய் - பசுமையாகிய கூந்தல் சடையாகியும், பால்இக்கு மாரன் பகையாய் - சாற்றையுடைய கரும்பு வில்லேந்திய மன்மதன் பகையாயும், உனையும் ஒப்பாயினள் - உன்னையும் ஒப்பானவளாகிய, எம்பாலிக்கு - எங்கள் தலைவிக்கு, ஆர் அத்தொடைதா என - ஆத்திமாலையைக் கொடு வென்று, தண்பலாவுறை காபாலிக்கு - குளிச்சி பொருந்திய குறும்பலாவி

லெழுந்தருளிய காபால மென்னுந் திருக்கூத்தையுடைய சிவ பெருமானுக்கு, மாரம் முன் - யான் மரணமாகுமுன்னே, சொல்லார் - (போய்ச்) சொல்லமாட்டார்கள், இவர் நல்லார் - இவர்கள் தாம் நல்லாரெனப் பெயருக்குரியவர்கள், பான்மை யென்னே - இவர்கள் தன்மை எவ்வாறிருக்கின்றது. (எ—று.)

கருப்பஞ் சாற்றைக் கருப்பம்பால் என்பது வழக்கு: தலைவி தன்றுயர் தலைவர்க் குணர்த்தல் வேண்டல்.

பாலி - பால்யா வென்பதன் றிரிபு.

என்பணி யாயமுன் கோண்டா ரிதழிநல் காரேனில்யாம்
என்பணி யாயக் கடவபெண் காளேனை யாய்மடவி
என்பணி யாயஞ் சிறிதுஞ்சோல் லாளினி நானிவர்போல்
என்பணி யாய புனேவேன்குற் ருலத் தெழின்மன்றிலே. (68)

(இ—ள்) என்பணியாயம் - என்னுடைய ஆபரணத் தொகுதிகளை, முன்கொண்டார் - முன்பு கவர்ந்து கொண்டவர், இதழிநல்கார் - கொன்றை மாலையைக் கொடுக்கின்ருரில்லை, எனில் - என்ருல், பெண்காள் - பெண்களே, இனியாம் பணி யாயக்கடவ என் - இனிமேல் நாம் செய்து ஆராயக்கூடிய வேலை என்ன இருக்கிறது, ஆய்எனை மடவியென்பள் - என்தாய் என்னைப் புத்தியில்லாதவள் என்பள், நியாயஞ்சிறிதுஞ் சொல்லாள் - சிறிதேனும் நியாயஞ்சொல்லமாட்டாள், குற்ருலத்து எழில்மன்றிலே - குற்ருலத் தலத்திலுள்ள சபை யினிடத்தே, நான் இவர்போல் என்பு அணியாய புனேவேன் - நானும் இவரைப்போலவே எலும்பணிகளை அணிந்து கொள்வேன் (எ — று)

தலைவிமடலேற எண்ணுதல். யாம் என்றது தலைவி தோழி யரையும் உளப்படுத்திக் கூறியது.

மன்றலங் காரணி சேண்பகக் காமன்னி மாதுமையாள்
மன்றலங் காரகப் போற்கோயில் சூழ்வந்து வள்ளற்பிரான்
மன்றலங் காரத் திருநடஞ் சேவித்த மாதவத்தால்
மன்றலங் காரணங் காணப்பெற் ருன்கும்ப மாதவனே. (69)

*(இ — ள்) கும்பமாதவன் - அகத்திய முனிவன், மன்றல் அம்கார் அணி - வாசனையும் அழகிய மேகமும் பொருந்திய, செண்பகக்காமன்னி - செண்பகச் சோலையை அடைந்து, மாதுமையாள்மன்-உமாதேவிநாயகனுடைய, தலம்-குற்ருலத்தையும், பொன்காரகக்கோயில் சூழ்வந்து - பொன்ஞற் செய்யப்பட்ட கோயிலையும் பிரதக்கணம்செய்து, வள்ளற்பிரான் அலங்காரம் மன்று திருநடஞ்சேவித்து - கருணைவள்ளற் பெருமாளுகிய சிவபெருமானுடைய சித்திரசபையில் நடனதரிசனஞ் செய்து, மாதவத்தால் - பெரியதவத்திஞலே, மன்றலங்காரணம் - எல்லாவற்றிற்கும் காரணமாகிய திருமணக் கோலத்தை, காணப்பெற்ருன் - தரிசிக்கப்பெற்ருன். (எ — று).*

மாதவ ராக வயனுக வானவ ராகமற்றை
மாதவ ராகம வேதிய ராக வருக்கையின்கீழ்
மாதவ ராகம் பகிர்ந்தார் தமையுன்னி மையல்கெழு
மாதவ ராக விருப்பவ ரேமுத்தி வாழ்பவரே. (70)

*(இ — ள்) மாதவர் ஆக - திருமாலாயினும், அயன் ஆக - பிரமனுயினும், வானவராக - தேவர்களாயினும், மற்றைமாதவர் ஆகமவேதியர் ஆக - வேறே பெரிய முனிவர்களாயினும், ஆகமங்களையுடைய பிராமணராயினும்; வருக்கையின் கீழ் - குறும்பலா அடியில், மாது அவர் ஆகம்பகிர்ந்தார் தமை - உமாதேவியாராற் பாகஞ் செய்யப்பட்ட திருமேனியையுடையவரை, உன்னி - தியானித்து, மையல் கெழுமாதவராக இருப்பவரே - மயக்கம் பொருந்ாதவர்களாக இருக்கின்றவர்களே, முத்திவாழ்பவர் - மோட்சவாழ்வையுடையவர்களாவார்கள். (எ — று).*

*மூன்ருவது 'அடி - மாது அவர் என்பதில் அவர் பகுதிப் பொருள் விகுதி.*

*சிவனவன் என்பதுபோல (திருவாசகம்).*

பவருங் கலைமதி வேணிப் பிரான்பகி ரண்டம்வெடிப்
பவருங் கலைகரத் தேந்துகுற் ருலத்தன் பாதநினைப்
பவருங் கலைபல.பெற்றுயர்ந் தார்பண்டு பைங்கரங்கூப்
பவருங் கலைபல சோரநின் ருளிவள் பான்மைநன்றே. (71)

(இ – ள்) பவருங் - கொடித்தன்மையடைந்த, கலைமதி - கலையோடுகூடிய சந்திரனை யணிந்த. வேணிப்பிரான் - சடையை யுடைய பெருமானும், பகிரண்டம் வெடிப்ப வரும் கலைகரத்து ஏந்து குற்றாலத்தன் - புரத்து அண்டங்களும் வெடிக்கும்படி ஆரவாரஞ்செய்து வந்த மானைக் கையிலேந்திய குற்றாலத்தில் எழுந்தருளியிருப்பவனுமாகிய சிவபெருமானுடைய, பாதம் நினைப்பவரும் - (தொழுபவரேயன்றி) திருவடிகளை நினைப்பவரும், பலகலைபெற்று உயர்ந்தார் பலகலை (சாத்திரங்) களையும் பெற்று உயர்வையே அடைந்தார்கள். பண்டு - முற்காலத்தில், இவள் - (இப்போது) இந்தப்பெண், பைங்கரம்கூப்ப - பசுமையாகிய கைகளைக் குவித்துத் தொழ (வும்), பல அரும் கலைசோர நின்றான் - பல அருமையாகிய கலைகள் சோர்ந்து போகும்படி நின்றாள், பான்மை நன்றே - இத்தன்மை அழகிதே. (எ – று).

பவர் - நெருக்கமும் ஆம். அண்டம் வெடிப்பவருங் கலை யென்றது, தாருகாவன இருடிகளது ஆபிசார ஓமத்திற் றோன்றிய மான் தன்னுடைய சத்தத்தால் யாவும் அடங்கச் சிவபெருமான் மேல்வர அதனை யேந்தித் தன் காதிற் கூப்பிடச் செய்ய யாதும் பயனின்மையால் முகத்தைத் திருப்பி வெட்கிச் சிவபெருமான் கையிலமர்ந்தது. பைங்கரம் - பசுமை + கரம். ஈறுபோதல் மை விகுதி கெட்டு இனையவும் என்றதனால் சுகர உயிர்மெய்யுங் கெட்டு அடி அகரமையாதல் - ப - பையென்று ஆகி, இனமிகல் என்றதினால் 'ங்' மிகுந்து, பைங்கரம் என வந்தது.

தலைவியின் காம மிகுதி உரைத்தல்.

பானத் தரும்பலர் மாடத்திற் சூல்கொண்டு பாசடைச்சோ
பானத் தரும்பரு முத்தீனு நன்னகர்ப் பன்னகம்பூண்
பானத் தரும்பங் கயத்தயன் மால்பைம்போ னூட்டமுத
பானத் தரும்பணி பாதமேப் போதும் பகர்மின்களே. (72)

(இ – ள்) பால்நத்து அரும்பு அலர்மாடத்தில் - வெள்ளிய சங்கங்கள் அரும்பும் தாமரை மலராகிய மாடத்திலே, சூல்

கொண்டு - கர்ப்பங்கொண்டு, பாசு அடை சோபானத்து - பச்சையிலையாகிய படியிலே, அரும்பரும் முத்து ஈனும் - அருமையும் பருமையுமாகிய முத்துக்களைப் பெறுகின்ற, நன்னகர் - குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, பன்னகம் பூண்பான் - சர்ப்ப ஆபரணத்தைத் தரிப்பவனாகிய, நதரும் பங்கயத்து அயன்-சிறப்பைத்தரும் தாமரை மலரிலிருக்கின்ற பிரமனும், மால்-விட்டுணுவும், பைம்பொன் நாட்டு அமுத பானத்தரும் - பசுமையாகிய பொன்னாட்டி (தேவலோகத்தி) லேயுள்ள அமிர்தத்தை உண்பவராகிய தேவர்களும், பணி - வணங்குகின்ற, பாதம் திருவடிகளை, எப்போதும் - எப்பொழுதும், பகர்மின்கள் - துதி கூறுவீர்களாக (எ – று).

மலரை மாடமென்றதனால் அதன் கீழுள்ள இலைபடியென பட்டது. பசுமை+அடை (நன் – ஈறுபோதல்) பாசடை. பன்னகம் பாதத்தால் நடவாதது எனக்காரணப் பெயர்.

அ தரும் — அழகைத்தரும் எனலுமாம்.

பகவனத் தன்பது மத்தய னனவன் பன்னிரண்டம்
பகவனத் தன்கய மாமுகன் றாதை பரமதகோ
பகவனத் தந்த மறைப்பரி யான்பனி மாமலர்ச்சண்
பகவனத் தன்பத மல்லா லெமக்கோரு பற்றிலையே. (73)

(இ – ள்) பகவன் – பகவன், நத்தன் பதுமத்து அயன் ஆனவன் - சங்கையேந்திய திருமாலும் தாமரையிலிருக்கின்ற பிரமனுமாய் முன்னிருந்தவன், பன்னிரண்டு அம்பகவன் - பன்னிரண்டு கண்களையுடைய சுப்பிரமணியக் கடவுளுக்கு, அத்தன்-அப்பன், கயமாமுகன் தாதை-யானைமுகக் கடவுளுக்குத் தந்தை, பரமதகோபகவனத்து அந்தமறைப்பரியான் - அந்நிய மதத்தைக் கோபிக்கின்ற வேகத்தையுடைய அழகிய வேதங்களைக் குதிரையாகக்கொண்டவன், பனிமாமலர்ச் சண்பக வனத்தன் - குளிர்ச்சி பொருந்திய பெரிய மலர்நிறைந்த சண்பகக் காவையுடையவ்ன், பதம் அல்லால் - பாதமல்லாமல், எமக்கு - நமக்கு, ஒருபற்றிலையே - ஒருதஞ்சமும் வேறில்லை (எ – று).

இலயம் பயிலுறழ் கண்ணிகைத் தாள மெடுத்தியம்ப
இலயம் பயிலு முனிவர் கொண்டாட வெழுதுமன்றத்து
இலயம் பயிலுந் திரிகூடத் தெந்தை பிரான்சமையத்(து)
இலயம் பயிலுன ரேனெடுத் தார்வம்பி லித்தனுவே. (74)

(இ — ள்) இலை - தகட்டுவடிவாகிய, அம்பு அயில் உறழ் கண்ணி - அம்பையும் வேலையும் ஒத்த கண்ணையுடையவளாகிய உமாதேவி, கைதாளம் எடுத்து இயம்ப - கையினாலே தாளத்தை எடுத்துப்போட, இலயம் பயிலும் - ஒடுங்குதலையே பழகுகின்ற, முனிவர் - முனிவர்கள், கொண்டாட - பாராட்ட, எழுதும் மன்றத்து - சித்திரசபையிலே, இலயம் - கூத்துவிகற்பங்களை, பயிலும் - கற்கின்ற, திரிகூடத்து எந்தைபிரான் - திரிகூடாசலத்திலெழுந்தருளியிருக்கின்ற என் தந்தையாகிய பெருமானது, சமயத்தில் - சமயத்திலே, ஐயம்பயிலுனர் - சந்தேகம் சொல்கின்றவர்கள், இத்தனு - இந்தச் சரீரத்தை, வம்பில் - வம்பாக, ஏன் எடுத்தார் - எதற்காக எடுத்தார்களோ. (எ — று)

தனுக்கோடி வாருணி சிந்துமந் தாகினித் தானஞ்சுற்றித்
தனுக்கோடி வாடி வரும்பரி சீர்தக்கன் வேள்விவிகா
தனுக்கோடி வாசத் தவங்கோடி தேவர்செய் தானமிந்த்ர
தனுக்கோடி வாழரு வித்திரி கூடத்தைச் சார்மின்களே. (75)

(இ — ள்) தனுக்கோடி வாருணி - தனுக்கோடியிலுள்ள கடல், சிந்துமந்தாகினித்தானம்சுற்றி - சிந்துநதி கங்கை முதலிய தீர்த்தக்கட்டங்களுக்குப் போய்த்திரிந்து, தனுகோடிவாடி வரும் பரிசீர் - சரீரம் கூனியும் வாடியும் வருகின்ற தன்மையை யுடையவர்களே, தக்கன் வேள்வி விகாதனுக்கு ஓடி - தக்கன் யாகத்தை அழித்த வீரபத்திர மூர்த்திக்கு (தண்டம் பொறுக்க முடியாமல்) ஓடிப்போய், கோடிதேவர் — அனேக தேவர்கள், தவவாசஞ் செய்தானம் - (தம்மையெய்திய சிவத்துரோகந்தீரத்) தவஞ்செய்து தங்கிய இடமாகிய, இந்த்ரதனுக்கோடிவாழ் - அனேக இந்திர தனுசுகள் தோற்றுகின்ற, அருவித் திரிகூடத்தை-அருவி விழுகின்ற திரிகூடாசலத்தை, சார்மின்கள் - சென்று தொழுமின்கள் (எ — று).

விகாதன் - விரோதன். வாருணி - கடல். வாரிணியென்றும் வரும். பருதியைப் பரிதியென்பது போல.

தக்கன் யாகத்தை யழிக்கத் தோன்றிய வீரபத்திர மூர்த்திக்குப் பயந்தோடிய தேவர்கள் தாமடைந்த சிவத் துரோகம் நீங்கத் திருக்குற்றாலத்தில் புல் மர முதலியவாக நின்றுதவஞ் செய்து அச்சிவத்துரோகம் நீங்கினார்களென்பது (கு-பு. தேவர்கள் சிவத்துரோகந் தீர்ந்த சருக்கம்).

அருவியில் மூழ்கும்போது இந்திரதநுசுகள் வானவில் தோற்றுதல் பிரத்தியட்சம். திருக்குற்றாலப் புராணத்திற் காண்க.

சாரம் புரியமைக் கண்ணுமை பாகன் சமரிடத்தஞ்
சாரம் புரியழ லூட்டும் பிரான்சர்ப்ப மாமதிச்சஞ்
சாரம் புரிய சடையான் குற் றாலத்தைச் சார்ந்துசிவா
சாரம் புரியவல் லார்க்கழி யாப்பதந் தானெய்துமே. (76)

(இ - ள்) சார் அம்பு உரிய மைகண் உமைபாகன் - பொருந்திய பாணங்களுக்கு உரிமையுடைய அஞ்சனம் தீட்டிய கண்ணையுடைய உமாதேவியைப் பாகத்திற்கொண்டவனும், சமரிடத்து அஞ்சார் அம்புரி-யுத்தத்திலே அஞ்சாதவர்களாகிய அசுரர்களுடைய அழகிய மூன்று ஊர்களையும், அழல் ஊட்டும் பிரான்-எரியச்செய்த பெருமானும், சர்ப்பம் ஆம்மதிசஞ்சாரம்- சர்ப்பமும் கங்கையும் சந்திரனும் சஞ்சரிக்கின்ற, புரியசடை யான் - முறுக்கையுடைய சடையோடு கூடியவன், குற்றாலத் தைச் சார்ந்து - அந்தச் சிவபெருமானுடைய திருக்குற்றாலத்தை அடைந்து, சிவஆசாரம் புரியவல்லார்க்கு - சைவ ஒழுக்கத்தை அநுசரித்து நடக்கவல்லவர்களுக்கு, அழியாப்பதம் - என்றுங் கெடாத மோட்சபதவி, தான் எய்தும் - தானே வந்துசேரும் (எ - று).

தானவ னாக முரித்தகுற் றாலத்தன் சத்தர்மனத்
தானவ னாகத மேவிநிற் பான்சடை மீதிருந்துந்
தானவ னாக மதியேயென் காதலைச் சாற்றுகிலாய்
தானவ னாகநின் பேர்நிற்க வோதணந் தாயருளே. (77)

(இ – ள்) தான வல நாகம்உரித்த குற்ருலத்தன் - மதநீரை யுடைய வலிய யானையின் (தோலை) உரித்த திருக்குற்ருலத்தை யுடையவனும், சத்தர்மனத்தான அனுகதம் மேவிநிற்பான் - மெய்ம்மையுடையாரது இருதயத்தான மாகிய அநாகதத்தைப் பொருந்தி நிற்பவனுமாகிய சிவபெருமானது, சடைமீது - சடையிலே, அவநாகமதியே-பயனில்லாத வானத்திலுள்ள சந்திரனே, இருந்துந்தான் - இருந்துங்கூட, என்காதலை - என்னுடைய விருப்பத்தை, சாற்றுகிலாய் - சொல்லுகின்ருயில்லை, தானவனுக நின்பேர் நிற்கவோ - அசுரனுக நினது பெயர் நிலைபெறவோ அருள் தணந்தாய் - கருணையை நீங்கிவிட்டாய் (எ – று).

கருணையில்லாமையில் ஒப்பாகவோ அருள்தணந்தா யென்ருள்.

காதுக்குப் பக்கலிலிருந்தும் பயனற்றவனுய், அவன் - அவம் - வீண்.

தான் - அசைநிலை. நாகமதியே - வானத்தின் கணுள்ள மதியே

தானவனுக - அசுரனுக.

ஆதாரங்கள் ஆறும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை யென்பன. இவற்றுள் அநாகதம் இருதயத்தானம்.

அருண னிருதி மதிபார்க் கவன்குரு வங்கிவிண்ணேர்க் (கு)
அருண னிருப னளகேச னம்புய ஞரமுதைய்
யருண னிருதரை வென்ருனு நன்னக ராதிப்பிரான்
அருண னிருமலப் பாதங்கள் பூசிக்கு மன்பரன்றே. (87)

(இ – ள்) அருணன், நிருதி, மதி, பார்க்கவன் - சுக்கிரன் குரு - அங்கி - அக்கினி, விண்ணேர்க்கு அருள் நல்நிருபன் - தேவர்களுக்கு அருளுகின்ற நல்ல அரசனுகிய இந்திரன், அளகேசன் - குபேரன், அம்புயன் - பிரமன், ஆரமுது - அருமையாகிய அமுதை, ஐயர் உண - தேவர்கள் உண்ண, நிருதரை வென்ருனும் - அசுரர்களை மோகினியவதாரமெடுத்து வென்ற

வனுகிய திருமாலும் ஆகிய இவர்களெல்லாம், நன்னகர் ஆதிப் பிரான் -குற்ருலத்திலுள்ள முதன்மையாகிய பெருமானுடைய, அருணம் - சிவப்பாகிய, நிருமலப்பாதம் - களங்கமற்ற திருவடிகளை, பூசிக்கும் அன்பர் அன்றே - பூசை செய்கின்ற அடியர்களே (எ – று).

பரசம ரத்தடல் வேல்கைக்கொண் டீர்பெரும் பாருலகோர்
பரசம ரத்தகை சேர்முரு கீர்மங்கை பான்மயற்கீர்ப்
பரசம ரத்தம் பரிவாகு மோபரி வாவதுநம்
பரசம ரத்தர் திரிகூடத் தார்கொன்றை பாதிரியே. (79)

(இ – ள்) பரசமரத்து அடல்வேல்கைக் கொண்டீர் – மேலான யுத்தத்திலே வலிமை செய்யத்தக்க வேலினைக்கையிலேந்தியவரே, பெரும் பாருலகோர் பரசு அமரத்தகைசேர் முருகீர் - பெரிய பூமியிலுள்ளவர்கள் துதிக்கத்தக்க தெய்வத்தன்மையையுடைய வெறியாட்டாளரே, மங்கைபால் மயற்கு-இந்தப்பெண்ணினுடைய மயக்கத்துக்கு, அசம்ஈர்ப்பர்-ஆட்டினை வெட்டுவர், அரத்தம் - அதன் அரத்தம், பரிவுஆகுமோ - பரிகாரம் ஆகுமோ (அன்பாகுமோ), பரிவுஆவது - பரிகாரமாவது, நம்பரசு அமர் அத்தர்-நம்முடைய மழுவாயுதத்தை யேந்திய கையையுடையவர், திரிகூடத்தார் – திரிகூடமலையிலே யிருக்கின்ற கொன்றை பாதிரியே - கொன்றையும் பாதிரியுமேயாகும்.

இது வெறி விலக்கு.

பாதிரி கூடப் பலமல ராடிப் பகீரதியம்
பாதிரி கூடச் சடைமுடி யாய்நின் பதாம்புயநம்
பாதிரி கூடகத் தாலுலேந் தேனருள் பாரினியப்
பாதிரி கூடப் பரமா பிரமக பாலத்தனே. (80)

(இ - ள்) அப்பா - ஐயா, திரிகூடப்பரமா - திரிகூடமலையிலே எழுந்தருளியிருக்கின்ற பரமனே, பிரமகபாலத்தனே - பிரமனுடைய தலையோட்டை யேந்தியவனே, பாதிரிகூட பலமலர் ஆடி - பாதிரி மலரோடு வேறு பல மலர்களிலும் விளையாடி, பகீரதி அம்பாதிரி - கங்கையாகிய அம்பிகை உலாவு

கின்ற, கூடச்சடைமுடியாய் - வீடுபோன்ற சடைமுடியை யுடையவனே, நின்பத அம்புயம் நம்பாது இரி - உன்திருவடித் தாமரைகளை நம்பாமல் நீங்குகின்ற, கூடகத்தால்-வஞ்சனையால், உலைந்தேன் - வருந்திவிட்டேன், இனி அருள் பார் - இனிமேல் திருவருள் செய்து கடாட்சித்தருள். (எ – று).

பாலத் தமரும் விழியான்குற் றாலப் பரமனைக்க
பாலத் தமருகக் கையானைப் போற்றினர் பாரின்மயிர்ப்
பாலத் தமரு நெருப்பா றெமபடர் நீந்திப்பரி
பாலத் தமருடன் வாழ்ந்துபின் சேர்வர் பரகதியே. (81)

(இ – ள்) பாலத்து அமரும் - நெற்றியிலே போர்செய்கின்ற, விழியான் - கண்ணையுடைய வனாகிய, குற்றாலப்பரமனை - திருக்குற்றாலத்தி லெழுந்தருளிய மேலானவனை, கபாலம் தமருகம் கையானை - பிரமகபாலத்தையும் உடுக்கையுமேந்திய கையையுடையவனை, போற்றினர் - துதித்தவர்கள், பாரில் - பூமியில், மயிர்ப்பாலத்து அமரும் நெருப்பு ஆறு எமபடர் நீந்தி - மயிர்ப்பாலத்தினுள்ளே அடங்கிய நெருப்பாறு போன்ற எமபடர்களைக்கடந்து, பரிபாலத்தமருடன் வாழ்ந்து - காப்பாற்றத்தகும் உறவினர்களோடு வாழ்ந்திருந்து, பின் - கடைசியில், பரகதி சேர்வர் - மோட்சத்தை அடைவார்கள் (எ – று).

பரவா திகள்சமை யங்களில் வீழ்ந்துநின் பாதமலர்
பரவா திகமும் பரமும்விட் டேன்புரப் பாயதளம்
பரவா திகங்கைச் சடிலா கடற்பரு மீன்படுத்த
பரவா திகம்பர தேவாகுற் றாலப் பதியரனே. (82)

(இ – ள்) அதள் அம்பர - தோலாடை யுடைய, ஆதி - முதலானவனே, கங்கைச்சடிலா-கங்கையணிந்த சடையையுடையவனே, கடல் பருமீன் படுத்தபரவா - கடலிலுள்ள பெரிய மீனைப்பிடித்த பரவனே, திகம்பரதேவா-திசைகளை உடையாகக் கொண்ட தெய்வமே, குற்றாலப்பதி அரனே - திருக்குற்றாலத்தி

லெழுந்தருளியிருக்கின்ற அரனென்னும் பெயருடையவனே, பரவாதிகள் - அன்னிய சமயத்தவருடைய, சமயங்களில் வீழ்ந்து - மதங்களிலே விருப்பங்கொண்டு, நின்பதாம்புயம் - உன்னுடைய திருவடித்தாமரைகளை, பரவாது - துதியாமல், இகமும் பரமும் விட்டேன் - இந்த உலகின் இன்பத்தையும் பரலோக இன்பத்தையும் கைவிட்டேன், புரப்பாய் - காப்பாற்றுவாய்.

அரவப் பணிசடை யாய்விடை யாயெனை யாளுடையாய்
அரவப் பணிபொறை யாய்பிறை யாய்மறை யாயிரத்தின்
அரவப் பணில மறுகாவுன் பாற்பணி யன்றிமற்றை
அரவப் பணியி லழுந்தாது காப்பதருண் மிக்கதே. (83)

(இ—ள்) அர - அரனே, அப்பு அணி சடையாய் - கங்கையை அணிந்த சடையையுடையவனே, விடையாய் - இடபவாகனத்தையுடையவனே, எனை ஆள் உடையாய் - என்னை அடிமையாக உடையவனே, அரவம் பணிபொறையாய் - சர்ப்பாபரணமாகிய பொறையை யுடையவனே, பிறையாய் - சந்திரனை யணிந்தவனே, மறை ஆயிரத்தின் அரவம் பணில மறுகா - அளவற்ற வேதஒலி முழங்குகின்ற சங்கவீதியை யுடையவனே, உன்பால்பணிஅன்றி - உன்னுடைய தவப்பணியை யல்லாமல், மற்றையர் அவப்பணியில் - மற்றவர்களுடைய வீண்வேலைகளினாலே, அழுந்தாது - வருந்தாமல், காப்பது - காப்பாற்றுவது, அருள் மிக்கதே - உனது பேரருளின் மிகுதியே யாகும். (எ—று).

மிக்கவ ருத்தமர் குற்றால மேன்கிலர் வேட்கையில்விம்
மிக்கவ ருத்தரங் கோடிசோல் வாரணு வீகலர்சே
மிக்கவ ருத்தங் குவிப்பாரஃ தேன்செயும் வீழ்த்தியொரு
மிக்கவ ருத்தம் புரிகால தூதர்கைம் மீறுகைக்கே. (84)

(இ—ள்) மிக்கவர் - மேலானவரும், உத்தமர் - முதன்மைக் குணமுடையவருமாகிய சிவபெருமானது, குற்றாலம் என்கிலர் - குற்றாலமென்று சொல்லமாட்டார்கள், வேட்கையில் விம்மி - காம இச்சையில் மிகுந்து, கவர் உத்தரம்கோடி சொல்வார் - (நியாயஞ் சொல்வார்க்கு) கவர் படுவதாகிய விடைகள்

பலவற்றைச் சொல்வார்கள், அணுகிலர் - அணுவளவேனும் (பொருள்) கொடுக்கமாட்டார்கள், சேமிக்க - சேர்த்துவைக்க, அருத்தம் குவிப்பார் - பொருளைத் திரட்டுவார்கள், வீழ்த்தி ஒரு மிக்க வருத்தம் புரிகால தூதர் - துன்பத்தில் விழச்செய்து சேர்ந்து வருத்துகின்ற எமதூதருடைய, கைமீறு கைக்கு - கையை விட்டுக்கடப்பதற்கு, அது-சேமித்துக் குவித்ததனங்கள், என்செய்யும் - என்ன துணைச்செய்து விடும் (எ — று).

கைக்கும் சரவத னத்தானைச் சூரன் கணம்படத்து
கைக்கும் சரவணத் தானைத்தந் தாய்மது கங்கையென்கங்
கைக்கும் சரவணக் கண்ணிக்கும் பாகவெங் கானவண்டு
கைக்கும் சரவணக் கோதைநின் கோதையைக் காமுற்றதே. (85)

(இ — ள்) கை - துதிக்கையையுடைய, குஞ்சரவதனத்தானை - யானை முகத்தையுடைய விநாயகரையும், சூரன் கணம் படத்துகைக்கும் சரவணத்தானை - சூரபத்மனுடைய படைகள் தொலையும்படி கலக்கிய சரவணத்துப் பிறந்த குமரக் கடவுளையும், தந்தாய் - பெற்றவனே, மதுகங்கையென் - சிவமது கங்கையென்று சொல்லப்பட்ட, கங்கைக்கும் - கங்காநதிக்கும், சரவணகண்ணிக்கும் - பாணத்தன்மைபொருந்திய கண்ணை யுடையவளாகிய உமாதேவிக்கும், பாக - பக்கத்திலுள்ளவனே, வெம்கானவண்டு உகைக்கும் - விரும்புகின்ற இசை பாடும் வண்டுகள், செலுத்துகின்ற சரவணக்கோதை - மாலையைத் தரித்த அழகிய கூந்தலை உடையாள், நின் கோதையை - உன்னுடைய மாலையை, காமுற்றது - விரும்புகின்றனள்.

கோதை சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை.

தேமலை வார்க்குங் குமக்கொங்கை பாசு திரையருவி
தேமலை வார்க்கு மதுகங்கை யாய்திரி கூடத்தன்றித்
தேமலை வார்க்குமுன் சென்றலை யாமலென் சிந்தையிடத்
தேமலை வார்க்தங் கவைநீக்கி யான்வதுன் செய்கடனே. (86)

(இ – ள்) தேமல் ஐவார்குங்குமம் கொங்கை பாக - தேமல் பொருந்திய அழகினையுடைய கச்சணிந்த குங்குமம் அப்பிய தனங்களையுடைய உமாதேவியைப் பாகத்தில் வைத்திருப்பவனே, திரை அருவி தேன்மலைவார்க்கும் - அலை பொருந்திய அருவியையுடைய மலையிலேதேனை ஒழுகுகின்ற, மதுகங்கையாய் - சிவமதுகங்கையை யுடையவனே, திரிகூடத்து அன்றி - திரிகூட மலையிலல்லாமல், தேம் அலைவார்க்குமுன் - வேறிடங்களிலே யலைபவரிடத்தேபோய், அலையாமல் - திரியாமல், என்சிந்தையிடத்தே - என் மனதிலே, மலைவு ஆர்க்கும் - ஒருவழிப்படாத மயக்கம் பந்தித்த, கவைநீக்கி - கவலையை யொழித்து, ஆள்வது - அடிமை கொள்வது, உன் செய்கடனே - உனது செய்ய வேண்டியகடமை யாகும் (எ – று).

கடனாகை யானத் தமரேசர் சூழ்சண்ப காடவியாய்
கடனாகை யாய்கன்னி யாய்பொன்னி யாய்கங்கை யாயடியேங்
கடனாகை யாலுனைப் போற்றில மாகிலுங் காப்பதுநின்
கடனாகை யாற்கதி யெவ்வண்ண மாகிலுங் காட்டுவையே. (87)

(இ – ள்) கடம் நாகஐயானத்து அமரேசர் சூழ் - மத நீரையுடைய யானை யாகிய அழகிய வாகனத்தில் தேவேந்திரர் சூழ்கின்ற, சண்பக அடவியாய் - சண்பகாரணியத்தை யுடையவனே, கடல் நாகையாய் - கடலருகிலுள்ள நாகபட்டினத்தை யுடையவனே, கன்னியாய் - கன்னியாகுமரியை யுடையவனே, பொன்னியாய் - காவேரிநதியை யுடையவனே, கங்கையாய் - கங்காநதியை யுடையவனே, அடியேங்கள் தனு - அடியேங்களுடைய பாக்கியமாயுள்ளவனே. கையால்உனை போற்றிலமாகிலும் - கைகளினாலே உன்னை நமக்காரஞ் செய்யாவிட்டாலும், காப்பதுநின் கடன் - காக்கவேண்டியது உனது கடமையாகும், ஆகையால் - எவ்வண்ணமாகிலும் - எந்த விதமாயிருந்தாலும், கதி காட்டுவை - மோட்சகதியை அநுக்கிரகஞ் செய்வாய். (எ–று).

அடியேங்கள் தம்நாகையால்போற்றிலமாகிலும் எனலுமாம்.

காட்டத்து ளங்கி யனையா யுனையென் கருத்துளொளி
காட்டத்து ளங்கிமுன் வந்தரு ளாய்மது கங்கைமுழுக்
காட்டத்து ளங்கி மணிதீ யெனக்குளிர் காய்கவிப்பின்
காட்டத்து ளங்கி மதியேய்க்கு நன்னகர்க் காவலனே. (88)

*(இ — ள்) மதுகங்கை முழுக்கு ஆட்ட - சிவமது கங்கை யானது மூழ்குவிக்க, துளங்கி - நடுங்கி, மணிதீயென - சிவந்த ரத்தினத்தைத் தீயென்றெண்ணி, குளிர்காய் - குளிர்காய்கின்ற கவிபின் - குறங்கின் முதுகானது, காட்டத்துள் அங்கிமதி யேய்க்கும் - காட்டிற்குள் சூரியனைச் சார்ந்த திங்களை ஒக்கும், நன்னகர்காவலனே - குற்ருலத்திலுள்ள தலைவனே, காட்டத்துள் அங்கியனையாய் - விறகினுளடங்கிய தீயை ஒப்பாய், உனை என் கருத்துள் ஒளிகாட்ட - உன்னை என் கருத்திலுள்ள ஒளி காட்ட, துளங்கி - விளங்கி, முன் வந்து அருள்வாய் - நேர்வந்து அனுக்கிரகம் செய்வாய். (எ — று.)*

*காட்டத்துளங்கி "விறகிற்றீயினன்" (தேவாரம்) போல. மணி மாணிக்கம் - செம்மணியைக் குரங்குகள் தீயென்றெண்ணி குளிர்காய அதன் வளைந்த முதுகு சந்திரனை ஒக்கும் மணி சூரியனையொக்கும், "இந்து வோடி ரவிகூட்டம் அமாவாசை" காட்டத்துள், அத்துசாரியை, அங்கி - சூரியன்.*

காவல வன்படைப் போன்றிரி கூடக் கடவுளம்பி
காவல வன்பதிக் காவலர் போந்திலர் கானமலர்க்
காவல வன்படை வீடிது வேளுக்குக் கங்குலேனைக்
காவல வன்பயில் பேடையை யோட்டுங் கழிக்கம்புளே. (89)

*(இ - ள்) காவலவன் - காத்தற்றொழிலையுடைய திருமாலும், படைப்போன் - சிருட்டித் தொழிலையுடைய பிரமதேவனு மாகிய திரிகூடக்கடவுள் - திரிகூடாசலநாதனும், அம்பிகாவல வன் - உமாதேவிக்கு நாயகனுமாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற, பதிக்காவலர் - குற்ருலத்திலுள்ள தலைவர், போந்திலர் - வந்தாரில்லை, கானம் மலர்காஅல - இந்தக்கான் பூஞ்சோலையல்ல, இது வேளுக்கு வன்படைவீடு - இவ்விடம் மன்மதனுக்கு வலிய படைவீடாகும், அலவன் பயில்பேடையை*

ஓட்டும்-அலவன் கூடிப்பயிலுகின்ற பேடையைத் துரத்துகின்ற, கழிக்கம்புளே - கழிநிலத்தேயுள்ள கம்பங்கோழியே, கங்குல் என்னைக்கா - இவ்விரவிலே என்னைக் காப்பாற்றுவாய். (எ-று).

*கம்புள் உண்ணச் செல்ல அலவன் ஓடிவிடுகின்றது, கழிக்கரைப்புலம்பல். கம்புள் - நீர்ப்பறவை. அலவன் — ஆணண்டு.*

கழிக்கரும் புள்ளினங் காளேம்பி ரான்மது கங்கைவெற்பில்
கழிக்கரும் புண்டந்த காதலர் போந்திலர் காமன்வெம்ப
கழிக்கரும் புஞ்சிறு நாண்சுரும் பும்பெருங் காதுசிலைக்
கழிக்கரும் புங்கோணர்ந் தான்றுணை நீருறங் காதிருமே. (90)

*(இ-ள்) கழிகரும் புள் இனங்காள் - உப்பங்கழி நிலத்திலேயுள்ள கரிய வண்டுகளே, எம்பிரான் மதுகங்கை வெற்பில் - எங்கள் பெருமானாகிய குற்றாலநாத ரெழுந்தருளியிருக்கின்ற சிவமது கங்கை வருகின்ற திரிகூடமலையில், கழிக்க அரும்புண் தந்த காதலர் - நீக்குதற்கரிய புண்ணைத் தந்த நாயகர், போந்திலர் - வந்தாரில்லை, காமன் - மன்மதனானவன், வெம்ப கழிக்கு அரும்பும் - கொடிய பாணத்துக்குப் புட்பமும், சிறுநாண்சுரும்பும் - சிறியநாணுக்கு வண்டும், பெரும்காது சிலை கழிக் கரும்பும் - பெரிய மோதுகின்ற வில்லுக்குக் கருப்பங் கழியும், கொணர்ந்தான் - கொண்டுவந்துவிட்டான், நீரே துணை - நீங்களே துணையாவீர்கள், உறங்காது இரும் - உறங்கி விடாமலிருங்கள். (எ - று) நீர் என்பதனோடு ஈற்றிலுள்ள ஏ சேர்த்துக்கொள்ளப்பட்டது.*

காது களிக்கநின் சீர்கேட்கி லேனேன் கருத்துமயங்
காது களிக்கத்தி யானஞ்செய் யேன்மது கங்கைநம்பா
காது களிக்கரும் பேயாகி னேனின் கருணைவைத்துக்
காது களிக்கவை நோய்தீர வல்வினைக் கட்டறவே. (91)

*(இ - ள்) மதுகங்கை நம்பா - சிவமது கங்கையையுடைய திருக்குற்றாலப் பெருமானே, நின் சீர்காதுகளிக்க கேட்கிலேன் - உன்னுடைய கீர்த்தியைச் செவிகள் மகிழும்படி கேட்க மாட்டேன், என் கருத்து மயங்காது உகளிக்கத் தியானஞ்*

*செய்யேன் - என்னுடைய எண்ணம் மயங்காமல் அம்மயக்கத்தினின்றுங் குதித்துவிடத் தியானஞ் செய்கின்றேனுமில்லை, காதுகளி கரும்பேயாகினேன் - மோதுகின்ற செருக்கையுடைய கரிய பேய் போலானேன், துகள் இ கவைநோய்தீர - குற்றமாகிய இந்தக் கவலைத்துன்பம் நீங்கவும், வல்வினை கட்டு அற - கொடிய வினைகள் பந்தித்தல் ஒழியவும், நின் கருணை வைத்து கா - நின்னுடைய திருவருளை வைத்துக் காத்தருள்வாய்.* (எ-று).

கட்டுளே வம்புய மால்கணை யாகக் கடவுளர்க்கிக்
கட்டுளே வம்புர நீறுக்கு மண்ணல் கயல்வயலின்
கட்டுளே வம்புயத் தேன்பாயு நன்னகர் காணப்பெற்ருற்
கட்டுளே வம்பு வினைபோம் பரகதி கைகண்டதே. (92)

*(இ-ள்) கள் துளவம் புயம் மால் கணை ஆக - தேன் பொருந்திய துளசிமாலையைத் தோளிலேயணிந்த திருமாலைப்பாணமாகக்கொண்டு, கடவுளர்க்கு இக்கட்டு உள - தேவர்களுக்குத் துன்பஞ்செய்ய நினைக்க, அம்புரம் நீறு ஆக்கும் அண்ணல் - அழகிய திரிபுரங்களை யெரித்துச் சாம்பலாக்கிய தலைவனுகிய திருக்குற்ருலநாதருடைய, கயல் வயலின் கண் துள - கயல் மீன்கள் வயல்களில் துள்ள, அம்புயத் தேன் பாயும் - தாமரை மலர்களினின்று தேன் பாயப்பெற்ற, நன்னகர் - திருக்குற்ருலத்தை, காணப்பெற்ருல் - தரிசிக்கப் பெருவோமாஞல், கட்டு உள வம்பு வினை போம்-பந்தித்த கொடிய வினைகள் ஒழியும், பரகதி - மோட்சமானது, கைகண்டதே - கையிற் கிடைத்த பேருகும். (எ - று.)*

கண்டன மாலம் புரியாம லண்டரைக் காக்கவுண்ட
கண்டன மால நிழலமர்ந் தானைக் கமழளகங்
கண்டன மாலம்பு வெற்பான போற்கோடி காதலனைக்
கண்டன மாலயன் காணுத வேதச்சங் காலயத்தே. (93)

*(இ-ள்) ஆலம் - விடமானது, கண்டனம் புரியாமல் - நிராகரியாமல். அண்டரைக்காக்க - தேவர்களைக் காப்பாற்றுவதற்காக, உண்டகண்டன் - உண்டருளிய கண்டத்தையுடையவனுகிய, அம் ஆல நிழல் அமர்ந்தானை - அழகிய கல்லால நீழலிலெழுந்தருளியவனை, கமழ் அளகம் கண் தனம் - பரிமளிக்கின்ற*

கூந்தலும் கண்ணும் தனமும், மால் அம்பு வெற்பு ஆன பொன் காதலனை - மேகமும் பாணமும் மலையுமாகவுடைய பொற்கொடி போல் வாளாகிய உமாதேவிக்கு நாயகனை, மால் அயன் காணுத வேதம் சங்க ஆலயத்தே - திருமாலும் பிரமனுங் கண்டறிய முடியாத வேத சொரூபமாகிய சங்கக்கோயிலிடத்தே, கண்டனம் - தரிசித்தோம் (எ – று).

அளகம் கண் தனம். மால் அம்பு வெற்பு. நிரனிறை, மாலயன் காணுத, வேதம்.

காலையு மாலையு மஞ்செழுத் தோதியெக் காலையுந்தென்
காலையு மாலையுஞ் சேர்செண்ப காடவிக் கண்ணுதல்பொற்
காலையு மாலை யுறவணங் கீருயிர் கைகடக்குங்
காலையு மாலைய கோகணப் போதுங் கடப்பரிதே. (94)

(இ – ள்) காலையும் மாலையும் - விடியற்காலத்தும் சாயங்காலத்தும், அஞ்செழுத்து ஓதி - பஞ்சாக்கர செபஞ்செய்து, எக் காலையும் - எந்தக்காலத்திலும், தென் காலையும் மாலையும் சேர் - தென்றற் காற்றையும் மேகத்தையுஞ் சேர்ந்திருக்கின்ற, செண்பக அடவி கண்ணுதல் - செண்பக வனத்திலெழுந்தருளியிருக்கின்ற நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது, பொன் காலையும் - பொன்போன்ற திருவடிகளையும், மாலை உற - ஒழுங்காக, வணங்கீர்-வணங்கமாட்டீர்கள், உயிர் கைகடக்கும் காலை - உயிர் உம்மைவிட்டுப் போகும்போது, ஐயகோ - ஐயோ, உமால் - உம்மாலே, கணப்போதும் - ஒரு கணநேரமும், கடப்புஅரிதே - அதனை வெல்ல முடியாதாகிவிடுமே. (எ – று).

ஓதி வணங்குவீராயின் குற்ருலநாதர் திருவருள் செய்வா றென்றது குறிப்பு. கைகடக்கும் என்பதிலகை உபசர்க்கம்.

கடம்ப வனத்த கழைவனத் தாய்கமழ் மாமலையக்
கடம்ப வனச்சண்ப காடவி யாய்கவி வாணர்தொண்டர்
கடம்ப வனத்தமி ழுஞ்சைவ வேடமுங் காப்பதுநின்
கடம்ப வனத்தர் பரவுங்குற் ருலக்கங் காதரனே. (95)

(இ – ள்) பவனத்தர் பரவும் - தேவர்கள் துதிக்கின்ற, குற்ருல கங்காதரனே - திருக்குற்ருலத்திலெழுந்தருளியிருக்கின்ற கங்கையைத் தரித்தவனே, கடம்பவனத்த - கடம்ப வனமாகிய

மதுரையம்பதியையுடையவனே, கழைவனத்தாய் - மூங்கில் வனமாகிய திருநெல்வேலியென்னும் தலத்தையுடையவனே, கமழ் - பரிமளிக்கின்ற, மா மலையம் கடம்பவனச் சண்பக அடவியாய் - பெரிய பொதியமலைப் பக்கத்திலிருந்து வீசுகின்ற தென்றற்காற்றையுடைய சண்பகவனத்தில் எழுந்தருளியிருப்பவனே, கவிவாணர் தொண்டர்கள் தம் - வித்துவான்கள் அடியார்களுடைய, பவனம் - சுத்தமாகிய, தமிழும் - தமிழையும், சைவ வேடமும் - சிவ சம்பந்தமான வேடத்தையும், காப்பது - காப்பாற்றுவது, நின்கடம் - உன்னுடைய கடமையாகும். (எ – று).

கடம் - மலைப்பக்கம். கடம் - கடன்; மகரனகரப்போலி.

தருமந் தரமுலை யார்வலை யால்வெளி தாவியுழி
தருமந் தரகணம் போற்சுழ லாது தவத்தருஞ்சித்
தருமந் தரத்தரும் போற்றுங்குற் ருலத்தைச் சார்ந்துசிவ
தருமந் தரணியிற் செய்வா ரவர்முத்தி சாதனரே. (96)

(இ – ள்) மந்தரம் தருமுலையார் - மந்தரமலைக்கு உவமை சொல்கின்ற தனங்களையுடைய பெண்களது, வலையால் - மயக்கமாகிய வலையினால், வெளி தாவி - புறத்தேசென்று, உழி தரும் - சுழலுகின்ற, மந்தர கணம்போல் - அறிவில்லாதவர் கூட்டத்தைப் போல, சுழலாது - சுற்றித்திரியாமல், தவத்தரும் சித்தரும் அந்தரத்தரும் - தவஞ் செய்வோரும் சித்தர்களும் தேவர்களும், போற்றும் - துதிக்கின்ற, குற்ருலத்தைச் சார்ந்து - திருக்குற்ருலத்தை யடைந்து, தரணியில் - பூமியில், சிவதருமம் செய்வார் அவர் - சிவதருமத்தைச் செய்பவரே, முத்தி சாதனர் - முத்தி அடைதற்குரிய வழியைக் கைக்கொண்டவராவார்கள் (எ – று).

புறஞ் செல்லுதல், ஒழுக்க நெறிக்கு மாருக நடத்தல்.

செய்வாரவர் என்பதில் அவர் பகுதிப் பொருள் விகுதி "சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனல்" இதிற் சிவனவனென்பதிற்போல.

சாதன மக்க மணிபூண்டு வேடமுஞ் சாத்தியம்பு
சாதன மக்கர மஞ்சுடன் சார்ந்து சரணபங்க
சாதன மக்கரித் தேந்தைகுற் ருலத்தைச் சாருந்தோண்டர்
சாதன மக்கரி தாமெளி தாமவன் ருட்கஞ்சமே. (97)

(இ-ள்) தொண்டீர் - அடியார்களே, சாதனம் அக்கமணி பூண்டு - சைவசாதனமாகிய உருத்திராக்க மணியை யணிந்து, வேடமுஞ் சாத்தி - விபூதி முதலிய சிவவேடத்தையும் தரித்து, அம்புச ஆதனம் - பதுமாசனத்தில், அக்கரம் அஞ்சுடன் சார்ந்து - பஞ்சாக்கர செபத்தோடு கூடியிருந்து, சரண பங்க சாதம் நமக்கரித்து - திருவடித் தாமரைகளை வணங்கி, எந்தை குற்ருலத்தைச் சாரும் - என் தந்தையாகிய திரிகூடநாத ருடைய குற்ருலத்தைப் போய்ச் சேருங்கள்; அவன் தாள் கஞ்சம் எளிதாம் - குற்ருலநாதருடைய திருவடித்தாமரைகள் எளிதிற் கிடைத்துவிடும், சாதல் நமக்கு அரிதாம் - கேடு நம்மை அடையாது. (சாவாமையாகிய மோட்சம் அடைவோம் என்றபடி) (எ - று).

சைவ சாதனங்கள் : விபூதி, ருத்திராக்கம், பஞ்சாக்கரம். அம்பு சாதம் - நீரிற் பிறந்தது. பங்கம்சாதம் - சேற்றிற் பிறந்தது. (அம்புஜம் - பங்கஜம்).

கஞ்சனை யந்தத் துதித்தார் புகழ்மது கங்கைப்பிரான்
கஞ்சனை யந்தம் புரிந்தாற் கரியவன கானமறைக்
கஞ்சனை யந்தரத் தேவர் பிரான் கவுமாரியிசைக்
கஞ்சனை யந்த நடனபங் கேருகங் காப்பெனக்கே. (98)

(இ - ள்) கஞ்சனை அந்தத்து உதித்தார் - கண்ணுடியிற் (பிரதிபிம்பித்த தமது) சுந்தர (சொரூபத்தில்) தோன்றியவ ராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளாலே, புகழ் - புகழப்பட்ட, மது கங்கைப்பிரான் - சிவமது கங்கையையுடைய பெருமானும், கஞ்சனை - (மாமனுகிய) கஞ்சனை, அந்தம் புரிந்தாற்கு அரியவன் - உயிர் முடிவைச் செய்தவனுகிய திருமால் அறியமுடியாத வனும், கானமறைக் கஞ்சன் ஐ - இசையோடு கூடிய வேதத்தையுடைய பிரமனுக்குத் தலைவனும், அந்தரத் தேவர்பிரான் - ஆகாயத்திலுள்ள தேவர்களுக்குத் தலைவனும், கவுமாரி - உமா தேவியினுடைய, இசை கஞ்சம் நயந்த - இராகத்தோடுகூடிய கைத்தாளத்தை விரும்பிய, நடனபங்கேருகம் - நடனஞ் செய்கின்ற திருவடித்தாமரைகளே, எனக்குக் காப்பு - அடியேனுக்குக் காவலாகும். (எ - று).

காப்பவ னத்தும் படைப்பான் கமலமுங் கான்மணிப்போற்
காப்பவ னத்து வளைக்கைநல் லாய்கடல் வாய்விடத்தங்
காப்பவ னத்துங்க நன்னகர்க் கேயொப்புக் கண்டதன்றிக்
காப்பவ னத்தும் பிலநாக லோகத்துங் கண்டிலமே. (99)

*(இ-ள்) காப்பவன் நத்தும் - காத்தற் கடவுளாகிய திருமாலினுடைய சங்கமும், படைப்பான் கமலமும் - படைப்புக் கடவுளாகிய பிரமனுடைய தாமரையும், கால் மணி பொற்காப்பு அவனத்து வளைக்கை நல்லாய் - ஒளி பொழிகின்ற மணிகள் அழுத்திய காப்பும், அலங்கரிக்கும் வளையலையும் அணிந்த அழகுடைய பெண்ணே, கடல்வாய் - கடலினிடத்துத் தோன்றிய, விடத்து அங்காப்பவன் - விடத்தை உண்ணுதற்கு வாயைத் திறந்தவனுடைய, அதுங்க நன்னகர்க்கே ஒப்புக்கண்டதன்றி - அந்த உயர்ந்த குற்ருலத்திலே உவமையைக் கண்டதல்லாமல், கா பவனத்தும் - கற்பக தருவையுடைய சுவர்க்க லோகத்தும், பிலநாகலோகத்தும் கண்டிலம் - பாதாளமாகிய நாகலோகத்திலும் கண்டோமில்லை. (எ - று).*

*இது தலைவன் தலைவியைப் புகழ்தல்.*

இலம்பக வாச லிடந்தோறுஞ் சென்றிர வாமற்கொன்றை
இலம்பக வார் சடையெந்தைகுற் ருலத்தி லெய்தியத்தம்
இலம்பக வாவென் றிரப்பார் தனத னிரப்பமெய்யின்
இலம்பக வாசவன் போல்வாழ்வ ராள்வ ரேழுபுவியே. (100)

*(இ-ள்) இலம்பக வாசலில் இடந்தொறும் சென்று - தரித்திரர்களுடைய வாசல்களிலெல்லாம் போய், இரவாமல் - யாசகஞ் செய்யாமல், கொன்றை இலம் பகவார் சடை எந்தை - கொன்றைமாலையைத் தரித்த நீண்ட சடையையுடைய எம்பெருமானது, குற்ருலத்திலெய்தி - குற்ருலத்தையடைந்து, பகவா - சிவனே, அத்தம் இலம் என்று - கைப்பொருள் இல்லேம் என்று, இரப்பார் - யாசிப்பவர்கள், தனதன் இரப்ப - குபேரன் தன்பால் வந்து யாசிக்க, மெய்யினில் அம்பக வாசவன்போல் வாழ்வார் - உடலிற் கண்களையுடைய இந்திரனைப்போல வாழ்வார்கள், எழுபுவி ஆள்வர் - ஏழுலகங்களையும் ஆள்வார்கள் (எ - று).*

முற்றிற்று.

சிவமயம்.

## மேலகரம், மகாகவி
## திரிகூடராசப்பக் கவிராஜ மூர்த்திகள்
### அருளிச்செய்த

# திருக்குற்றாலநாதர் உலா.

தேர்கொண்ட குற்றாலத் தேவாதி தேவனிசைத்
தார்கொண் டுலாமாலை சாற்றவே—நார் கொண்டு
செண்பக வினாயகருந் தென்னிலஞ்சி வேலருமென்
னண்பகவி னாயகரானார்.

பூமே வுலாத்தேர்ப் புரவலர் குற்றாலருக் கென்
னாமே வுலாத்தேர் நடாத்துமே—பாமேவு
பாரதியார் சொற்கலைகள் பாய்பரியாய்க் கும்பனருள்
சாரதியாய்ப் போந்தருளித் தான்.

கல்லாம் புணையாங் கன புனலா மேடெறியும்
பொல்லாத செங்கலுஞ் செம் பொன்னாமாம்—வல்லூமை
பேசுமா மக்கவிகள் பேசிவித்தார் குற்றாலத்
தீசனருள் பேசாதார் யார்.

பூமேவு கஞ்சம் பொறையுயிர்த்த புத்தேளும்
நாமேவு வெண்கமல நாயகியும்—நேமித்
திருப்பாற் கடலுடைய தேவுமுலை வெற்பாற்
பொருப்பாற் கடலுடைய பொன்னும்—மருப்பார்ந்த
வென்னிமலை யேறிவரு மேருமலை யும்பனிதோய்
வன்னிமலை வெற்பின் மடப்பிடியுந்—தெள்ளியசீர்
மூவரு முத் தேவியரு மென்னுமுறை தோன்றத்
தாவரு முத் தேவிரவு தாமம் போல்—மேவருபால்
முற்று வளர்க்கும்ப முலைசுரப்ப வூழிதொறும்
பெற்று வளர்க்குந்தரணி பீடத்தான்—மற்றுமயன்

பண்டுறைப்பாற் சொல்லப் பதினாயிரம் பருவந்
தண்டுறைப்பால் வானோர் தவம்புரியக்—கண்டு
பவத்துரோகந் தீர்க்கும் பல்விடை மேல்வந்து
சிவத்துரோகந் தீர்த்த தீரத்தான்—உவப்பாகும்
அஞ்சக் கரத்தினா லாவிலையும் புகலால்
மஞ்சு முளரிக்கண் மன்னுதலாற்—செஞ்ச
வரிகூட மாமல ரோனாதி யானான்
திரிகூட மாமலை வாழ்தேவன்—பரிவாற்
பவமதுகங் கைத்துறைவார் பத்தியில் தித்திக்குஞ்
சிவமதுகங் கைத்துறைவாழ் செல்வன்—குவடணியாற்
பண்பகத்தடாத கையாற் கொங்கைப் படாம் போலுஞ்
செண்பகத் தடாகத் திருந்தியான்—ஒண்பார்
விடவரு வித்தடக்கி விட்டருள் விண்ணுறும்
வடவரு வித்தடத்து வாணன்—படிபவர் பால்
அங்கமல மாமருவி யாம்பல்கழு நீராய்த்
தெங்கமல மாமருவி தீர்த்தத்தான்—ஒங்கடி யார்
மாதவள சங்கமுக மாத்திரைபோல் வீற்றிருக்கும்
வேதவளச் சங்கமுக வீதியான்—வேதம்
பெறும் பலவின் மூலப்பிரணவ மூடான
குறும் பலவின் மூலக்குழகன்—உறும்பலனைப்
பொற்றால நன்னகரம் புக்கார் புகவிரும்புங்
குற்றால நன்னகரக் கோயிலான்—முற்றாலத்
தெய்வ முரசார்க்குஞ் சித்திரப்பூ மன்றத்துச்
சைவமுர சார்க்குந் தாண்டவத்தான்—சைவமன்றி
ஆடுதின்ற தக்கன் மகவாயதன் றிமையக்
கோடுதந்த செல்வக் குமாரியார்—நீடுதவஞ்
செய்யுநா ளெந்தைமணஞ் செய்யவருநாள் நமக்கோ
ருய்யுநா ளென்றுலக மோரேழும்—பெய்யு
மதுமணக் காவணத்து வானோர் குழாமும்
புதுமணக் காவணத்துப் போத—அது பொருட்டால்
தென்பா லுயர்ந்து வட திக்கெலாந் தாழ்ந்தது கண்
டன் பாற் குறுமுனியை யாங்கழைத்து—முன்புநாம்
வாங்கா மலைசிலையாய் வாங்குநா ளோரடிக்குத்
தாங்காத தேர்முழுதுந் தாங்குமோ—ஆங்கதற்குஞ்

சாரதிக்கு மைந்தனு நீ தானன்றோ வாதலினால்
நேர்சிறுத்த யாம் வேண்டு நீ வேண்டும்—யாரிடத்தும்
போற்றுபர நாமதிகம் புங்கவர்க்கு ணீயதிகஞ்
சாற்று மூவாறில்த் தமிழதிகம்—யேற்ற
தலங்களிற் குற்றாலத் தலமதிக நான்குந்
துலங்கிலன்றோ தென்பால் துலங்கும்—நலம்பெருகும்
முத்தேவு மாகியந்த முக்குடுமி வெற்பகத்தே
யெத்தேவும் போற்ற இருக்குநாஞ்—சித்திலையன்
போலாகி முன்னாட் புவிபடைத்தே மின்னாளில்
மாலாகிக் காத்து வளர்கின்றோம்—மேலான
சீதத் தமிழாற் சிவமாகப் பூசை செய்யப்
போத்த் தமிழ்முனி நீ போதுகென—காதல்
விடைபெற்ற பொன்மலையை விட்டகன்று பாரச்
சடை பெற்ற பொன்மலைபோற் சார்ந்து—படைபெற்ற
வாதாவி வில்வலனை மாய்த்து வினை சாய்த்து
மீதாவி வில்வலனும் வெய்யோனை—போதாமல்
வாதுகொண்ட விந்த மதமடக்கி நம்பரனைத்
தூதுகொண்ட மிக்கதமிழ்ச் சோணாட்டை—மோதுதிரைப்
பொன்னி நாடாக்கிப் பொதிய தமிழ்நாடு
கன்னி நாடாக்கக் கருதியே—பொன்னின்
விரிகூட வெற்பை யொருவெய்யவன் சூழ்ந்தென்னத்
திரிகூட வெற்பை வலஞ்செய்து—கிரியருவி
தேரினாரு பாலாட்டுந் தடம் பார்த்துக்—கானொருபால்
மூவாதிருக்கு முனிவர் குகைபார்த்துச்
சாவாத மூலித்தலம் பார்த்துப்—பூவாது
காய்த்த மரை மூலக் கனி பார்த்துக் காயாது
பூத்த தனிமூலப் பொழில் பார்த்துப்—பூத்ததிலே
வண்டு படரா மலர் பார்த்து வானுவருங்
கண்டு நிலையாக் கடல்பார்த்துக்—கொண்டொருவர்
எற்றாச் சிலைபார்த் தெழுந்தலாவும் போக்குந்
தோற்றாக் களுநீர்த் துறைபார்த்து—நேற்றுப்
பிறந்தோ ரிறவாப் பிறவா பார்த்
திறந்தோர் பிறவா விடம் பார்த்து—அறந்தனைக்குங்
குற்றாலமீதோ குறும்பலாச் சாயை யிதோ

வற்ரு வடவருவி வைப்பிதுவோ—கற்றிரளாய்
மாவாய் மரமாய் மனிதராய்த் தேவரெல்லாந்
தாவாத் தவம்புரியுந் தானமிதே—மேவுமலே
வில்லார் தலைநான் விதியா யிருந்துலக
மெல்லாம் படைக்கு மிடமிதுவோ—சொல்லாப்
பரம ரகசியங்கள் பார்க்கவேண்டு மென்ருே—நம்மைப்
பிரமாத் தவம்புரிந்து பெற்ருர்—தாம்வேறு
காட்டினர் போலப் பலமுள்ள காட்டி லெம்மை
வோட்டின ரன்ருே வுமாபதியா ரீட்டுதலங்
காணுதற்கு மெந்தையிரு கண்ணல்லா லாயிரங்கண்
பூணுவித்தா னில்லைப் பொருமையோ தாணுவைத்தான்
நன்னகரிற் கண்டன்ருே நாளுமிந்தி ராதியர்கள்
பொன்னகரில் வாழப்புகல் பெற்ருர் என்னக்
களிகூர்ந்து செக்கமலக் கண்ண னுறைகோயில்
வெளிவாயி லுத்தரபால் மேவத் தெளியா
வயிணவர்கள் சைவருக்கே வாயில் தடையென்னப்
பயிரவரும் பாரார்போற் பார்ப்பக்—கயிலையில்வாழ்
அண்ணலடி போற்ருத வந்தணரைக் கோதமனுங்
கண்ணுவனு மிட்ட கடுஞ்சாப நண்ணுமற்
போமோ வெனப்புறமே போந்துசிவ பூசைமுற்றி
தாமோ தரனடியார் தம்மைப்போல்—மாமோன
ஞானமொருமுத்திரையால் நண்ணியொரு நாரணனூர்
தான் சமயம் பரவத் தானேகி—வானளவுங்
கோல வடமேரு நிகர்கோயிலி மாயனென
நீல வரைபோ னிமிர்ந்து நின்ருனைச் சாலப்
பவளவரை போலாகப் பாவித்து தானேர்
தானவரை போலநீறு சாற்றிச்—சிவனருளே
பாடிப் பணித்து பரவிப் பலமுறை கொண்
டாடிச் சிவானந்த மள்ளூறி யாடகவிற்
செங்கரா தேவா திகம்பரா வேதாந்த
சங்கரா சம்பூ சதானந்தா—பொங்கரவா
குற்ருலநாதா குறுகு குறுகென் றென்று
பொற்ரு ளிணைகுறுகிப் போற்றுதலும்—வற்ரு
தருள்பெருக மென்மே லறம்பெருக வெங்கும்

பொருள் பெருகப் போதம் பெருகத் — தெருள்பெருகச்
சாற்றுந் தமிழ்பெருகச் சைவநெறிபெருக
நாற்றிசையில் தென்பா னலம்பெருகப்—போற்றுமுனி
தீர்க்கம் பெருகச் சிவமயமா கக்குறுகி
யார்க்கும் பெரியபிரா னாகினோன்—ஏர்க்கும்
பாவலன்பாற் பாணனுக்குப் பாட்டெழுதும்சீட்டும்
புரவலன்பால் விட்ட புலவன்—சுருதி
வனப்படிக் காசிட்டு வடித்த தமிழோர்க்குத்
தினப்படிக் காசிட்ட தியாகன்—முளைத்தும்
பொருது பிரமாதி யர்க்குப் போர்மாலைமாற்ற
விருது சிரமாலை யிட்ட வீரன்—சுரரும்
இறவாமைக் காலமுண்டோ னானம் பெருமானென்றும்
பிறவாமை தோன்றும் பெருமான்—அறவாழி
மூவர் பெருமான் மொழியுமாறு சமையத்
தேவர் பெருமான் சிவபெருமான்—மேவ
அரிய சிவலோகத் தருமைப் பெருமான்
பெரிய சிவலோகப் பெருமான்—அரிபிரமா
வானோர் முனிவோர் மறையோர் முதலானோ
ரேனோருங் காட்சி யெமக்கென்ன—கானோங்கு
மேல் விடபத்து விண்ணிடப மேறியெனக்
கொல் விடபக் கொடியேற்றி—ஆலயத்தும்
மேவா மரமும் விலங்கொடுபுள் ளும்பரவித
தேவாம் பெரியதிரு நாளிற்—பூவாழு
மூவேந்தர் தங்கள் முறையியற்ற வந்துவந்து
தேவேந்தர் போற்றுந் திருநாளிற்—பாவேந்தர்
முத்திரைசெய் பங்குனியில் மும்மூன்று னாளுலவிச்
சித்திரை நீராடுந் திருநாளில்—அத்தனார்
காட்டிடுமெய்க் காட்டொருனாட் கண்டிடுவோ ரிந்திரர்க்குஞ்
சீட்டிடுமா திக்கத் திருநாளில்—வேட்டொருநாள்
பூமேலயனாகிப் புண்டரிகக் கண்ணனெனத்
தாமே யிரண்டாநாட் சார்ந்தருளி—மாமூன்றிற்
போத வுருத்திரராய்ப் போந்தருளி நாலாநாட்
சீதவயல் சூழ்கீழவைச் சின்னணைஞ்சான்—காதலனும்
பேகன் வீரப்பன் பெரிய சுவாமிதந்த

வாகன வெள்ளேற்றின் மகேசரரா—யாகுநாள்
ஐந்திற் சதாசிவமே யாகியருள் செய்வரென
துந்துமி தடாரி துவைப்பவே—விந்தை
அணங்குகுழல் வாய்மொழியென் னம்மை மணக்கோல
மிணங்கு திருப்பள்ளி யெழுந்தும்—அணங்கவன்சொற்
காதலித்த தென்ன கருப்பம்பால் முக்கனிகள்
சீதநறும் பாலாடித் தேனாடி—மோதுபன்னீர்க்
கொங்கை யுவந்தாடிக் கும்பமிள நீராடிக்
கங்கையெனத் தெண்ணீர் கலந்தாடிப்—பொங்குதிசை
மேலாடை யுட்சாத்தி மேற்சாத்தி னாற்பலைய
மாலானா ரென்னும் வகைதோற்றி—நாலெளின்
மற்றச் சிவாகமமேல் வைக்கும் குடாகமத்தாற்
கொற்றத் திருப்பூசை கொண்டருளி—நெற்றிக்குப்
புண்டரமுஞ் சாற்றி பொலிவாய்த் திரிகூட
மண்டபத்தி லாசனமேல் வந்திருந்து—பண்டுதுயில்
கொப்பா யிசைந்து திருக்கோயி லொரு வாயிலுக்குங்
காப்பா யணிந்த திருக் காப்பணிந்து—மாப்புணரி
சாலமிடலென்று செவிச்சாற்று மகரம்போற்
கோல மகரக் குளைதரித்துக்—காலந்
திரித்ததுபோய் மேருச் சிகரமிசை வெய்யோன்
றரித்தது போற் பொன் மகுடந்தாங்கிக்—கிரிப்பெண்
புடை பொங் களவிடத்தைப் பொங்காமற் கட்டுந்
தடைபோலக் கட்டுவடஞ்சாத்தி—விடவேகம்
அண்டரனக் கொண்ணா வமுதமய மானதெனத்
தண்டரனக் கண்டசரம் பூண்டு—மண்டலமிட்
டேகு குளையா மிருசுடர்மேற் கோளனைய
வாகு வலையம் வயக்கியே—தோகையுமை
கொங்கையா விட்டகுறி மறைப்பக் கங்கையான்
செங்கையால் வெண்சேறு தீற்றியதோ—வெங்கதிருந்
தோற்ற வொளி தோற்றுமூற் றும்பிதரு போர்வைவிட்டுப்
போற்று மடலாளியுரி போர்த்ததோ—வேற்றுதிரு
வுள்ள நிறையன்பு முயர்க்கருணையும்பெருகி
வள்ளலார் மார்பில் வழிந்ததோ—தெள்ளுங்
குவலையமும் விண்ணுலகுங் கொண்டபெருங் கீர்த்தி

யவயவ மெல்லாம் பரந்தவாறு—சுவைகளெட்டும்
மினமலையச்சாந்தம் பெருக் கெழுந்ததோ வெள்ளத்
தென்மலையச் சாந்தநறுஞ் சேறணிந்து—பொன்மலையை
நேர்பெற வில்லாக்கியநான் நெற்றிக்கண் ணாலுருகி
மார்பிலிரு பாலும் வடிந்ததோ—தார் பொதுளுங்
கானமலர்க் கூந்தற் கவுரியிமை யாசலப்பெண்
பீனதனத் தேமல் பிதிர்ந்ததோ—மீனவிழிக்
கங்கையிட்ட பொன்னோ கலியாணச் செல்விமலை
மங்கையிட்ட பொன்னரிய மாலையோ—விங்கிதென
மின்னிதழினால் முருக்கை வென்று ரதிசயிப்ப
பொன்னிதழிமாலை புனைந்தருளி — முன்னிகவி
வித்தாரச் சந்திரரும் வெய்யவருஞ் சூழ்வதென
முத்தார மும்பதக்க மும்பூண்டு—மைத்தகளங்
காரொழுக்க மின்னொழுக்கங் காட்டுவது போற்கழுநீர்த்
தாரொழுக்க நூலொழுக்கந் தாபித்து—சீரியகைக்
கற்பகத்தைக் காமவல்லி சுற்றியெனக் கங்கணமும்
பொற்கடக முந்தொடியும் பூட்டியே—முற்கடுப்போல்
உண்ணாவரோ வென்றுபசி யோரமுதம் போலானார்
தண்ணாதா பந்தனமுஞ் சாற்றியே—யண்ணலுக்குப்
பன்னகனாணன்றிப் படர்சிலைநானானதெனப்
பொன்னரை நாண்போலப் பொலிவித்து—முன்னுதிசை
யொட்டா முடைத்தாரம் பன்னியருக் கீய்ந்துகொண்ட
பட்டா முடைத்தாரம் பாங்கமைத்து—கொட்டியதோர்
ஆயிரங்கைப் பேரியன்றி யம்மைதிருத் தானமன்றிப்
பாயிரவே தச்சுருதிப் பண்ணன்றித்—தூயதுடிக்
கைவளக்க மன்றியிரு காலமுறைதப்பாது கொட்டுந்
தெய்வமுர சென்னச் சிலம்பணிந்து—நல்விதனை
யேற்கும்ப வளவெற்பி லிந்திரவிற் போல்மணிகள்
சேர்க்குந் திருவாசிகை சேர்த்துத்—தார்க்குலவு
வேணி மயிலோடி விரைந்தொளிப்பச் செம்பாதிக்
காணி மயிலங்கே கலாபிப்ப—வாணிச்
சுருதியவ ளூடலுக்குத் தூதுசெல்வ தொப்பப்
பருதிதன தெக்காவாற் பார்ப்ப—பொருவனக்குத்
தொண்டன் பிறப்புந் தொடருமெதிர் காட்டியெனப்

பண்டைநிலைக் கண்ணுடி பார்த்தருளித்—தண்டாத்
தேவாரப் பண்ணுந் திருவாசகத் தமிழும்
பாவார் திருவிசைப் பாப்பல்லாண்டும்—நாவார்
சிவபுராணக் கவியுஞ் சேரர்கோன் பாட்டுஞ்
சிவபிரான் கொண்டருளிச் செய்து—நவமாக
வெற்றியண்ட கூடத்தில் மேருவை யேடாயெழுதப்
பெற்ற கணக்காயப் பிள்ளையுங்—கொற்றவேல்
காட்டு கடலிற் றேய்த்து கற்பொடியிட்டுச் சூர்மேல்த்
தீட்டி முனைபார்த்த சேவகனும்—நாட்டம்
படைத்தசிவ மாம்பயிர்க்குப் பால்பாயப் பாயா
துடைத்தகாலை வெட்டு முளவோனு—முடச்சமணர்
தாக்குமணி சிதறித் தாலமெங்குஞ் சைவமணி
கோக்கும் பரசமய கோளரியு—மாக்கல்
கடல் செலுத்தி ஞட்டிற் கவிமதுரச் செங்கோ
லடல் செலுத்து நாவுக்கரசும்—படர்செலுத்தும்
அல்லென்றும் பாராம லாண்ட வனைப் பெண்தூது
செல்லென்று சொல்லிவிட்ட தோழனும் — நல்ல
மருந்துறையுந் தானமறைத்துறையிற் றேடிப்
பெருந்துறையிற் கண்ட பிரானும்—மருந்தமிழால்
ஆதியுலாப் பொன் வண்ணத் தந்தாதி சொன்னவனும்
வீதியுலாக் கண்ணுபழி மீட்டோனும்—பாதியெல்லாந்
தேவியெனக் கண்டுமொரு தேவியை நந்தேவனுக்கே
ஆவியெனக் கைக் கொடுத்த வண்ணலு — மேவியசீர்
அந்தாதியாற் புகழ்ந்த வம்மனையு மட்டகிரி
பந்தாடும் பூதப் பதாதிகளும்—நந்தாத
தொண்டர் குழாங்களுந்தான் சூழ்ந்த சமையத் தொகையு
மண்ட ரெல்லாம் போற்று மடியாருந்—தொண்டிரைபோற்
கோபுரவாசற் கொள நிறைப்பத் தேவரெல்லா
மீபுரவலல் வெளியடைப்ப—மாபுரத்துச்
செல்லன்மின் செல்லன்மின் றேர்ப்பவனி சேவியுமி
னில்லுமினென்று நம்பிநேர் நிறுத்த—வெல்லுமிசைத்
தேவர்பிரானுர் திருவாடு தண்டின் மேற்
பூவலர்தார் வல்லியுடன் போந்தருளி—மேவுபெரும்
மாகடலைத்தாவியம்பொன் மந்தரம் வந்தாலனைய

*வேக்டலா மணித்தேர் மீதேறிச்—சேகாத்து
வாலமதி யைத்தொடர்ந்து வட்டமதி வந்ததெனக்
கோலமணி முத்தின் குடைநிழற்ற—மேலதனைக்
காலவட்ட சூரியர்கள் கண்டுதடு மாறுதல்போ
லாலவட்டம் போன்விசிறி யாங்கசைப்ப—மூலந்தீ
வாழ்வதனைக்கண்டு வருந்தி யெல்லாமயங்கி
வீழ்வனபோல் வெண்கவரி மேலிரட்ட—வாழித்
தடைக்கொடியா லாதவன்றேர் தாழ்க்கு மறுகில்
விடைக்கொடிமுன் போய்நிலவு வீசக்—கொடைப்பெருமைத்
தம்பிரான் வெள்ளிமலை தான்படைத்த தென்னவிடை
நம்பிரான் முன்னே நடந்தேக—வம்புயத்து
மைந்தனொரு புன்றேற மைந்தனைமுன் பெற்றெடுத்த
தந்தையொரு புள்ளரசு தானேற—வைந்தருவில்
அவ்வரசு நான்கு கோட்டத்தி தனி லேறமழுச்
செவ்வரசர் பன்னிரண்டு சேவேற—வெவ்வுதயர்
பன்னிருவர் தேரேறப் பைம்பொன் விமானத்து
முன்னிருவர் நாலிருவர் மொய்த்தேற—வன்னி
தகரேறச் சண்டன் கமைந்து கடாவேற
மகரமிசை யேற வருணன்—பகரும்
நிருதி நாவாகனத்து நீலப்பவனன்
பொருகலையிற் புட்பகத்திற் பொற்கோ—னிருதியோர்
தண்டரனத் தேரிற்றவமுனிவ ரோரெழுவர்
வெண்டரளப் புட்பகவிமானத்துச்—சண்ட
வயிரவர் சுவானத்து வாம்பரி மாசாத்தர்
பெயருமத வேழப்பிடரி—லுயர்மதப்
போரேறு காமன் புரவிகிளி சேர்த்தொருகாற்
றேரேறி வில்லெடுத்துச் சேவிப்பப்—பாரேறு
சித்தர் மகாமுனிவர் தேவர்கணநாதர்
வித்தகர் கந்திருவர் வேதாளர்—பக்தியாழ்
கின்னரர் கிம்புருடர் கிங்கிலர் மாகருடர்
பன்னக ராதிபதி னெண்மர்—துன்னி
வரைப்பொரு மாகடலை வந்து வளைந்தேழு
திரைப் பொங்குமாகடலார்த் தென்ன—விரைப்பமணி
மார்பழகு காணுதொறும் வல்லியிமை யாசலப்பெண்*

போர்ப்பழகு கொங்கை மலை பூரிப்பப்—பேரழகை
யொண்கமலப் பாகிரதி முகமோ ராயிரமுங்
கண்களாய்க் கண்டு களிகூரத்—தண்கமலப்
பூமகளு மேழுகலைப் பூமகளு மைந்துகுலக்
காமகளு மெண்ணெண் கலைமகளு—நாமத்
தருமகளிர் போற்றுஞ் சயமகளும் வீரத்
திருமகளு மாமியில்லாச் செல்வ—மருமகளைச்
சூழ்ந்து வலம்புரியைச் சூழ்கொடிச் சங்கம்போல்
வாழ்ந்து முறைமுறையே வாழ்த்தெடுப்பத்—தாழ்ந்துவட
கங்கைமுத லோரெழுவர் காளிமுத லோரெழுவர்
செங்கை குவித்துமுன்னே சேவிப்பப்—பொங்குதலில்
பம்பை தடாரி பதலை துடிதிமிலை
வெம்படகந் தக்கை வியன்முழவம்—பம்பு
கரடிகை சல்வலரி கல்லவட மொந்தை
முருடி திடிமன் முழங்கத்—திரள்வாணன்
ஓரா யிரங்கை முரசொலிப்பப் பானுகம்ப
னீரா யிரங்கையிற் சங்கொத்திசைப்ப—நேரே
செவியிலிரு வரிசைத் தேன்பொழிய யாழோர்
அவிசொரியும் பண்ணமுத மாட்டத்—தவிராக்
கலைவளைத்த திங்களங் கண்ணியான் வந்தான்
மலைவளைத்த வில்லாளி வந்தான்—கொலைவிளைத்த
வேடக்கொடியனுக்கும் வெற்றான் கவர்நரிக்குங்
கூடக் கதிகொடுத்த கோன் வந்தான்—மாடத்து
மேதகு மாமறையோன் வேசையாற் கள்ளுண்ட
பாதகந் தீர்த்தபரன் வந்தான்—நீதமில்லா
ஆபாத வேதியனுக் கன்றுமந்த மாருதத்தால்
மாபாதகந் தவிர்த்த மால்வந்தான்—பாபம்
பழிவிலங்கு செய்யாமை பார்த்து நமன்றூதர்
வழிவிலங்கு நாருடையான் வந்தான்—மொழிகடந்தான்
நாதத் திரிகூட நாயகன்வந் தானென்று
சீதத்திருச்சின்னஞ் சேவிப்பப்—பேதையரும்
நாகப் பெதும்பையரும் ஞாலத்து மங்கையரு
மாகத்தி லுள்ள மடந்தையரும்—போகத்தர்
பூமி யரிவையரும் பூநீர்த் தெரிவையருங்

காம்ருவு பேரிளம்பெண் கன்னியரும்—நாமத்
திருமகளார் பண்ணைத்திரளும் வரையி
லரமகளி ராயமு மாக—நிரை நிரையாய்
மாடமுஞ் சூளிகையு மாளிகையுஞ் செய்குன்றுங்
கூடமு மண்டபமுங் கோபுரமும்—நாடக
சாலையுஞ் சித்திரப் பொற் சாளரமுஞ் சிங்காரச்
சோலையுங் கார்மறுகுஞ் சூழ்மறுகும்—வாலமட
மான்போற் குயில்போல் மயில்போல் மடப்பிடிபோற்
றேன்போல் மதுரச் சிறுகிளிபோல்—மீன்போல்
விழியார் நெருங்கி வடவெற்பு மதிவேளு
மழியாத் தாருவனத் தாருவனத்தாரும்—பழையபகை
வெல்லவென்று சொல்லி விடுபடையுஞ் சின்னமும் போல்
வல்லசங்க வீதியெல்லாம் வந்தீண்டி—தொல்பாணை
முன்னீரிறைத்து முழுக்காட்டு வாரணம்போற்
பன்னீ ரிறைப்பப் பணைமுலைக — ளன்னீர்பொற்
பூந்தளிருங் கொண்டீர் புனையீரெனப் புலம்பு
மாந்தளிர்பொற் செங்கை வளைபுலம்ப—வேந்துபுயக்
காவியுஞ் சண்பகமும் கண்டுவண்டு வீழ்வனவும்
போவனவும் போல்விழிகள் போய்மீளத்—தாவியளி
செல்லுவது மீள்வதுவுந் தேவனுடன் பூவையர்மால்
சொல்வதுவு மீள்வதுமாந் தூதேய்ப்ப—வல்குலெனும்
விந்தை கடற்சுழியால் வெல்ல வொளிட்டதென
வுந்திச் சுழிக்கலையி னூடொழிப்பப்—பந்திப்
புயங்களொரு நான்கும் புதுமலர்க்கண் மூன்றும்
வயங்குதிருக் கைமிசைமான் மழுவுந்—தயங்கு
புரிநூன் மணிமாலைப் பொங்கருவி தூங்கும்
வரைபோ லிலங்கு தடமார்புந்—திரைமேய்ந்த
கார்பூத்த கந்தரமுங் கங்கா நதிமுடித்த
தார்பூத்த திங்கட் சடாடவியும்—நீர்பூத்த
பாதாம் புயமும் பரிபுரமுஞ் சோதிமுகச்
சீதாம் புயமுந் திருக்குழையும்—நாதாந்த
நாதனை யாரூர்க்கு நாயகனைத் தில்லையில்வாழ்
போதனை வேணு புரத்தானை—வேத
வனத்தானை யண்ணு மலையானை யையா

னனத்தானைத் தென் மதுரை யானைக்—கனத்த
திரிகூடத் தானைத் திசைகூட மாவி
னுரிகூடத் தானை யுரியானை—யரியானைக்
கண்டு பரவித் திருதையங் கண்ட மலர்ப்
புண்டரிகக் கான்போற் பொலிவெய்தித்—தண்டரளத்
தொங்கலால் வெண்குடையாற் சோதிப்பொற் கங்கையொடு
திங்கள் முடித்ததிருத் தேர்பாரீர்—பொங்குசுடர்
ஆழிசங்கக் கோயி லகிலமெல்லா முண்டுமிழும்
வாழிசங்கக் கோயில் வளம்பாரீர்—ஊழிதங்கு
தீதிலயன் போலத் திசைமுகத்தோ டாரணங்கள்
வீதி சிறந்த விதம்பாரீர்—ஆதிபிரான்
வேதத் திருக்கோலஞ் செய்யும் விரைமலர்த்தாட்
போதத்திருக் கோலம் போற்றுவீர்—மாதரீர்
வீதிவள மோபணில வீதியுடை யான்றிருத்தேர்ச்
சோதிவள மோபெரிது சொல்லுமென்பார்—ஓதிரண்டு
புண்ணியனைக் காட்டும் பொருளன்றோ வாதலினாற்
கண்ணிரண்டை யார்பிரிப்பார் காணென்பா—ரண்ணலுக்குத்
தேனமுத வெள்ளத் திரட்டோ தெவிட்டாத
வானமுதந் தானோ வடிவென்பார்—ஆனதுவாங்
காமப் பசிக்குநமைக் கைதொடவொட்டாம லென்னோ
வாமத் தொருத்திகுறி வைத்ததென்பார்—காமமெல்லாம்
ஈட்டுமிடக் கண்ணோ விடக் கணுக்கே யாதிக்கங்
கூட்டுவலக் கண்ணோ கொடிதென்பார்—மீட்டுரைக்கின்
மற்றைக்கண் மேற்குறையோ மாமனுக்கா திக்கமிட்ட
நெற்றிக் கண்மேல் நிபமென்பார்—முற்றிழை சேர்
ஆணிக் கனகவல்லி யாதி யகி லாண்டவல்லி
மாணிக்க வல்லிபுணர் மாமலையே—பூணித்துப்
புத்தித் திருக்கொழித்துப் போதானந் தக்கடலில்
தித்தித் திருக்குமின்பத் தெள்ளமுதே—சத்திக்காய்
தட்டிலிருந் தாடித் தருதாணு மாலையப்பூந்
தொட்டி லசைந்தாடு தோன்றலே—கட்டழகு
வாமவல்லி யானமலை மங்கையொடு கங்கையெனுங்

காமவல்லி நின்றுபடர் கற்பகமே—பூமகரஞ்
சங்கந் திருசணி சங்கமத்துத் தண்பிறையாம்
வங்கந் தவழுமின்ப மாக்கடலே—யிங்கிதுதான்
கலைசேர் வாகமத்தைக் கண்டீரெம்பாலுங்
கலைசேர் வாகமத்தைக் காணீர்—கலைசோர்
மானுமதி யும்வளர்த்தீ ரெங்கண் முகமா
மானு மதியும் வளர்க்கிலீர் — காமெங்கும்
காக்கை சேராமற் கடிந்தீர் கருங்குயிலுங்
காக்கை சேராமற் கடிந்திடீர்—காக்கைநெடு
மாலாய்ப் பிரமமாய் வைகினீர் யாங்களெல்லா
மாலாய்ப் பிரமமாய் வைகவோ—மேலாரின்
கொங்கை முகந்தருளிக் கொன்றையுகந் தீரெமது
கொங்கை முகந்தருளக் கூடாதோ—மங்கைக்காய்
அன்றிலங்கை புக்கீரவன் போலப் போம்வாரு
மென்றிலங்கை புக்கே மெளியேமோ—தென்றலைவீண்
பொங்கலிடுத் தூணுறக்கம் போக்கினீர் குற்றமெம்போற்
கங்கணமுஞ் செய்ததுண்டாற் காட்டுவீர்—கங்கையராம்
பன்னகரார் வாடப் பகலிரவா மின்னகரு
நன்னகரோ குற்றாலநாதரே—முன்னம்
விடவசனங் காட்டு மிடற்றீர் சந்தர்ப்பம்
விடவசனங் காட்டியெமை மேவீர்—கடவதெனச்
சேமத்தே ரல்குலார் சென்றுரைப்ப நம்பெருமா
னாமத்தேர் வீதி நடாவுதலுங்—காமத்தேர்
தானுங் கடாவிநெடுஞ் சாரிகைபோய் வேளுலக
மீனுங் கடவுளுட னேகினான்—றானுமொருப்
பேதை சிறுபருவப் பெண்பிள்ளை பஞ்சரத்துப்
பாதை யறியாப் பசுங்கிள்ளை—கோதுதளிர்
ஓங்கும் பரம்பொருளா ருய்யான செண்பகத்தின்
பூங்கொம்பி லாடாப் பொலந்தோகை—வாங்குசிலை
ஈட்டுநுதல் மூன்று மிளம்பிறபோறீ காட்டியதிற்
கோட்டுமிருள் போலுங் குழலினாள்—நாட்டுக்குப்
பண்டென்ற செஞ்சொற் பதினெட்டோ டின்னமுமொன்
றுண்டென்று கீட்டு முரையினாள்—வண்டுபோல்
அம்புபோல் வாட்போ லடையாளம் பெற்றதல்லால்

வெம்புபோர் செய்யா விழியினாள் — பைம்புலன்சேர்
மாமணலி னுள்மறைந்த வாயிலிகும்பம்போல்
நாம நெடுங்கடமை நாகம்போற் — பூமேல்
விளைக்கநா ளிட்டவின்றை வித்துப்போல் நாளை
முளைக்க நாட்பார்க்கு முலையாள் — கிளைத்ததந்தக்
கூம்பல் முளரித் துணைபிறவாக் குற்றத்தா
லாம்பல் பிறந்திறக்கு மல்லியாள் — தேம்புதென்றற்
கன்று தனைப்பிடித்துக் காட்டென்பள் நாசியிடைத்
தென்றலினைக் காட்டத் திடந்தீர்வா — ளொன்றுசெய
வொன்று விளைத்திடுவா ளொன்றைநினைத் தொன்றை யெடுத்
தொன்றைவிடுத் தொன்றை யுரைசெய்வாள் — முன்றிலிடைத்
தாம்பைப் பிடிக்குந் தரம்போல வூருகின்ற
பாம்பைப் பிடிக்கும் பராயத்தாள் — பூம்பாவைச்
செய்க்குரைக்கு முண்மையாள் சிற்றிலைச்சிற் றூறழிக்க
தாய்க்குரைக்க வோடுந் தகைமையாள் — வாய்க்குணவா
யுண்ணுவதும் வெண்மணற்சோ றாட்டுவது போல் மார்க்கம்
பண்ணுவது மெய்போலப் பார்த்திருந்து — வண்ணமாய்
பிள்ளை தனை யூட்டியந்தப் பிள்ளையுண்ணுக் குற்றமெல்லாங்
கிள்ளையுட னேதோ கிளர்த்துவாள் — கிள்ளைபோற்
பாவைதனைச் செஞ்சொற் பயில்விக்க வேணுமென்று
பூவைதனை வேண்டிப் புகலுவாள் — பாவைதனக்
கூட்டமுலை வேணுமுனைப் போலெனத் தாய்முன்
கூட்டமிடு வாளதற்குக் கோதைமார் — ஆட்டமிடுந்
துங்கமணற் சிற்றிடைச் சோறுண்டாம் போதுனக்குக்
கொங்கையுண்ட மென்றுகொடுசெல்லச் — சங்கையில்லா
அண்ட மெல்லாஞ் சிற்றிலா யாதிபரை யாமொருத்தி
வண்டலயாச் சங்க மறுகிலே — விண்டலைபாய்
தேனருவி தன்னிற் சிறிய மணிகொழித்து
வான மதிலும் வளைமறுகும் — ஞான
வலம்புரிக் கோயிலும் வாயிலு மாக்கிப்
பிலம்புரி வாயிற் சத்திபீடம் — நலம்புரியுந்
தெய்வக் குறும்பலவுஞ் செய்துகுழல் வாய் மொழியாற்
சைவப் பெருமானைத் தானமைத்து — மைவைத்த
கண்ணுரைக் காணுக காணுக வென்றழைத்துக்

கண்ணார முதனையான் காட்டுங்கால்—விண்ணாறுங்
கொன்றைச் சடையுங் குழவிப் பிறைமுடியும்
வென்றித் திருநீற்று மெய்யழகு—மன்றத்தில்
ஆடிய தாளு மதற்கிசைய நின்றிருவர்
பாடியகா துங்கருணைப் பார்வையு—நீடியகை
மானு மழுவு மணிமகர குண்டலமுங்
கூனும் பணிலக் குழையழகுஞ்—சேனை
யுடையா னுலகே ழுடையான் றிசையெட்
டுடையான் புலியூருடையா—னடியார்
திருப்பரங் குன்றத் திருந்தான் மதுரைத்
திருப்பரங் குன்றத் திருந்தான்—பெருப்புரஞ்சேர்
கன்னி திருவானைக் காவினனை நன்னகரச்
சித்திர மான தியானத் தனவாய்நம்
சித்திர மான தியானத்தன்—சித்திரப்பூம்
பூரிச் சரணும் புயத்தானு மைமுலைக்கும்
பூரிச் சரணும் புயத்தினன்—பேரிகறங்
கோவியமா மன்றத் தொருவர்தான் மாமகச்சி
ரோவியமா மன்றத் தெருவர்தான்—தேவப்
பெருமா னிடபப் பெருமா னருமைப்
பெருமான் குற்றாலப் பெருமான்—திருநாமம்
புத்தியன்றி யோதுகினும் புட்பவந்த னார்மொழிக்குச்
சித்திவந்த முன்னைத் திருவருள்போ—லொத்திசையும்
அந்தர துந்துமிக ளார்ப்ப வளைமறுகிற்
சுந்தரத் தேர்மீது தோன்றுதலும்—பைந்தொடிமார்
ஆனந்த வெள்ளத்தி லன்னக்குழாம் போலத்
தானந்த மில்லான் சரண்போற்ற—மானனையாள்
அன்னையருந் தாதியரு மாடலுயிர்ப் பாங்கியருந்
தன்னையரும் போற்றுதல்போற் றான்போற்றிப்—பின்னையந்தக்
கோனைப் பணிதலன்றிக் கோன்கரத்தி லேபிடித்த
மானைச் சிலர்பிடித்து வாருமென்றாள்—மோனைப்
பிடியே யமுதே பிரச மலர்த்தேனே
கொடியே வசந்தக் குயிலே—வடிவெழுதாப்
பொன்னே மணியே புகழ்ப்பெருமா னேந்தியமான்
மின்னே நமக்கெளிதாய் விட்டதோ—முன்னேதான்

அக்கினியி லேபிறந்த தன்றோ வதுவன்றித்
திக்கினை யெல்லாஞ்செவிடு செய்தது காண்—மிக்கினிமேல்
யேதுசெவி டாகா திங்குவந்தா லுன்பாவை
காதுசெவி டாகுமெனக் கட்டுரைப்ப—பேதுறலாய்த்
தன்பாவை யைக்கயவர் தங்கடனம்போல் மறைத்துப்
பொன்பாவை நின்று புலம்பெய்த—நன்பெருமான்
பொதுவிளை யாட்டயர்ந்து போயினான் மீது
பெதும்பை விழிநீலப் பிணைபொரு—மென்றஞ்சிக்
குதம்பை குடிபோன குழையாள கதம்பமுலை
இந்திரைக்கோ மாரனிரதிக்கோ மேனகைக்கோ
சுந்தரிக்கோ நேரிளைய தோகையாள்—சிந்தை
மகிழுங் கதிர்க்குவெளி வாராம லுள்ளே
நெகிழுங் கமலமுகை நேர்வாள்—திகழ்தற்காய்
ஆல மொருபா லமுதமொரு பா லிருந்து
காலமது பார்க்குங் கண்ணாள்—மாலானாள்
அண்டமெல்லாம் பண்டளக்க வங்குரித்த வாமனன்போற்
றண்டருவி னங்கந் தருமுனைபோல்—மண்டுசமர்
பின்னிட்ட போர்மாறன் பேரணிக்குத் தூசிபோல்
முன்னெட்டிப் பார்க்கு முலையினாள்—நன்னகர்க்கோ
னீடுதிருத் தொண்டர் நினைத்த கருமமெல்லாங்
கூடுதல்போற் குழலினாள்—நாடோறும்
பூச முடிக்கப் புனையப் பணிபூண
வாசையல்லால் மற்றொன்றி லாசையில்லாள்—பாசிழையார்
மாட மறுகில் மணக்கோலஞ் செய்துவிளை
யாட மறுகு மவாவுடையாள்—கூடவிளை
யாடப் பெறாதமத னாகமநூற் செய்திசில
மாடப் புறுவால் வகைதெரிவாள்—பாடமாம்
அன்ன நடையி லழகுநடை தித்தி விக்குஞ்
சின்ன நடையுடைய சித்திரப்பெண்—நன்னர்
புனிதநறுஞ் சண்பகத்தின் பூங்கா வனத்துப்
பனிதவளு மல்லிகைப்பூப் பந்தரினிதமைத்த
மாணிக்கம் பச்சை வயிடூரியச் சதுர்க்கை
யாணிக் கனகவா மியத்துச் செனித்த
காடை புறவுகுயில் கான மயில்கோழி

பேடையளி செம்போத்தும் பின் செல்லச்—சேடியரும்
பூவையுங் கிள்ளையும் பொன்மானு முன் செல்லப்
பாவையர் பையெனப் பையெனப் போய்—மாவளைசூழ்
சாதி வலம்புரிபோற் றாரா கணமதிபோல்
மாதர் வலம்புரிய வந்திருந்து—மோதுதிரைத்
கங்கை முதலேழு கடவுள்நதி முத்தமெல்லாம்
பொங்கு முவர்க் கடற்கே புக்கவென நங்கோமான்
வாழு மதுரையிலே மாமிக்கா யன்றழைத்த
வேழு கடல்முத்து மினிதெடுத்துச் சூழுமிசைப்
பாகக் கிளிகள் பவளவாய் முத்தாட
மோகக் குமிழு மொரு முத்தாட தாகத்தாற்
கொங்கைதனி லாடவெம்மைக் கூட்டுகென முத்தமெல்லாஞ்
செங்கை மேலாடுஞ் செயல்காட்டப் பொங்கமரர்
நஞ்சுதனைக் கண்டு நடுநடுங்கி யோடியநா
ளஞ்சலெனக் காத்த வருளொன்றுஞ் செஞ்சடைமேற்
பன்னாகம் வைத்தபிரான் பாணியினும் வேணியினு
முன்னாளில் வைத்த முடியிரண்டுமென்னாளு
மீன்றருளிக் காத்தருளித் தீர்த்தருளி யித்தலத்தே
தோன்றி நடத்துந் தொழில் மூன்று மான்ற தமிழ்
கும்பனுக்கும் வாசுகிக்குங் கூர்தரும ராசனுக்கு
மும்பருக்குஞ் சொன்ன வுரைநான்கும்—நம்புலியூர்
கூடலாலங்காடு குற்றாம் நெல்வேலி
யாடால மன்ற மவையைந்தும்—வீடொன்றாக்
கண்டாலு மோரூர்க்குக் காட்டும் பலநெறிபோ
லுண்டாஞ் சமயநெறி யோராறுந்—தொண்டனெனப்
பன்னி யொரு பாணனுக்காய்ப் பாணனெதிர் பாடியங்கோ
ரின்னிசையால் வென்ற விசையேழு—மென்மலரோன்
விண்டிருவர் காணாத வேதாந்த வீடுகளும்
பண்டிருவர் கண்டுவப்பப் பாடியே—கொண்டுகழுங்
காடும் பொழுதி லடியார் பழவினையைச்
சாடும் பிரான்மார் தம்பிரான் நாடுதனில்
தீர்த்த விசேடந் தலவிசேட மாசு செய்ய
மூர்த்தி விசேட முடிவைத்தோ—னீத்தம்விழ

பன்றிக்கும் வேடனுக்கும் பண்டு சிவலோக
மொன்றிக்கு வேட முதவினேன்—கொன்றை
முடியாளன் வானோர் முடிசூட்டும் பொற்சே
வடியாள னெந்தை யருளானன்—கொடிமாடக்
கூடலான் கூடாரைக் கூடலான் முப்புரம்போ
ராடலான் சித்திரமன் றாடலான்—நாடெல்லாம்
பேரி கறங்கப் பிறங்கு பலகோடி
சூரியர்க ளோருருவாய்த் தோன்றியே—மேருவுடன்
மேதினியில் வந்ததென விண்ணோர் புடைசூழச்
சோதிமணித் தேர்மீது தோன்றுதலும்—பாதியிலே
வெல்லுங் கழங்காடல் விட்டாள் புனல் பிரித்துச்
செல்லுமொரு பாலனம் போற் செல்கின்றாள்—கல்லுருவச்
செஞ்சிலையா னெந்தைமுகத் திங்களெதிர் கண்டவுடன்
கஞ்ச மலர் போலுமிரு கைகுவித்தாள்—பிஞ்சுநிலச்
சேணிருக்குந் தானமுந் தேவரிடர் தீர்வுண்ட
வூணிருக்குந் தானந் தொளியிருளும்—பாணியின்மேல்
மானிருக்கும் வீறுமந்த மானுமிடம் பார்த்திருக்கத்
தானிருக்குஞ் சங்கத் தனிக்குழையு—மானிலத்தின்
மீதெல்லாந் தேடினவன் மெய்த்தவத்தாற் கண்டொருநாட்
காதல் வைத்த திருக்கண் சாத்துஞ்—சீதமலைத்
தேனிருக்கு மோர்பான் செழுமையுங்கண் டாளொருபால்
நானிருக்க வேண்டுமென்று நன்கிசைத்தாள்—கானிருக்கும்
பூவே மருக்கொழுந்தே பொன்னேமின் னேயுனக்குத்
தேவைசன் பாலிருக்கச்செல்லுமோ—மாவேழு
பாரா னதிலொருவன் பாழியண்டத் தேயொருவன்
தேரா தலைவ தின்னந் தேராயோ—யாரேனு.
மின்னகுல மின்னகுண மின்னவரென் றிங்கி வரை
யின்னமறி வாருண்டோ யேந்திழையாய்—முன்னமே
யெண்ணான் கறம் வளர்க்கு மெம்பெரு மாட்டியெதிர்
பெண்ணார் பிறரிருக்கப் பேருளதோ—வொண்ணுது
வாவென்று தாயதுடர் வாக்குமன மும்விழியுந்
றேவன் றிருவழகிற் சேர்த்தியே—யேவென்ற
கண்ணி துடர் வோரு காமத் துடர்பில்லா

னண்ணிய பொற்றேர் நடாவினான் வண்ணச்
சிலைபார்த்து நாண்பார்த்து சித்தசனுந் திங்கட்
கலைபார்த்து பீதி கடந்தா—னிலகுதல்
மங்கைப் பருவ மடமார னொருத்திமது
கங்கைத்துறையிற் கதிர்ப்பவளம்—பைங்கா
தளவும் படைபோய் வினயமுஞ் சூதுங்
களவுங் கொடு திரும்புங் கண்ணாள்—தளவங்கை
யன்ன நடையார்க்கு மனங்கனுக்கும் வாயூர
வின்னமுத முறு மிதழினாள் நன்னயஞ் சேர்
காமரச தாளிக் கரும்பு கரும்பில் வைத்த
மாமதுரத் தேன்போல வசனத்தாள்—தாமநுதல்
இந்துவுக்கு மாறா மிருட் கூட்டம் போலளிகள்
வந்து வந்து கூடு மலர்க்குலாள் — முந்த
இளைத்த தவத்தோர்க்கு மிடைக்கு மிடையூறாய்
முளைத்த குரும்பை முலையாள்—கிளைத்தமுலை
முன்னழகுஞ் சோதி முகத்தழகும் பூங்கோதை
பின்னழகும் வாய்ப்பான பெண்ணரசு — நன்னகர
மாடத்து மாடமணைப் புறத்தி லிட்டமணிப்
பீடத்து மன்றிப் புறம் போகாள் —பேடைவெயிற்
கோடைக்கு வந்து குளிர் தென்றல் வீசுகின்ற
மேடைப் புரத்திலொரு மேலரங்கி—லாட
கிளிக்குலங்கள் சூழவொரு கேகயத்தின் பேடை
பளிக்கரை யிலாடும் படிபோ—லொளித்திருந்து
செண்டு பிடித்த முலையழகிற் செய்களவு
கண்டு பிடித்துக் கடாவுவபோற்—பண்டு
படித்த நடையின்னம் பயிற்றிடென வன்ன
மடித்தலத்தில் வீழுமதுபோ—லடிக்கடிமேல்
மேலேறி வீழ்வதனால் மெல்லியலாள் புன்னகைக்கு
மாலேறி வீழு மணித்திரள்போற்—கோலமுத்தின்
பந்தடிக்கும் தோறும் பணைமுலைக்கும் பந்தடிப்ப
வந்தடிக்கும் பின்னே மயில் நடிப்ப—முந்தடிக்குஞ்
செங்கையுங் கண்ணுஞ் சிலைபுரு வமும்பிறழப்
பைங்குமுதச் செங்கனிவாய் பண்மிழற்றப்—பொங்கு

குழையசைய வார்காதிற் கொப்பசையச் செம்பொ
னிழையசையச் சுட்டி யிசைந்தேற—மழைபொதுளுங்
கொண்டை சரியக் குழைமகரந் தாவுமிரு
கெண்டை வரிவண்டைக் கிழித்தோட—மிண்டி
யரும்பி நிரம்பி யடர்ந்து திரண்ட
குரும்பை யிரண்டுங் குலுங்க—நெருங்கு
மருங்கு லொசிந்து வருந்தி வருந்தி
யொருங்கு பதுங்கி யொதுங்க—விரைந்து
குனிந்து நிமர்ந்து குழைந்து முனிந்து
கனிந்து மலர்ந்து கவிழ்ந்து—முனங்கோ
டிருந்து புறங்கோ டெழும்பி யிடங்கை
திரிந்து வலங்கை திரும்பி—நிரைந்தொரு
மித்த பதக்க மிகுந்த சரப்பளி
முத்து வடத்திரள் மொய்த்தெழ—வொத்தெழு
மத்தக வெற்பின் மத்த தனக்குட
முத்தரி கத்தை யுதைத்திட—வெய்த்தொரு
பட்டு ரவிக்கை பதைத்திட மெய்த்துகில்
கட்டளை சக்கணி கற்றிட—மட்டலர்
கந்த சுகந்த கதம்ப வசந்தமி
குந்தசு கொந்தள குங்கும—சந்தன
பார்படர் பயோதர வாடை செறிந்துகு
பீரென வாடிய பேரணி—தாரணி
யெங்கு நிரம்ப விருகை பவுரிசுற்றத்
தங்கமலர்த் தாளிரண்டுஞ் சாரிவரச்—செங்கண்
படைமதனைப் போராடப் பாரமணித் தண்டை
யிடை யொசியு மென்றே யிரங்கப்—புடைசேர்
சிலம்பு புலம்பச் செயஞ்செய யென்றங்கை
யலம்பு வரிவளைக ளார்ப்ப—நலஞ்சேர்
அரம்பைய ரஞ்ச வயிராணி செம்பொற்
கரங்கள் விதிர்ந்து கலங்க—பரிந்துவிளை
யாடினாள் பந்து பிடித் தாடுதொறு மடவார்
பாடினார் மன்மத வேள் பாக்கியமே—யோடைமட
வன்னமே தெள்ளா ரமுதமே மாற்றுரையாச்

சொன்னமே யெங்கள் சுகிர்தமே—முன்னமே
யெய்த்த தவமுனிவார் மேலின்னங் குறையுளவோ
மெய்த் தவத்தா ரின்னாட்டில் வேண்டாவோ—வொத்தெரிக்
கச்சு முலையுமொரு கந்துகமும் போராடக்
கொச்சை யிடைப்பரவிக் குடிபோமோ—அச்சமதன்
ஈரம்பு மூவம்பி னீரிரண்டுங் கைவிட்டா
னோரம்பு வைத்திருந்தா லொண்ணாதோ—சீராட்டுக்
கானச் சுரும்பெழுமே காமன டுப்படையில்
நாணற்று நிற்பதொரு நாணன்றோ—பூணவிது
யாம்பார்த் தமையா திறையவர் குற்றாலலிங்கர்
தாம் பார்த் தமைவதெனத் தானமைப்ப—பூம்பாவை
மேவிய பந்தாடல் விடுத்தகன்று நன்னகர்வாழ்
தேவியொரு பாகனையே தேடுதலுங்—காவியத்தோர்
சிந்தாச முத்திபோற் சென்றாடத் தீர்த்தமெதிர்
வந்தாடப் பெற்றதொரு வாழ்வுபோற்—கொந்தாடுங்
கற்றைத் திருச்சடையுங் கங்கா நதிப்பெருக்கு
நெற்றிக் கிசைந்த தொரு நேத்திரமும்—வெற்றித்
திருநீல கண்டமுஞ் சேவடியும் வல்லி
கருநீலக் கண்களிப்பக் கண்டு—திருவால
வாயானை யன்பருக்கு வாய்ந்தானை நெல்வேலி
மேயானை வெண்ணிலவு வேய்ந்தானைத்—தாயான
வூரானை வெள்ளிவிடை யூர்ந்தானை யண்டருக்கும்
வாரானைத் தொண்டருக்கு வந்தானைப்—பேரான
குற்றாலத் தானைக் குழலாய மொழிபாகம்
பெற்றானை யண்டமெல்லாம் பெற்றானைப்—பற்றான
சிந்தை களிப்பச் சிவந்தபவ ளந்துடிப்ப
விந்தைப் புனக்கரும்பி மெய்பனிப்ப—வந்தித்தாள்
போதக் கடலைப் பொருந்த வெதிர் நோக்கினான்
காதற் கடலைக் கரை காணாள்—கோதைமுலை
யந்தக் குறியுடைய வாகமுடையீர் நானு
மிந்தக் குறிபோ லிடலாமே—முந்தவே
இந்து விளையாடு மிலங்குசடைப் பேராற்றில்
வந்து விளையாட வரலாமோ—பைந்தடங்கண்
இந்தீ வரத்தா ளிவளொருத்திக் கோர்பாகந்

தந்தீ ரெனக்குந் தரலாமோ—சொந்த
மொருவர் குடியிருந்தா லோரூரிற் கூடி
யிருவ ரிருந்தா ரிலையோ—பெருகுபுகழ்
அண்ட முடையீ ரருமந்தச் செம்மையிலே
கண்ட மிகக்கருத்தீர் கண்ணேறோ—விண்டுரையீ
ரேதோ யெனமயங்கு மேந்திழையைப் பாரான்போல்
மாதேவன் வேறோர் மறுகணைந்தான்—கோதைக்குக்
காமாரி கோலங் கருத்திலே நின்றமையாற்
பூமாரி தூவிப் பொருதமதன்—ஆமாறு
பார்க்கு மட்டும் பார்ப்பன் பழையபய மேற்கொண்டோ
போர்க்கு மட்டு மீளாமற் போயினான்—ளார்க்குழலாள்
சந்தனமு முத்துந் தழலா யழலு மென்றுங்
கந்தநறுந் தண்புழுகு காந்து மென்றும் —மந்தநடைத்
தென்றல் சிறுபுலிபோற் சீறிவந்து பாயுமென்று
மன்றிலினம் பெடையலறு மென்று—மோனரும்
யாமம் விடியா திரவுபக லாமென்றுங்
காமமிது வென்றன்று கண்டறிந்தாள்—தாம
மடந்தை மடந்தை யிவளொருத்தி மன்மதன்கெளி
நடந்தயலார்க் கியற்று நங்கைக் குடந்தையார்
மாமக தீர்த்தமும் வான்கங்கை யும்வணங்கும்
பூமது கங்கைப் புதுநறுந்தேன்—கோமதனை
வென்று படைத்த விருமகரக் குழையுங்
துன்று புரு வச்சிலையுந் தோற்றத்தா—ளென்றுமெழு
பூமான் கலைக்கெதிராய்ப் பொன்மான் மனங்கலைக்கு
மாமான் கலைக்கு மாவிழியாள்—சேமக்
குழகப் புளகக் குமிழித் திரளைப்
பழகிச் சிமிழைப் பருகி—யழகைப்
பிடித்துத் திரட்டிப் பெருத்துக் கருத்தைக்
குடித்துத் தவத்தைக் குதட்டித்—தடித்தெழுந்து
பூரித்துச் சூதொத்துப் பூணிட்டுக் காமத்திற்
கோரித்துத் தானத்தைக் கோவித்துப்—பூரித்துக்
குங்குமங் குலாவிவளர் கும்பப் பயோதரத்தாள்
பொங்குமங் குலாவிவளர் பூங்குழலாள்—எங்குமெங்கும்
முல்லை சொரிந்து முளரித் தொடைதூக்கு

மல்லிகை விதானமணி மண்டபத்து—செல்வநிறை
முத்து நிறைத்த முழுவயிரத் தூணமுகப்பிற்
பத்தி நவமணியின் பன்மாலைக்—கொத்தெல்லாம்
மந்திர பொதன வடவருவி சூழ்ந்திலங்கு
மிந்திர சாபமெனவொளிர—வந்தத்
துறையி லினிதுறையுந் தூவி யனம்போல
விறை மணிப் பீடிகை மேலேறி—நறைகமழுங்
கூந்தலார் சூழக் குமுத மோ ராயிரத்து
வாய்ந்த தொரு செந்தா மரை போலப்—போந்திருந்து
தம்புரு மீட்டிச் சரமண்டல மிழற்றி
வம்புருவக் கின்னரியாழ் வாசித்துப்—பைம்பொன்
மகர யாழ் வாங்கியொரு மாடக மேறிட்டுப்
பகருந் திவ்வு வலிபார்த்துச்—சகரமுதல்
ஏழும் பொருத்தி நரம் பேழுந் திருத்தி யொலி
யேழும் வருதயிசை யேழிலே—சூழுவித்து
மந்தர மத்திம தாரவகை மூன்றுந்
தந்தர மாகத் தரம்பிரித்து—முந்து
விரலுங் கனைமிடறு மெல்லிதழும் வீணைக்
குரலுங் குரலுமொன்றாய்க் கூட்டி—முரலுந்
துவர் வாயுங் கண்டமுஞ் சூழ்விரலு மன்றி
யவயவங்க ளொன்று மசையாமற்—கவடி
மலகரி தோடி வராளி முகாரி
கலியாணி யாகிரி காந்தாரி—பொலிவான
கொல்லி சவுராட்டங் குச்சரி காம்போதி
வல்ல பெருநாட்டை வயிரவி—வெல்லுமிசைப்
பூவாளம் மோகனம் பொங்கு சங்க ராபரணந்
தேவ காந்தாரி சேய் சாட்சி—மாவசந்த
மாளவி சாவேரி மற்றுமுள்ள ராகமெல்லாந்
தாள விதமதுர சாரமாய்க்—காளவிடப்
பாம்புஞ் செவிதாழ்ப்பப் பட்டமரமுந் தளிர்ப்பச்
சேம்புங் கருவேம்புந் தேன்பிலிற்ற—கோம்பியுஞ்
சோப மயிலுந் துயில் பயிலப் பைங்கிளியுங்
கோபப் பருந்து மொரு கூட்டுறையத்—தாபரமுஞ்

சித்திரமு நின்றுருகத் தேவரமு தென்றுவப்பப்
பத்திபெற வோத்தெழீப் பாடினாள்—முத்துநகைத்
தையலே மாமோகச் சஞ்சீவியே மதவேள்
தெய்வமே யெங்களுக்கோர் தீபமே—பெய்வளையே
கண்ணார் மணியே கனியேயுன் வாய்மொழிக்கு
விண்ணா ரமுதம் விலையாமோ—பண்ணாலே
யிந்த வுலகுமிசை வீணைக்கின் னரர்வா
ழ்ந்த வுலகவிலை யாக்கவோ—சந்தமுலை
கொற்றமணிப் பூண்செய்த குற்றமுண்டோ தாங்காத
சிற்றிடைக்குக் கைமாறு செய்வதோ—வெற்றியுறை
யூரனுக்குந் தென்னனுக்குந் தாரருக்கு மூரிலே
சேரனுத்தா ரிருந்தாற் சேதமோ—பூரையெனச்
செங்கலச மாமுலையார் செய்பவிது முற்றுதற்காய்
மங்கல வாழ்த் தெடுத்து வாழ்த்துவான்—பொங்கருவிக்
குற்றாலம் பாடிக் குறும்பலவின் பேர் பாடிச்
சிற்றூரு டையபிரான் சீர்பாடிப் பற்றாக்க
கங்காள வேடங் கருதி வழுத்துங்காற்
சங்காழி கைசோரத் தையலாள்—எங்கோமான்
மீதே மயல்பெருகி மெய் மறந்தாள் மடவா
ரேதோ வென்றோடி யெடுப்பளவிற்—பூதப்
படையான் புவனம் படைத்தான் சொல்வேதக்
கிடையா னெமக்கே கிடைத்தா—னுடையான்
குழல்வாய் மொழிபாகங் கொண்டா னோராயன்
குழல்வாய் மொழிபாகங் கொண்டான்—மடவிடையான்
நன்னகர்க்கும் பொன்னகர்க்கும் நாயகன்வந் தானென்று
சின்ன மெடுத்தெடுத்துப் சேவிப்ப—வன்னதுதான்
மூலமணி மந்திரம்போல் மோகவிடந் தீர்ந்தெழுந்து
சேலனைய கண்ணார் சிலசூழப்—பாலணுகித்
தேர்மே லெழுந்தருளுஞ் செம்மேகம் போல் வடிவுங்
அரிவை யரிவை யொருத்தி யரிவையர்க்குங் காதற்
பரிவை விளக்கு மடப்பாவை—கிரிவரிவில்
மைந்தனெடும் வேறார் மறுகணைந்தான்—விந்தை

கார்மேகம் போலிருண்ட கந்தரமும்—நீர்மேவிப்
பாதிரியுந் தும்பையும் பன்னியுஞ் செண்பகமுந்
தாதகியும் பூத்த சடைக்காடுஞ்—சோதிமுக்கண்
மாறா வருட்கடலும் வல்லிமுலைக் குஞ்சரங்கள்
சேறாடுஞ் சந்தத் திருமார்பும்—வீறாய்ப்
பிரமனறி யாத்தலத்துப் பெய்பிறையும் வேதச்
சிரமறியாத் தானச் சிலம்பும்—பரமபதத்
தம்மானை யெப்பொருளு மானானைக் குற்றாலப்
பெம்மானைத் தேவர் பெருமானை—வெம்மானைக்
கையிலெடுத் தானையிரு கையெடுத்தாள் கண்டவுடன்
மெயிலெடுத் தாள்புளசம் வேண்டுவன—வய்யனருட்
சித்தா னவர்செயலுந் தீராத பேராசைப்
பித்தா னவர்செயலும் பேதமோ—வித்தார
மாவடிவம் பொன்னான வல்லசித்தன் வாகனமேற்
றாவடிச்சென் றாள்சிறிது சாற்றுவாள் — பூவணியாய்
தாழுங் கொடியிடையாய் தண்காவி நேத்திரத்தா
யாழி தரித்தா யகல்கலையாய்—சூழ்குழலாய்
கொத்து மலர்க்கோதாய் கொங்கைநிறை பொன்னிறத்தாய்
முத்துவடத் தாயபர மோகத்தா—யித்தனையும்
நீயு மெனைப்போல்வாய் நிமலனைக்கொண் டேயகன்று
போயதுதா னீதியோ பொற்றேரே—நாயகனைத்
தாங்குமுனைப் போலயானுந் தாங்குதற்கென் பாற்றந்து
நீங்குதியா வல்லென்றாள் நில்லென்றாள்—ஓங்கித்
தடுப்பவள்போற் செல்வானைத் தாந்தடுத்து மாத
ரடுத்தடுத்துத் தாந்தடுப்பா ராகத்—தொடுத்தொருமால்
தந்த பிரானு முறுவலித்துத் தானொருமால்
மைந்தனொடும் வேறோர் மறுகணைந்தான்—விந்தை
அரிவை யொருத்தி யரிவையர்க்குங் காதற்
பரிவை விளைக்கு மடப்பாவை—கிரிவரிவில்
வாங்குகைக்கு மெம்பெருமான் மாந்துகைக்கு மோர்கரத்தே
தாங்குகைக்கும் பார்க்குந் தடங்கண்ணாள்—பாங்காய்க்
கடிசூட்டுங் காமனுக்குங் காம னிரதிக்கு
முடிசூட்டுஞ் செம்பொன் முடியாய்த்—துடியடிகள்
அம்பொன் மடந்தைக் கபிஷேக மாட்டுமிரு

கும்பக் குடம்போலும் குவிமுலையா—ளும்பரில்வாழ்
மின்னை யுருப்பிடித்து மேகத்தை மேலேற்றிப்
பொன்னை மயக்கவிட்ட பூம்பாவை—வன்னமணிக்
கோமே தகவயிரக் கொத்துமலர்ப் பாவாங்குற்
பூமேல் மடவார் புடைசூழக்—காமேவு
கூந்த லணிதொங்கல் குலாவவொரு தூரிகையை
மாந்தளிர்போற் செங்கரத்தில் வாங்கியே—பூந்தார்
எழுதுமணி மன்றத்து எழுதா வடிவன்
பழுதுபடாச் சீரெழுதும் பாங்கர்—தொழுதுசென்று
நேரிழையார் காதலித்து நீயெழுதும் வண்ணமெல்லாம்
காரிகையா யிங்கெமக்குக் காட்டுகெனச்—சாரிகையீர்
ஆலையிட்ட வேள்விசயத் தண்ணலையெண் ணாதுவிண்ணோர்
சாலையிட்ட வேள்வித்தலம் பாரீர்—ஆலைவாய்
செக்கனா ராட்டுஞ் சிராகலக் கழும்பாரீர்
தக்கனா ராட்டுத் தலைபாரீர்—புக்கமரர்
பாதவங்க ளாகப் பலகோடி காலமெல்லாம்
மாதவங்கள் செய்யும் வகைபாரீர்—ஆதிபிரான்
இத்தலத்தே தோன்றி யிமையோரைப் பொன்னுலகா
மத்தலத்தே வைத்த வருள்பாரீர்—மெய்த்தலத்தே
நீங்கா திருத்திரென வானோர் நினைத்தவரம்
வாங்கா தளித்த வளம்பாரீர்—பாங்காக
விந்திரன் பூசிக்க விமையோர்கள் பூசிக்கப்
புந்தித் தமிழ்முனிவன் பூசிக்கப் பிந்தியொரு
போதகம் பூசித்த புனிதனை பலவடிவாய்
வேதம் பூசிக்கும் விதிபாரீர்—சோதி
அயனாகி மாலா யரனாகி நிற்பார்
பயனாந் திருக்கோலம் பாரீ—ருயர்சிலைகள்
எல்லாஞ் சிவலிங்க மெவ்வுயிருந் தேவரென்றே
வல்லா முலையீர் வணங்கிடீ—ரொல்லென்
முழுநீர் வடவருவி மூழ்கினோர் பாவங்
கழுநீரா யோடுவது காணீர்—செழுமலையில்
தென்றலங்கன் றொன்றுதினஞ் சென்றோர் வினைத்தளிரை
மென்றுமென்று தின்னா விதம்பாரீ—ரென்றுரைப்பத்
தேவருந் தேவர் குழாங்களுந் தேவார

மூவரு மூவர் முனிவரரும்—யாவரும்
வாரி மயமான வடகங்கை போலொலிப்பச்
சீரிமைய மானமணித் தேர்மீதில் வாரியுண்ட
தாலத்தான் பெண்ணிருந்த தாலத்தான் பெண்ணுக்குந்
தாலத்தான் போற்றிய குற்றாலத்தான்—மூலத்தான்
காசி நகரான் காழிநக ரானடத்தும்
வாசிநகரான் சேது மாநகரான்—ஆசிலாச்
செங்காடும் வெண்காடுஞ் சீதவே தக்காடுங்
கொங்காடுஞ் சாய்க்காடுங் கொண்டபிரா—னிங்காட
வந்தா னெனப்பேரி மாரிமுகிற் போற்கலிப்பக்
கொந்தார மடமயிலின் கூட்டம்போற்—பைந்தாமச்
சேடியருந் தானுமெதிர் சென்றுபணிந் தாளுருவாற்
கோடிபக லோருருவுங் கொண்டதோ—சூடுமதி
மாலையால் மாலை வடிவெடுத்த தோமலராற்
சோலையெல்லா மோருருவாய்த் தோன்றியதோ—வேலைகரை
கொள்ளாக் கருணைவெள்ளக் கோலமோ வென்றயிர்த்தா
ளுள்ளாசை வெள்ளத்தி னூடயர்ந்தாள்—நள்ளாறு
கோகருணை நாதரே குற்றாலக் கூத்தரே
நாகருணை பஞ்சநதி நாயகரே—மாகயிலை
காளத்தி வாணரே காதலா ளிவளை
யாளத் திருவுளமோ வல்லவோ—தாளத்தின்
வேய்ங்குழலுந் தன்னைமிக்க தாயவரா நிற்கப்
பூங்குழலைக் காய்வதுதான் போந்ததோ—தீங்குழலாற்
கந்தமலர்ப் பாயல் கனல வனலூது
மிந்த மதித்தழலை யேன்முடித்தீ—ரந்தமதி
மன்றலுற்ற செஞ்சடைக்கு வாரமதி யானலுங்
தென்றலைத்தான் கங்கணங்கள் சீறுதோ—வின்றளிக்கிற்
காளைமத னைப்படுக்குங் கண்ணிக்கோ கன்னிகுயிற்
காளமத னைப்படுக்குங் கண்ணினாள்—பாவை
சந்து பொருந்தியரூர் தையலாள் பூமுலைக்குச்
சந்து பொருத்தத் தகுங்கண்டர்—வந்திவட்கோர்
மாலைகொடீ ரன்றேல் வளைகொடீ ரல்லவென்றுற்
சேலைகொடீ ரிம்மூன்றுஞ் செய்யீரே—லாலை
மதனை விலக்கிவிடீர் மன்று டினலு

மிதனை வழக்குவிடேம் யாங்கள்—முதலவரே
யென்பார் சிலகூற யாரேனும் தம்மிடத்தி
லன்பான வாக்குருகு மண்ணலார்—முன்பார்த்த
நாட்டமொன்றால் வேளை நடுங்காமல் மற்றொன்றால்
வாட்டடங் கணாளை மயங்காமற்—காட்டும்
வலப்பா லருணோக்கம் வைத்தருளி வானோர்
கலப்பாக வீதி கடந்தா—னிலக்காந்
தெரிவை தெரிவை யிவளொருத்தி சித்திரப் பூம்பாவை
யரிவையருக் கெல்லா மரசு—வரியளிமை
மானைக் கடுவை வடுவைப் பொருதுவென்று
மீனைப் படுக்கும் விழிவளையா—ளேனைமலை
யேயன்று வளைத்தார் மேலுதளத் தோடிரண்டு
குன்றுமுளைத் தாலனைய கொங்கையாள்—மன்றற்
குமிழும் பிறையுங் குமுதமு முத்துந்
தமிழு மொருகமலந் தாங்க—வமிழ்தக்
கரும்பும் பசுங்கமுகுங் காந்தளும் வராலு
மரம்பையு மாலு மரசு—மிரண்டு
பதுமமிசை தாங்கியொரு பைங்கொடி நின்றன்ன
மதுமலர்ப்பூங் கொன்றை வனிதை—புதுமைபா
யாளுஞ் சிலைமதனுக் காணையுஞ் செங்கோலு
நாளும் நடத்து நடையினாள்—நீளு
மரகதப் பச்சைமணி மாளிகையில் மாரன்
குரகலக் கிள்ளைக் குலம்போல்—மகளிர்
ஆயம் பெடைசூ ழயிராணிபோல் மடவார்
நேயம் புடைபெயரா நின்றேத்த—தூயநறும்
பாசடையி னாப்பணொரு பங்கயம்பூத் தாலனைய
வாசமணி யாசனத்தில் வந்திருப்ப—நேசக்
கரும்பா டினியமொழிக் கானக் குயில்போல
வரும்பா டினியொருத்தி வந்தாள்—திருந்திழையே
மாதர்க் கரசே மலரா சனத்திருவே
காதற் பசும்பிடியே கன்னிகையே—யீதுதான்
முந்து மலர்வீடோ முளரிப் புதுவீடு
வந்துகுடி யேறநாள் வந்ததோ—சந்தக்
குரும்பை முலைபோலக் கொடி மருங்குற் கூந்தற்

சுரும்புக்குச் செய்ததுண்டோ சொல்லாய்—சுரும்பை
யிசையால் வருந்தி யிடர்ப்படுப்ப னென்று
திசைபோன யாம்விறலி செப்ப—மிசைபெருகு
நாதச் சிவபுரத்தா னாகைக்கா ரோணத்தா
னாதித் திருவா வடுதுறையா—னீதித்
திருப்புவன வாயிலான் றென்கொடுங் குன்றத்தான்
விருத்த கிரியாளும் விமலன்—ருத்திதரும்
நன்னகர்வாழ் குற்றால நாதன் றசாங்கமெல்லாம்
பன்னவரா யென்னப் பணித்தலுமே—துன்னி
யரிகூட மாமலைமற் றானை விளையாடுந்
திரிகூட மாமலையின் சீருஞ்—சுரர்களுடன்
பொன்னா ரியநாடு பூதலத்துப் போந்தனைய
தென்னா ரியநாட்டின் செல்வமும்—பன்னாடும்
பன்னகரும் பொன்னகரும் பன்னகரும் பன்னகர்வாழ்
நன்னகரும் போற்றியசீர் நன்னகரும்—சன்னதிக்குத்
தேனதியு மாகிவட கங்கைக்குத் தென்கங்கை
மானதியாம் சித்திர மகாநதியும்—ஞானவுரை
யம்பா யிரத்திரட்டி னாயிரவே தப்பரியுங்
கொம்பா யிரத்திரட்டி குஞ்சரமுந்—தம்பெருந்தேர்
ஈராழி காண விலகொளிசேர் சங்கமுட
னோராழி யேந்து முயர்கொடியும்—பார்மேல்
வழங்குகொடை வென்றி மணம்பொலிய மன்றில்
முழங்குமொலித் தெய்வ முரசுந்—தழங்குமிசைப்
பாவலராய் மென்கரும்பு பண்சொரியப் பொன்சொரியுங்
காவலராங் கொன்றைக் கமழ்தாருந்—தேவராற்
கண்ட மிருளடக்கிக் கண்ணே றொளிபரப்பி
யண்ட முறைநடத்து மாணையுந்—தொண்டருளப்
பானீற்று மெய்யன் பலாநிழலான் பாட்டெலாந்
தேனூற்று மாறு செவியூற்ற—னானூற்ற
மெல்லிடையாள் வேட்கை மிகவானாள் மேனியொரு
வல்லியினுஞ் சால வருந்தினா—ளொல்லை
யயல் விறலிதன்னை யருகழைத்துக் காமச்
செயல்விரவி யாவுந் தெரித்தாள்—மயன்மகட்காய்
வந்தா ரெனக்கொருநாள் வாராரோ மாமாலைத்

தந்தார் புனைமாலை தாராரோ—முந்தவிட
முண்டா ரிதழமுத முண்ணாரோ சோமகலை
கொண்டாரென் காமகலை கொள்ளாரோ—பண்டுபிறக்
கீய்ந்தா ரெனக்குவளை யீயாரோ வென்றிசைப்ப
வாய்ந்தார் தமக்கினிய வண்ணலார்—வாய்ந்ததுடி
திண்டிம மார்ப்பச் சிலதூரி யந்துவைப்பத்
தொண்ட ரரவொலியுந் துந்துமியும்—அண்டரண்ட
கூடத் தினுமுழங்கக் கொடீர்பரா நீடு
மாடத்துப் பாந்தள் மணிவிளக்கம்—நீடச்
சிவமதுகங் கைப்பெருமான் செல்வப் பெருமான்
புவனமெல்லாம் போற்றும் பெருமான்—றவமுனியை
யாளும் பெருமா னமரர்மேடும் பெருமா
னீளுஞ் சுடர்மணித்தேர் நேர்தோன்ற—நாளுமெதிர்
வாராத செல்வம் வரப்பெற்றார் போல்வணங்கி
யாராத காத லலையெறியப்—பேராளன்
மையழகு கந்தரமு மார்பழகுந் தோளழகுங்
கையழகுங் கண்டாள் கருத்தயர்ந்தா—ளய்யன்
விரிசடையன் மென்மதிக்கு மென்மதியுந் தோற்றாள்
பெரியபிரான் சென்னிப் பிறையே—பரிவுடைய
வண்கவிகை யாதலனால் மாரனுனை யெய்யானே
தெண்கடலுந் தென்றலுனைச் சீறாதே—சண்பகப்பூங்
காவுலவு தென்றல் கருணைப் பிரான்முடிமேல்
மேவுதலா லுன்னை வெதுப்பாதே—யாவுநீ
யுண்ணாத தென்கண் ணுறங்கா திருப்பானென்
றண்ணான மேனி தழல்வானென்—னன்னமற்
கோலவயி றெக்கிக் குழைவானென் கோடிகற்ப
கால மொருநொடியிற் காண்பானென்—மேலான
நின்னிடத்தி லென்னை நிறுத்தியொரு மாத்திரைப்போ
தென்னிடத்தி னீவந் திருப்பாயே—லுன்னிடத்திற்
குற்றந் தீர்ப்பேனென் குறையுமுடிப் பேன்பிறவும்
பெற்று மயா மென்று பிதற்றுதலுங்—கற்றைச்
சடையானு மெய்து சடத்தானுந் தேர்மேற்
புடையாந் திருவீதி போத—தொடையாடுங்
கூந்த லுருவெளியாற் கூறியவா றேதனக்குச்

சேர்ந்ததுபோல் மாலாறித் தேறினள்—பூந்தோகை
பேரிளம்பெண் பேரிளம் பெண்ணொருத்தி பெண்ணரசு செய்ய [மத
னோரிளம் பெண்ணனைய வுருவத்தாள்—மேருமுதல்
அவ்வுலகி லுள்ளபகை யத்தனையும் வென்றுமதத்
திவ்வுலகைப் பார்க்கு மிருதனத்தாள்—பவ்வமிரை
குழம்பு ராசித் துடியுடையா ணயப்புக்
கேழம்பு கூட்டு மிணைவிழியாள்—வாழுமதி
சங்கு பணைகாந்தள் சயிலவடந் தாங்கியொரு
மங்குல் சுமந்தொசியும் வல்லியாள்—பொங்கும்
அணியைச் சுமந்திழைத்த வாகத்தி னுலோ
பணிய மருங்கிழைத்த பாங்கோ—தணிவிலா
நாண்சுமக்க லாற்று நகிலத்தா லோமேனி
பூண்சுமக்க லாற்றுத பூவையாள்—மாண்சுமந்த
வல்லியர்கள் சூழ மதவேள் பணிந்தேத்தச்
செல்வ மதனிரதி சேவிப்பக்—கல்லென
மணிவிளக்குச் சூழ்வசந்த மண்டபத்தி லிட்ட
தணிவி லரியாசன மேற்சார்ந்து—திணிபெருகு
மூவுலகி லுள்ளாரில் மூவர் தனிமுதல்வர்
யாவரெனச் சொல்லி ரெனவுரைபப்—பூவனையார்
மண்ணவரைச் சொல்லி மனுவேந்தரை நிகழ்த்த
விண்ணவரில் மேலானோர் யாரென்று—முன்னவராம்
வேதியரைக் கேட்ப விரிபதி னெண்கணத்திற்
றாதி நெறிபலவுந் தான்காட்டி—நீதிபெறுந்
திக்கோரி லெண்மலர் திறங்கூற முப்பத்து
முக்கோடி தேவர் முறைவிரித்துத்—தொக்க
நவகோளுங் காட்டிவரும் நாள்பலவுங் காட்டித்
தவமா முனிவரைச் சாற்றி—யிவராக்கும்
ஐந்தருவி னீழ லரசுசெய்து வீற்றிருக்கு
மிந்திரனே கோமா னெனவுணர்த்தி—யிந்திரனில்
மேலானோர் யாரென்று வேதச் சுருதியுடன்
மூலவா கமத்தின் முறைபார்த்துச்—சாலப்
படைப்பா ரளிப்பார் படைத்தளித்த வெல்லாந்
துடைப்பார் தலைவரெனச் சொல்லி—யுடைப்பெருமை
முப்பொருளு மாகியந்த முத்தொழிலுந் தானியற்ற

மப்பொருளே குற்றாலத் தானென்றார்—மெய்ப்பொருளைக்
காட்டினார்க் கெல்லாங் கனகா பிஷேகந்தூய்ப்
பூட்டினாள் மேனியெல்லாம் பொற்பணியாய்—மீட்டொருநாள்
மத்தியா னத்தில் மகாநிசியைப் போலிருண்ட
வுத்தியா னத்தி லுகந்தேகிச்—சித்திரமா
மன்றிலே யாடும் வரதனருட் சண்பகப்பூங்
கன்றிலே யோர்மூன்று கன்றுவைத்து—வென்றி
யயன்பொரி பேரான பேருமிட்டு
வயஞ்சேர் போற்றி வளர்த்தாள்—பயன்சேரு
முக்கன்று மோங்கியநாள் முக்கட் பிரான்றிருப்பே
ரக்கன்று முன்பூத்த வற்புதத்தாற் புக்கமலர்க்
கொம்பனையார் கூறக் குரவையுட னேயெழுந்து
பம்புதுடி பொங்கப் பணைமுழங்க—நம்பரமர்
நாளால் விழாவயர்ந்து நன்னிதியும் போனகமுங்
கேளார் தமக்குங் கிளர்ந்துதவி—நீளமலர்
கொய்து தொடுத்தேந்திக் குறும்பலவிற் கோமளமு
னெய்துகமேர் சாத்துகமோ வென்றென்று—மைதவளுங்
கண்ணாள் மனது கசிந்துரைப்பக் காரிகையார்
பெண்ணா ரமுதே பெருந்தவமே—யுண்ணாடும்
ஆதார மோராறு மைந்தவத் தையுங்கடந்து
மீதான சூதான மேல்வெளியில்—நாதாந்தச்
சத்திநிபாதத்தினோர் சாத்தும்போ துஞ்சயிலப்
பத்தினியார் சாத்தும் பல்போது—மொத்தினிதா
யெப்போது மப்போதா யேத்தும் பழவடியார்
கைப்போதும் பாரளந்தார் கண்போது—முப்போதுந்
தீண்டுவார் போதும் திருமேனிப் பாங்காக
வேண்டுவார்க் கிப்போதும் வேண்டுமோ தாண்டவஞ்செய்
பாதமலர்க் கிந்தமலர் பற்று தெனமறுப்ப
மாதரசி மாலாய் மயங்குதலுங்—காத
லடியார் நினைத்தபடி யாடும் பெருமான்
கொடியார் மதனடக்குங் கூத்த—னடியவர்பால்
மாயை யிருளோடு மலர்கண்ணான் றன்கருணை
யேய வமுதாட் டிடைக்கண்ணான்—றீயவினை
நீறாக வேதுடைக்கு நெற்றித் திருக்கண்ணா

னாறு மேகடந்த வையாறன்—வீருகு
வாகனத்தி னானு மயில்வா கனத்திருவர்
மோகனப் பிரானுமே முன்காப்ப—வாகனத்தில்
வையம் படைத்தானு மாலும் புறங்காப்பப்
பெய்யுமுகில் வாகனத்தான் பின்காப்பத்—தெய்வகணத்
தொப்பற்ற தேவ ரொருபால் முடிவணங்கச்
செப்புபதி னெண்கணமுஞ் சேவிப்ப—வெப்பதமும்
நாளும் பரவ நமனும் பணிகேட்பக்
கோளுஞ் செயசெயெனக் கூத்தாட—வேளுஞ்
சிலைபிடித்து நாணெறிந்து செல்வமணிப் பந்தாய்
மலைபிடித்த பாரிடங்கள் வாழ்த்த—அலைகுதிக்குந்
தேனா ரருவித் திரிகூடத் தெம்பெருமான்
வானோர் முரசதிர வந்தெய்த—தானாசை
வைத்தபொரு ளங்கெதிரே வந்ததென மாதரொடுஞ்
சித்தசன்சே னைபதிபோற் செல்கின்றா ளத்தன்
படைப்பெருக்கம் பார்க்கப் பதினா யிரங்கண்
படைத்திலமே யென்றாள் பணிந்தாள்—விடைப்பிரான்
அல்லார் பிரானிலையென் றந்தணர்கள் சொன்னதொகை
யெல்லாம் வகையாய்க்கண் டின்புற்றாள்—கல்லா
லிருந்தானைப் போற்றி யெடுத்த மலரெல்லாஞ்
சொரிந்தாள் மலைபோலத் தோகை—கருங்கோதை
மேகஞ் சரியவொரு மின்போற் பணிகின்றா
ளாகம் பசலைநிற மாகின்றாள்—கோகனகப்
பாதாம் புயத்தீர் பலவளைக்கை பாய்ந்தகுறி
மீதாம் புயத்து விகாரத்தீர்—வாதாடு
மாலுண்டோ வில்லையோ மாமுடியின் மேற்சுமந்தீர்
மேலுந் திரிகூட மேவுவீர்—வாலு
மருந்துமாந் தேவரீர் வாமமுத மென்றேக்
கருந்துமா தந்தருள லாமே—பெருந்தகையீர்
கையழகு மான் படைத்தீர் கண்பழகு மான்படைத்தேன்
பெய்பிறைக்கு நெற்றிப் பிறைபெற்றேன்—யையரவுக்
கல்குலுடை யேனுமைப்போ லாசையுடை யேன்றிருந்தார்
நல்கவுரித் தானவளு நானன்றோ—செல்வரே
தாயுமிலீர் தந்தையிலீர் தாங்கவொரு சுற்றமிலீர்

பேயுடனே யாடுவீர் பித்தாரூர்—நாயகியாய்
கொச்சை மலைமகளைக் கொண்டீர் வாருமொரு
பச்சைப் பொண்பாரம் பரிந்தவளோ—நிச்சயமாய்
வில்லடியுங் கல்லெறியும் வேறோர் பிரம்படியும்
வல்லியிவ ளாற்றிவிக்க வல்லவவோ—சொல்வழிக்கு
வந்தருள் வீராகில் மறுமுகம்பா ராமலுமக்
கந்தரங்க மோகனப்பெண் ணாகேனோ சொந்தமிரு
நாழிநெல்லு நீரளந்தால் நானாழி யாக்கேனோ
ஊழிநெல்லை வேலியிட்ட வூருடையீர்—ஆழிவிடந்
தந்தமறு வோர்பொடியால் மாற்றேனோ மற்றொருத்தி
தந்தகுறி போற்குறியுந் தாரேனோ—நுந்தம்மைப்
பாதி யுடம்பாகப் பார்ப்பேனோ பாவையர்முன்
வீதியைய மேற்க விடுவேனோ—சாதியுமக்
குண்டாக்க மாட்டேனோ வுத்தமரே நீரென்னைக்
கொண்டாலே திருங் குறையென்றாள்—கண்டார்
அறம்வளர்த்த தாய்முகம்பார்த் தங்ங னருள்மூர்த்தி
திறம்வளர்த்தான் தேவாதி தேவன்—முறைமுறையாய்
மாத ரிவரெழுவர் மாலேறப் பாதலமும்
பூதலமும் விண்ணும் புகழேற—மாதலத்துத்
தெய்வ நெறி வளரத் திங்கள்மும் மாரிபெய்யச்
சைவ சமயந் தழைத்தேற—மெய்யடியார்
பத்தி வளர்ந்தேறப் பரம்பொருள்மெஞ் ஞானமெனு
முத்திப் பயிர்கள் முளைத்தேற—சித்துடையான்
பாருடையா னண்டப் பரப்புடையான் குற்றாலத்
தாருடையான் போந்தா னுலா.

வீதித் திருநெறியாய் மெய்நெறியாய் மெய்வீட்டி
னாதித் திருநெறியு மானதே—சோதித்தன்
பேருடையான் குற்றாலப் பெம்மான்கை மானேந்துஞ்
சீருடையான் மேவுந் தெரு.

முற்றிற்று.

உ

சிவமயம்.

## மேலகரம், திருகூடராஜப்பக் கவிராஜமூர்த்திகள்
## அருளிச்செய்த

# திருக்குற்றாலச் சிலேடை வெண்பா.

---

காப்பு.

*சொன்னத்தா லத்துதிக்கைத் தும்பிமுகத் தாற்றுதிக்கை*
*கன்னத்தா லத்துதிக்கை காட்டுமே—அன்னத்தான்*
*பொற்றால மாமாலைப் போலிருந்தா ராலிருந்தார்*
*குற்றால மாமாலைக் கு.* (1)

*நற்றால வெண்பாவை நாயகர்க்கு நாயகர்மேற்*
*குற்றால வெண்பாவைக் கூறவே—பொற்றானை*
*வேலா யுதத்தொருவன் மிக்ககொடி வாகனமாங்*
*காலா யுதத் தொருவன் காப்பு.* (2)

*நன்னுதலி னோர்பாகர் நன்னகர்க் குற்றாலவெண்பாப்*
*பன்னுதலி னோர்பாகம் பாலிப்ப—முன்னுதலி*
*வெண்கமலத் தாளை வியந்தேத்திக் கும்பமுனி*
*வண்கமலத் தாளைநினை வாம்.* (3)

*பாவுக் கரசுசண்பை பாலறா வாயருண்டு*
*நாவுக் கரசாரூர் நம்பியுண்டு—கோவுக்குக்*
*கோவைசொன்னா னுண்டுநெஞ்சே குற்றாலமென்றுமரப்*
*பாவைசொன்னா லுஞ்சொலுமே பாட்டு.* (4)

*கிள்ளை மொழிக்கொச்சை கிளிவளர்த்தோர் தாமிகழார்*
*பிள்ளைமழ லைக்கிகழார் பெற்றெடுத்தோர்—வள்ளைக்*
*குழைபாகர் குற்றாலர் கொத்தடியேன் புன்சொல்*
*விழைவாகக் கொண்டருள்வார் மேல்.* (5)

## நூல்.

பூமேவு தென்சாரற் புல்லனைந்துங் கல்லனைந்துங்
கோமே தகமேயுங் குற்றாலம்—மாமேருச்
சிங்கா சனத்தினன் செய்யகுழைத் துய்யமதிச்
சங்கா சனத்தினன் சார்பு. (6)

போது மலர்வாவிப் புள்ளினமுந் தெள்ளியருங்
கோது மலங்களையுங் குற்றால—மோதுதிரைக்
காளத்துக் கந்தரத்தரர் கஞ்சன்மா றேடுமண்ட
கோளத்துக் கந்தரத்தார் குன்று. (2)

விம்பத்தா னைத்தறுகண் வேடுவரும் பாவலருங்
கும்பத்தா னைக்கடுக்குங் குற்றாலஞ்—சம்பத்தாம்
ஞானநாட் டம்படைத்தார் நன்முடிமேற் பாம்புவிட்டு
வானநாட் டம்படைத்தார் வாழ்வு. (3)

வம்பார் வனமயிலு மாரு வருவிருந்துங்
கொம்பார் நடந்தழைக்குங் குற்றால—நம்பார்
புரங்கடந்த வீரத்தார் போர்க்கனலுண் மூவர்க்
குரங்கடந்த வீரத்தா ரூர். (4)

தாபதர்கள் சிந்தைக்குந் தார்க்குழலார் செவ்வாய்க்குங்
கோப முருக்கறுக்குங் குற்றால—மாபதும
வேந்துதலை யோட்டினார் வெண்ணீற்றான் மாறனுடற்
காந்துதலை யோட்டினார் காப்பு (5)

மாட்டணுகு வார்க்கு மணிவெயிலாற் பூமகட்குங்
கோட்ட மிரவடைக் குற்றாலஞ்—சூட்டகலாத்
தார்பணியு மென்பணியார் தாள்பணியு மென்பணியார்
மார்பணியு மென்பணியார் வாழ்வு. (6)

பூவைமார் பொன்முலைக்கும் பொன்முலைசே ராடவர்க்குங்
கோவைவாய் முத்தமிடுங் குற்றாலந்—தேயுமதி
சூரியனை டத்தன் சுவர்க்கநா டும்பணிதென்
னாரியநாட் டத்த னகம். (7)

பங்கயஞ்சேர் வண்டும் பரிமளஞ்செய் பாவையருங்
கொங்கை முகந்திமிருங் குற்றலங்—கங்கையுறை
யாடகமா டச்சடையா ரம்பிகைதா ளம்பிடிக்க
நாடகமா டச்சடையார் நாடு. (8)

ஆடலளி யுஞ்சுரும்பு மானைகளா டுஞ்சுரும்புங்
கூட மதுவருந்துங் குற்றல—நீடசல
வஞ்சிக்கு மாலானர் மாதவரை மோகினியாய்
வஞ்சிக்கு மாலானர் வாழ்வு, (9)

கோளரியாஞ் சென்மவினைக் கோட்டானை மேற்பாயும்
கோளரியாந் தெள்ளருவிக் குற்றலங்—கோளரியு
மம்புலியுங் கண்ணினு ராடியகூத் தாடரவுஞ்
செம்புலியுங் கண்ணினர் சேர்வு (10)

வேலன் வெறிக்களத்தும் வேடர் தினைப்புனத்துங்
கோல குழவிசைக்குங் குற்றல—மாலயனுய்
மோனைக்கா லத்திருந்தான் முன்வேட னெச்சிலிட்ட
வூனைக்கா லத்திருந்தா னூர். (11)

மிக்குத் தடங்களிலு மென்சாலி வேலியினுங்
கொக்குப் பலவனஞ்சூழ் குற்றலங்—திக்குத்
திகந்தபரி வட்டத்தார் தென்னவன்முன் வீதி
யுகந்தபரி வட்டத்தா ரூர். (12)

தாக்குஞ் சிலேயோருஞ் சமர்வேட்ட குஞ்சரமுங்
கோக்குஞ் சரமழைக்குங் குற்றலங்—தேக்குகட
லாலமுண்ட கந்தனு ராருதா ரங்கடந்த
மேலமுண்ட கத்தனர் வீடு. (13)

பாக நதித்தடமும் பாமாதும் பூமாதுங்
கோக னகத்துறைவார் குற்றல—மாகனகச்
சங்கச் சிநகரத்தார் சங்கரிகொங் கைக்குறிசேர்
நங்கச் சிநகரத்தார் நாடு. (14)

மாணிழையார் செவ்வாயும் வண்சிலைதேர் வேடுவருங்
கோணிலவை நாணேற்றுங் குற்றாலம்—பேணிவரி
வண்டாடும் பாலத்தன் வானவனு மீனவனுங்
கொண்டாடும் பாடலத்தன் குன்று. (15)

மெய்ப்பாய சீர்கேட்டும் விண்ணோர் புயமுநெஞ்சுங்
குப்பாய முந்துருக் குற்றாலம்—வைப்பாய
முத்திக் கரும்பினார் முத்தமிழ்த்தே னாகவந்தெ
னுத்திக் கரும்பினா ரூர். (16)

வெஞ்சரவிற் கானவரும் வெம்பிடியைப் பின்பிடித்த
குஞ்சரமுஞ் சேவகஞ்சேர் குற்றால—மஞ்சரங்கிற்
சித்திரமா மன்றரியார் செங்கணரி யார்க்கரியார்
குத்திரமா மன்றரியார் குன்று. (17)

நெட்டசலஞ் சாரிடமு நீர்வேட்ட குஞ்சரமுங்
கொட்டமிடு மஞ்சளூறுங் குற்றாலங்—கட்டனலோ
னஞ்சக் கரங்களைந்தா ரஞ்சடைக்கி னார்கருத்தில்
விஞ்சக் கரங்களைந்தார் வீடு (18)

மாபுரத்து நாரியர்க்கு மாமேருப் பொன்னுக்குங்
கோபுரப்பொன் னாணிநிற்குங் குற்றால—நூபுரப்பொற்
பூந்திருப்ப தாம்புயத்தார் பூதரமெட் டுங்குழுமிச்
சேந்திருப்ப நாம்புயத்தார் சேர்வு. (19)

மேலவிட பக்கொடிமேல் விண்ணிடபம் வந்தேறிக்
கோலவிட பக்கொடியாம் குற்றால—மாலவிடப்
பந்தனை மறுத்தழைத்தார் பத்தரறுத் துக்கறிசெய்
மைந்தனை மறுத்தழைத்தார் வாழ்வு. (20)

ஆடுபர காயசித்த ரல்லாருங் கல்லாருங்
கூடுமறு கூடடையாக் குற்றால—நீடுதிசை
யம்பரவி சேடத்தா ராலால முண்ணவுண்ணு
மும்பரவி சேடத்தா ரூர். (21)

கண்டலுக்குப் பூவுங் கமழ்துளிக்குச் சாதகமுங்
கொண்டல் வரத்துதிக்குங் குற்றால—மண்டலரைப்
புக்கச் சிவந்திருப்பார் பொற்பவளக் குன்றம்போற்
செக்கச் சிவந்திருப்பார் சேர்வு. (22)

ஆடிப் படர்காற்று மாடரவின் மாமணியுங்
கோடிப் படங்காட்டுங் குற்றாலம்—பீடித்து
வந்தியா கத்தருவார் வந்தனையாற் கந்தனைமுன்
சந்ததியா கத்தருவார் சார்பு. (23)

தோட்டுநறும் பூமரத்துஞ் சோனைமத மாமுகத்துங்
கோட்டுவழி தேனிரைக்குங் குற்றால—மேட்டெழுதா
வேதத் துவனிடத்தார் மிக்கதந்தை தாடடிந்த
மாதத் துவனிடத்தார் வாழ்வு. (24)

மேடைத்தளமு மதிள் மென்கொடியுஞ் செங்கதிரோன்
கோடைக்கு வாடைதருங் குற்றால—மாடைக்கு
மாதங்க மன்றுரித்தார் மாணிக்கம் வெள்ளிசெம்பொன்
மாதங்க மன்றுரித்தார் வாழ்வு. (25)

வல்லியர்செய் குன்றுகளும் வண்பாடல் வண்டுகளுங்
கொல்லிமலை யத்திசைக்குங் குற்றாலஞ்—செல்வச்
சிவமதுகங் கைத்துறையார் செம்மையில்லா நெஞ்சிற்
பவமதுகங் கைத்துறையார் பற்று. (26)

கோடீர மால்வரைக்குங் கூரிருட்கு மாமுனிவர்
கோடீரமாதவஞ்செய் குற்றாலங்—கோடீரந்
தோன்றாக் கடலடைத்தான் தூயபணிக் காப்பகையை
வான்றாக் கடலடைத்தான் வாழ்வு. (27)

பம்புகுயில் காமனுக்கும் பானுமதி வான்வழிக்குங்
கொம்பு குறித்துவருங் குற்றால—நம்புமெனை
யாளத்திக் கண்ணுதலா ரண்ணு மலைகாசி
காளத்திக் கண்ணுதலார் காப்பு. (28)

தார்களினாற் போதலைந்துந் தண்டே னிறால்கிழிந்துங்
கூர்களினால் வண்டிரைகூர் குற்றால—மார்கழிநா
ளிட்டவிழாச் செங்கையா ரீர்ந்தரவக் கங்கணத்தின்
கட்டவிழாச் செங்கையார் காப்பு. (29)

தாளசலங் கைநிமிர்ப்பத் தண்சுடரும் வெண்சுடருங்
கோளரவ மென்றயர்க்குங் குற்றால—நீளரவ
மார்க்கு மறைச்சிலம்பாராடருவி பொன்றுரை
வார்க்கு மறைச்சிலம்பார் வாழ்வு. (30)

விம்பவித மார்முலைக்கு மெய்த்தவத்த ருங்கணிக்குங்
கும்பமுனி யாவணஞ்சேர் குற்றாலந்—தம்படிவப்
பங்கொடுகண் டங்கறுத்தார் பண்டுதக்கன் சென்னியைக்கோ
பங்கொடுகண் டங்கறுத்தார் பற்று. (31)

கன்றூர்க்குங் காந்தளங்கைக் கன்னியர்க்குந் தொல்குடிக்குங்
குன்றாத் தனங்குவியுங் குற்றால—மொன்றான
மூலவோங் காரத்தார் மூசுவரிப் பன்னகங்கள்
சாலவோங் காரத்தார் சார்பு. (32)

வாடிய மெய்த்தவமும் வாரி மணித்திரளுங்
கோடி வரம்படைக்குங் குற்றால—நீடியதாள்
மன்றினிடைத் தூக்கினார் வான்கோ வணத்திலன்பர்
நன்றினிடைத் தூக்கினார் நாடு (33)

இட்டுண்பார் கைக்கு மினவளையா ராடலுக்குங்
கொட்டுந் தருவிளைக்குங் குற்றாலம்—பிட்டுண்டு
வய்கைக் கரைசமைத்தார் வாழ்மூர்த்தி மதுரை
யுய்கைக் கரைசமைத்தா ரூர். (34)

சேட்டுவரைத் தேனுக்குஞ் செண்பகப்பூங் கானுக்குங்
கோட்டுமறு கால்விலகுங் குற்றாலங்—காட்டு
நரியும் பரிசெய்தார் நல்லறிவில் லார்க்குத்
தெரியும் பரிசெய்தார் சேர்வு. (35)

தேவரிசை வாணாட்டுத் தேனுவுஞ் சொற்பாவலருங்
கோவரிசை யேற்கவருங் குற்றாலம்—பூவரிசை
யோதியர்கற் பங்கழிப்பா ரோர்கணத்திற் பல்கோடி
வேதியர்கற் பங்கழிப்பார் வீடு. (36)

காட்டுக் கனியழித்துங் கான்யாறு நீர்செழித்துங்
கோட்டுக் குரங்குறையுங் குற்றாலந்—தோட்டுக்
கிருவா ரணத்தினா னீரா யிரங்கோட்
டொருவா ரணத்தினா னூர். (37)

காலஞ்செய் வேனிற் கழைமதனு நாடகருங்
கோலஞ்செய் தாடிவரும் குற்றால—மூலஞ்சேர்
செம்மற்காண் டபனார் தேகமறப் பூவாளிச்
செம்மற்காண் டபனார் சேர்வு. (38)

ஒட்டினருங் கூத்தினரு மோடையும்வா ளுந்துகிலுங்
கொட்டினெய்த லைக்காட்டுங் குற்ருலங்—கட்டியபூண்
அக்குமணிக் கோவையா ரம்பரவை நாவலன்சொல்
வைக்குமணிக் கோவையார் வாழ்வு. (39)

மன்றத்தின் மாளிகைமேல் வானிரவி வந்தேறிக்
குன்றத்தின் மேல்விளக்காம் குற்ருலம்—பொன்றத்துந்
தேனு ரருவியார் தெய்வமலர்ச் செண்பகப்பூஞ்
சானு ரருவியார் காப்பு. (40)

ஆள்வேடர் கொல்லையினு மாயரிசை முல்லையினுங்
கோள்வேங்கை தேக்கெறியுங் குற்ருல—நீளவேழத்
தந்திவழி பாட்டினுர் சங்கலொஞ் செந்தமிழ்த்தே
னுந்திவழி பாடினு ரூர் (41)

சாலஞ்செய் வித்தகருஞ் சாபநுத லார்விழியுங்
கோலம் பலகாட்டுங் குற்ருலஞ்—சூலம்
விரும்புவன சக்கரத்தார் வேதாவாய்ப் பண்டு
தரும்புவன சக்கரத்தார் சார்பு. (42)

மாத்தருவின் மேற்கவியும் வான்யாற்றிற் கான்யாறுங்
கூத்தரங்க மேவுதிருக் குற்ருல—மேத்தயன்பூச்
சாத்தனடிக் கும்மடியார் சாக்கியன்கல் லாலெறியப்
பாத்தனடிக் கும்மடியார் பற்று (43)

வாவி யிடமும் வடவரையென் ருதவருங்
கோவில் வலம்புரியுஞ் குற்ருல—மூவிலைவெஞ்
சூலக் கபாலத்தார் தொந்தக் கபாலத்தார்
மேலக் கபாலத்தார் வீடு. (44)

ஏடார் மலர்த்தடமு மீவார் மனத்திடமுங்
கோடாமை நீருருங் குற்ருல—மாடானை
தேவைப் பரங்கிரியார் சீராரூர் தென்னுனைக்
காவைப் பரங்கிரியார் காப்பு. (45)

முருகுகுழலார்கரமு முன்னீர்த்தடமும்
குருகுவளையார் குற்ருலம்—செருக சடைக்
கங்காளர் நம்பரீமர் கன்னி குழல்வாய் மொழிசேர்
பங்காளர் நம்பரமர் பற்று (46)

சீதச் சிலம்பருவித் தீர்த்தமுநல் லார்குழலுங்
கோதைக் கழுநீர்பெய் குற்ருலம்—வேதத்துத்
தெள்ளியரங் கத்திஞர் செம்பரங்கம் பொன்னரங்கம்
வெள்ளியரங் கத்திஞர் வீடு. (47)

வேடரம்பொன் வட்டெடுத்து மென்கனிக டேன்கொடுத்துக்
கோடரங்க மட்டெறியுங் குற்ருலங்—கூடரங்கா
முற்றென் பிழைபொறுத்தார் முண்டகனைக் கோபித்தார்
மற்றென் பிழைபொறுத்தார் வாழ்வு. (48)

ஏறுமலைப் பன்மணியா வெங்குமலைத் தேஞற்ருல்
கூறு திரைவனஞ்சேர் குற்ருல—நீறுபுனை
செச்சைவனப் பாகத்தார் தேவிகுழல் வாய்மொழிசேர்
பச்சைவனப் பாகத்தார் பற்று (49)

மேலாம் பரமபத விடுதிறக் குந்திறவு
கோலாம் வடவருவிக் குற்ருல—நூலாதி
வேதாக மந்திரிப்பார் வெள்ளெலும்பைப் பிள்ளைசொலால்
மாதாக மந்திரிப்பார் வாழ்வு. (50)

மாத்துங்கவேடுவர்க்கு மாமயில்களாடலுக்குங்
கோத்தும்பி யூதியமாங் குற்ருலம்—ஏத்துமறைப்
பாட்டுமுழவேந்தார் பசுப்படுக்கு மாமனுக்கோர்
ஆட்டு முடி ழேவய்ந்தாரகம் (51)

சூரரம்பை நேர்விழியார் சொற்பணியும் பொற்குறங்கும்
கூரரம்பை மேனகை செய்குற்ருலம்—போரரங்கம்
அட்டுந்தமருகத்தாராடுங் கூத்துக்கொருகை
கொட்டுந்தமருகத்தார் குன்று. (52)

பாடலார் முத்தமிழ்க்கும் பார்த்திபர்பால் வெம்போர்க்கும்
கூடலார் சங்கமெய்க்குங் குற்ருலம்—ஆடலார்
பாண்டரங்கமேவிஞர் பாண்டியனூ ரஞ்சவையைச்
சேண்டரங்க மேவிஞர் சேர்வு. (53)

வம்புருவான் கற்பகமும் வண்பிறைசேர் வெற்பகமும்
கொம்புருவவேழமுறழ் குற்ருலம்—தும்புருவின்
கானத்தடங்காதார் காசினியிற் பாதலத்தில்
வானத்தடங்காதார் வாழ்வு. (54)

ஊடுமடப்பாவையரு மோங்கலருவித்தடமும்
கூடுமணங்காட்டுங் குற்றாலம்—தோடுபுனை
காதரவக்குண்டலத்தார் கஞ்சனறியாமௌலி
மீதரவக் குண்டலத்தார் வீடு. (55)

வெங்கைக் களிறொலிக்கு மின்னினிடைப் பொன்னனையார்
கொங்கைக்கு மாசுணங்கூர் குற்றாலம்—பைங்கயிலை
வேதண்ட மேவினார் மேருவொரு விண்டுவெனும்
கோதண்ட மேவினார் குன்று. (56)

ஆடவர்ச் சேர்வாரு மவர்வரவு பார்ப்பாரும்
கூடல்வளைக் கைவிடாக் குற்றாலம்—வாடல்
விதுவைத்தரித்தார் மிளிர்வலையின் மீனன்
பதுவைத் தரித்தார் பதி. (57)

சேல்வளையு நீர்த்திரையுந் தெய்வமெனக் கொண்கரையும்
கோல்வளையாரஞ் சலிக்குங் குற்றாலம்—மால்வடிவாய்
வேதவனச்சங்கெடுத்தார் வேறு மழுமானெடுத்தார்
மாதவனச் சங்கெடுத்தார் வாழ்வு. (58)

சிட்டமருத்து வருந்தேனருவிபாய் தடமும்
குட்டங்கயந்தணிக்குங் குற்றாலம்—இட்டகுழை
வென்றிப்பாம்பாட்டினார் மீனவன்சிந்தாசமுத்தி
ஒன்றிப் பாம்பாட்டினா ரூர். (59)

கிட்டிவருமாகாய கெங்கையைக்கண்டே யெதிர்கை
கொட்டிவரும் வெற்பருவிக் குற்றாலம்—மட்டிதழி
வாலமதிக் கண்ணியார் மாறனடியாரடியார்
சீலமதிக் கண்ணியார் சேர்வு (60)

கன்றியபோர் வாரணத்தின் கண்களும் வெய்யோன் பரியும்
குன்றினிறங்கவருங் குற்றாலம்—நன்றிமனச்
சுத்தராகத் துதிப்பார் தொல்பாணபத்திரற்குப்
பத்தராகத் துதிப்பார் பற்று. (61)

ஞாலம் புரப்பவர்க்கு நற்றவர் சொன்மற்றவர்க்கும்
கோலமருமத்தாணி குற்றாலம்—மூலமறை
வேதப்பழந்தருவார் வேலவன்முன் வந்தார்க்குச்
சூதப்பழந்தருவார் தோப்பு. (62)

பொற்றால வேந்தனுக்கும் பூங்குழற்கும் வானரம்பை
குற்றாலவட்டமிடுங் குற்றாலம்—சிற்றயன்
பண்குழற்கானத்துவந்தார் பஞ்சவடிக்காவொருபெண்
வண்குழற் கானத்து வந்தார் வாழ்வு (63)

கெண்டைக் கண்மாதர் கெழுமுதனத்தான் மணத்தால்
கொண்டைக் கலர்முடிக்குங் குற்றாலம்—இண்டைத்தார்
வாசவருக்கத்தார் மருமத்தாரன்பரெனும்
பாசவருக்கத்தார் பதி (64)

மாடக்கிளியும் வருவிருந்து பார்ப்பவரும்
கூடத்தமிழ் தீட்டுங் குற்றாலம்—ஆடரவக்
கண்டிகை மெய்ச்சுந்தரத்தார் காபாலக் கூத்தாடல்
சண்டிகை மெய்ச்சுந்தரத்தார் சார்பு. (65)

பொன்சிகரித்தேனூறும் புத்தேளிராலயமும்
கொன்சிகரங் கோபுரஞ்சேர் குற்றாலம்—முன்சிகரம்
தந்துளவஞ் சக்கரத்தார் தந்துளவஞ் சக்கரத்தார்
தந்துளவஞ் சக்கரத்தார் சார்பு. (66)

ஆணைநெறியா லசுத்தரையுஞ் சுத்தரையும்
கோணை யறத்திருந்துங் குற்றாலம்—சாணையுறக்
கையனுக்கச் சந்துரைத்தார் காவலனூர் நாவலூர்
மெய்யனுக்கச் சந்துரைத்தார் வீடு. (67)

காடேறிக்காய் பரந்துங்கால்வாவி நீர்மிகுந்தும்
கோடேறித் தண்டலையூர் குற்றாலம்—ஏடேற
ஆற்றுதகத் தேற்றினாராறலையுமென்கலக்கம்
தேற்றுதகத் தேற்றினர் சேர்பு. (68)

மாதினர்பாற் பாடினர்க்கும் வந்தருவியாடினர்க்கும்
கூறினற்பாவந்தடுக்குங் குற்றாலம்—தேறினர்பால்
யாண்டும்பர வெளியாரெல்லையண்ட மூடுருவித்
தாண்டும் பரவெளியார் சார்பு. (69)

காவாலிரு நிதியாற் கண்பலவால் வேள்விகளாற்
கோவாற் புரந்தரனுங் குற்றாலம்—மாவார்
வருக்கை மூலத்தார் வழங்கு பொக்கணஞ்சேர்
திருக்கை மூலத்தார் சிலம்பு. (70)

அற்றவராய் வந்தோரு மாரமரு வந்தோரும்
கொற்றவராகத் துடங்குங் குற்ருலம்—நற்றவராம்
மூவரிசைப் பாடலார் மும்முரசு மண்டபத்துத்
தேவரிசைப் பாடலார் சேர்பு. (71)

வாடாக்கலைபிரிந்த மானுநூல் கற்பவரும்
கோடா மதிக்கலைகூர் குற்ருலம்—தோடாடத்
தூக்குமிசைத்தாண்டவர் தொல்வினை தீர்த்தென்மனமும்
வாக்கு மிசைத்தாண்டவர் வாழ்வு. (72)

ஞாலமிசையெப்பொருளு நன்னதியிற் சூல்வளையும்
கூல மறுகுதருங் குற்ருலம்—மாலுருவாய்
முன்பாலின் கண்படுத்தார் முக்கணரசாரடையிற்
றென்பாலின்கண்படுத்தார் சேர்பு. (73)

கற்றமைந்தோர் சொல்லுங்கலகவிழியார் குழலும்
குற்றமலராதரிக்குங் குற்ருலம்—பற்றத்
திரமாலையத்தன்றிரிகூடத் தெய்வப்
பரமாலையத்தன் பதி. (74)

வாவிக்கலை குதித்தும் வானமுகிலைப்பழித்தும்
கூவற்கயமுழக்குங் குற்ருலம்—யாவர்க்கும்
தோமே களைகணர் தொல்லையண்ட கோடிகட்குத்
தாமே களைகணர் சார்பு. (75)

வாட்டானை வேந்துமணிப்பகலால்வாயசமும்
கோட்டானையங்கடல்செய் குற்ருலம்—தோட்டானை
மாத்தூலத் தோலுரியார் மாமருங்கிற் சாத்துகலை
சாத்தூலத் தோலுரியார் சார்பு. (76)

பானற் செழுந்தேனும் பல்சுருங்கை பாய்மதியும்
கூனத்தினமுகக்குங் குற்ருலம்—கானப்பேர்
பூவணங்கே தாரத்தார் புத்தூரர் வெற்பீன்ற
மாவணங்கே தாரத்தார் வாழ்வு (77)

மாவிளம்பூங்குயிற்கு மாதரார் பொன் முலைக்கும்
கூவிளங்காயிணையாங் குற்ருலம்—மீவிளம்பி
ஏறுபடைப் பாரிடத்தா ரேத்தியநாவஞ்செழுத்தின்
வீறுபடைப் பாரிடத்தார் வீடு. (78)

மேற்றேவர் வான்வழிக்கும் வீணையோர் பாடலுக்கும்
கோற்றேன் வழுக்கெடுக்குங் குற்றாலம்—மேற்றேறிற்
புள்வாகனத்து வந்தார் போதமுனிக்காக விடை
வெள்வாகனத்து வந்தார் வீடு. (79)

முத்துமருவிச்சிகர முட்டையென்று வான்குருகு
கொத்துமருவிச்சிகரக் குற்றாலம்—தொத்துமருப்
பூங்கொன்றைத்தாமத்தர்பூதலமெல்லா நிறைந்தும்
ஊங்கொன்றைத் தாமத்த ரூர். (80)

வெம்பாவக் குன்றிடிக்கும் வெற்பெறும் பேராணைக்கும்
கொம்பாம்வடவருவிக் குற்றாலம்—தம்பால்
அடியவரை யாதரிப்பாரல்லவரை மேனாட்
கடியவரை யாதரிப்பார் காப்பு. (81)

மண்டலங்கணிக்கு மெழின் மாவெயிலுந் தூவெயிலும்
குண்டலங்கடந்திலகு குற்றாலம்—அண்டருய்யக்
கண்டங்கார் பூத்திருந்தார் கற்பிலாக் கேதகையின்
கண்டங்கார் பூத்திருந்தார் காப்பு. (82)

காட்டலையும் வாரணமுங் கானுறுந்தேனுறும்
கோட்டலைவாரிப்புல்லுங் குற்றாலம்—நாட்டலையார்
உத்தமதிக்குடையாரொண்ணின்ற வண்டமெல்லாம்
வைத்தமதிக்குடையார் வாழ்வு. (83)

தேடுதவத் தெய்வத் திருமலைக்கு மாநதிக்கும்
கோடுதவு முத்தலைசேர் குற்றாலம்—ஏடுதவப்
பூணு மறைப்பொருளார் பொய்ப்பொருளாய் காண்பவர்கள்
காணுமறைப் பொருளார் காப்பு. (84)

செப்புக்குவிமுலையார் சேல்விழியும் வானரமும்
கொப்புக் குழைதாவுங் குற்றாலம்—துப்புத்
தருக்கமழு மானேற்றார் தாளிரண்டின் முப்பூ
மருக்கமழு மானேற்றார் வாழ்வு. (85)

தோட்டிக்கயல் வயலிற்றுன்னருவிக் கோட்டயலிற்
கோட்டிக் கயம்பாயுங் குற்றாலம்—கூட்டிப்
பரசமைய முந்தடுப்பார் பண்டமரர் போற்றிப்
பரசமையமுந் தடுப்பார் பற்று. (86)

வாம்புரவித் தேருமட வார்வதன பங்கயமும்
கூம்புபடா மாலைமலர் குற்றாலம்—பாம்புபிறை
சூடலையாற்றினர் தூங்கானை மாடத்தார்
கூடலையாற்றினர் குன்று (87)

செண்டாடல் வீதிகளுஞ் சேயிழையார் மேடைகளும்
கொண்டாடுங் கந்து கம்பாய் குற்றாலம்—வண்டாடாச்
செண்பகவனத்தினன் செங்கை மழுவான் மலர்மேல்
ஒண்பகவனத்தின னூர். (88)

தெற்றம்பயில் கவிஞர் செய்யுளுமானர் விழியும்
குற்றம்பல கழிக்குங் குற்றாலம்—பற்றணியா
நஞ்சமர ராக்குவித்தார் நஞ்சமுண்டு வானவரை
விஞ்சமர ராக்குவித்தார் வீடு. (89)

அம்புபடாவில்லு மளிபடாப் பூமலரும்
கொம்புபடாச் சோலையுஞ்சூழ் குற்றாலம்—வம்புபடாப்
போதுபடா மாத்தருவார் போர்வினைபடாமலருள்
மீதுபடா மாத்தருவார் வீடு. (90)

அத்தளவித்தாரநகை யார்குழலும் பேரெயிலும்
கொத்தளவித்தாரமருங் குற்றாலம்—முத்தளகத்
தாய்க்காடு நாடகத்தான் சாய்க்காடும் வெண்காடும்
வேய்க்காடு நாடகத்தான் வீடு. (91)

கோட்டுவரையாடி வருங்கூடமிசை மாடமிசைக்
கோட்டுவரையாடிவருங் குற்றாலம்—கோட்டுவரை
வில்வளைக்கை மாதிடத்தார் வெண்கனகச் செங்கனகப்
பல்வளைக்கை மாதிடத்தார் பற்று (92)

மட்டார்குழலார் வனமுலையு நெற்பொலியும்
கொட்டாரம் பட்டடைசேர் குற்றாலம்—அட்டாங்க
யோகத்திருப்பாருளத்திருப்பார் மங்கையொரு
பாகத்திருப்பார் பதி. (93)

வம்பலர்ப் பூஞ்சாரலிடை வந்து பணிந்தெஞ்ஞான்றும்
கும்பமுனிபரவுங் குற்றாலம்—அம்பணியும்
நித்தனுலாம்பதத்தானீள்சரியை யாதியர்க்கு
வைத்தனுலாம்பதத்தான் வாழ்வு. (94)

வேதண்ட மேலாறும் வேய்வளைத்த குஞ்சரமும்
கோதண்டபாணி நிகர் குற்றாலம்—காதண்ட
வாங்கியபிறைகத்தார் மாலையாய்க் கண்டிகையாய்
ஓங்கியபிறைகத்தா ரூர் (95)

பாடியபூவண்டினமும் பாவரங்கிற் கார்மயிலும்
கோடியராகத்திறஞ்செய் குற்றாலம்—நீடியகை
வாகருணத் தானத்தன் வாய்மூர் மறைக்காடு
கோகருணத்தானத்தன் குன்று. (96)

காவற்செங்கோன் முறையுங்காட்டான் பயில்வரையும்
கோவர்த்தனமிசைக்குங் குற்றாலம்—யாவர்க்கும்
நம்பரத்தரம்பரத்தர் நம்பரத்தரம்பரத்தர்
நம்பரத்தரம்பரத்தர் நாடு. (97)

தேமளவுபூந்தடத்துஞ் செய்தவத்தோர் மூப்பிடத்தும்
கோமழவு மேய்ந்துவரும் குற்றாலம்—ஆமளவு
பண்டேயுவணத்தான் பங்கயத்தான்றேடுமுரு
வண்டேயுவணத்தான் வாழ்வு. (98)

புஞ்சவரைச் சாரலிலும் பூவிலனத்தாவியிலும்
குஞ்சரங்குலாவு திருக்குற்றாலம்—செஞ்சரத்திற்
கண்ணையிடந்தப்பினர் கண்ணிடந்தப்பாரயன்போம்
விண்ணையிடந் தப்பினர் வீடு. (99)

வாழிக்கோ னீதியருமன்னுமெழிற் காளையரும்
கோழிக்கோனைப்பொருவுங் குற்றாலம்—காழித்
திருத்தனையன் பாடலார் சீராலங்காட்டிற்
கருத்தனையன் பாடலார் காப்பு. (100)

முற்றிற்று.

உ

சிவமயம்.

## மேலகரம், திரிகூடராசப்பக் கவிராயமூர்த்திகள்

### இயற்றியருளிய

# திருக்குற்றாலப் பரம்பொருள் மாலை.

---

காப்பு.

வார்க்குங் குமமுலை யாள்பாகன் வல்வினை வன்பிறவி
தீர்க்குங்குற் றாலப் பரம்பொருள் மாலையைச் செப்புதற்குத்
தார்க்கும்ப தந்தி முகத்தான் சரண சரோருகமுங்
கார்க்குங் கருங்குழல் வாணிபொற் பாதங் காப்பதுவே.

நூல்.

திருவளர் சன்னதி யுந்திரி கூடச் சிகரமுந்தண்
ணருவியுஞ் சண்பகக் கோதைதன்பாகத் தருளும்பெற்றேன்
கருவளர் தாயர் பெறுவகை நீயென்னைக் காத்தருள்வாய்
பருவளை வீதி யுடையாய்குற் றாலப் பரம்பொருளே. (1)

நற்குண மேது மறியே னறிந்துநயந் துவப்பாற்
கற்குந் தொழிலெனுக் கேதேனு மில்லை கசிந்துனது
சொற்பெரும் பாபுஷ்கத் தென்றோ பிறவித்துயர்தவிர்ப்பேன்
பற்குனன் சம்புட மீந்தாய்குற் றாலப் பரம்பொருளே. (2)

துடியா ரிடைசங் கிலிக்காவன்றொண் டன்கண் செய்து சோர்வு
அடியானென் றேகண் கொடுத்தே திருவிளை யாடல்செய்தாய்
செடியே துனது திருக்காதை வாசித்துண் சீர்பெருக்கும்
படியேகன் மாசு தவிர்ப்பாய்குற் றாலப் பரம்பொருளே. (3)

சரந்தான் பிசகி யறிவழிந் தாவி தவறுமுன்னே
வரந்தா மலரடி நீழலில் வாழ்க மலரயனார்
சிரந்தே டவுமன்று பூமியைக் கீண்டு திருவடியைப்
பரந்தாமன் றேடவு நின்றாய்குற் றாலப் பரம்பொருளே. (4)

வென்றிப் பரிமிசை கொண்டே சதுரங்கம் வேறு கொண்டே
சென்றக் கணத்தில் வேட்டஞ்செய் போதிற் செயிர்த்தெழுந்து
இன்றிந்தப் பாண்டியன் முன்பொரு வென்றேறெ திரத்திறந்த
பன்றிக் குருளைக்குத் தாயாங்குற் ருலப் பரம்பொருளே. (5)

கோடி நிதான தனமென்று மேகங் குழலதென்று
நீடிய கூர்விழி வேலென்று பேசி நிலை திரிந்தேன்
நாடு முனதடி யாருடன் கூட வருள்புரிவாய்
பாடினிக் காய்விளை யாடுங்குற் ருலப் பரம்பொருளே. (6)

சத்திரங் காத கசடரைப் பாடிச் சலித்துவிட்டேன்
எத்திரத் தாலுனக் காட்செய்கு வேனென்னை யும்புரப்பா
யத்திர வேல்விழி யாளிசை ஞானி யருள் மகனைப்
பத்திரங் காட்டியன் ருண்டாய்குற் ருலப் பரம்பொருளே. (7)

பூசா பலன்பெறு மேலோரை வேதப் புராதரரை
வாசால மாகவுன் னுடலைப் பாடு மகத்துவரைக்
கூசாம லேசியென் மக்களை வாழ்வைக் குணமிதென்னும்
பாசா டவிக்கின னுவாய்குற் ருலப் பரம்பொருளே. (8)

சிந்தனை வாக்குடம் பாலேது முன்றன் திருவடியை
அந்தியிற் காலையி லாதரி யேனுக் கறிவுதந்து
வந்தெனை யாண்டுன் னடியாரைச் சேர வரமருள்வாய்
பந்த மறுக்குங் குருவேகுற் ருலப் பரம்பொருளே. (9)

சேவலும் வேலு முடையானை யீன்ற சிவக்கொழுந்தே
ஆவலும் சோகமுந் தீர்த்தடி யாருக்கருள் குருவே
பூவல வேனெய்யு மோகத்தைத் தீர்த்தெனை யும்புரப்பாய்
பாவல னேவிய தூதாகுற் ருலப் பரம்பொருளே. (10)

காமாரி யென்றுஞ் சங்காலைய னென்றுங் கருதிவிண்ணோர்
பூமாரி பெய்யும் புராதனத் தாய்புவி யோர்குயிராம்
கோமான்முன் மூவர் கவிமாலை சூடினை கோத்தடியேன்
பாமாலை யும்புனை பாதர்குற் ருலப் பரம்பொருளே. (11)

ஆசை வலைக்கு ளகப்பட்டியானுன் னடிபிரியா
நேசரைப் போலவும் வேசங்கொண்டேன்முழு நேசமுறுந்
தாசரைப் பாதம் பரவேனல் வார்த்தையுஞ் சாற்றுகிலேன்
பாசந் தவிர்த்தென்னை யாள்வாய்குற் ருலப் பரம்பொருளே.
(12)

கிணத்தர மான தனத்தார் மயிலிற் கிடந்துனது
மணத்தர விந்தப் பதந்தொழு துய்யும் வகையறியேன்
குணத்தர மானபொற் குன்றே கருணைக் குளிர்கடலே
பணத்தர வாரம் புனைந்தாய்குற் றாலப் பரம்பொருளே. (13)

மதஞ்சலி யாம லொழுகுங்கை மாவுக்கும் வன்சிலந்தி
நிதஞ்சலி யாப்பந்தர் செய்ததுக் காப்பத நீழல்தந்தாய்
கதஞ்சலி யாத யமனூர் புகாதென்னைக் காத்தருள்வாய்
பதஞ்சலி காணநின் றாடுங்குற் றாலப் பரம்பொருளே. (14)

வரையார்முக் கூடமுந் தேனுறுஞ் சண்பக மாநதியுந்
திரையாரு பொங்கு கடற்றிரு வேணியுஞ் சிற்பொதுவும்
விரையார் குழல்மொழி பாகமும் வெள்வளை வீதியுடன்
பரைபீடக் கோயிலுங் கொண்டாய்குற் றாலப் பரம்பொருளே (15)

நாணனுங் காடனுஞ் சொன்னதற் கொன்று நவில்கிலதாய்
வீணனென் றேதள்ளிப் போனார்கள் திண்ணனு மென்றசைதந்
தானவ காமியந் தீர்ந்தாண் டிமைக்க தாவதென்றே
பாணனை யேவல்கொண் டாண்டாய்குற் றாலப் பரம்பொருளே. (16)

ஆசையு மாசையி லாதது மேகன னேகனுமாத்
தேசுறுந் தேகியுந் தேகமு மாகிய சிற்சொருபாம்
மாசுறு மென்னையுந் தேசாக்கி யானந்த வாழ்வருள்வாய்
பாசம் பசுபதி யாவாய்குற் றாலப் பரம்பொருளே. (17)

சோபம் பிறவித் துயருளந் தேனத் துகடவிர்ப்பாய்
நீப வனத்துறை வேதியர் கோத்திர நேர்மையுள்ளான்
மாபங்க மாகத் தரும சுவாமி மதுவருந்தும்
பாபந் தொலைதந்தி மாயகுற் றாலப் பரம்பொருளே. (18)

ஆதிக் கனாதி யுருவரு வேதுமிலா துளதாய்
வேதிக்கும் பல்லுயி ருக்குயி ராகியு மேறளித்தாய்
சாதிக்கு நற்றவந் தந்தருள் வாய்தக்கன் சாபமஞ்சும்
பாதிக் குளிர்மதி வேய்ந்தாய்குற் றாலப் பரம்பொருளே. (19)

சகட்டுள வாழ்க்கை யுடையேனிவ் வாழ்வு சரதமென்றே
துகட்டுணைப் போது நினையேனின் னுலயஞ் சூழுகில்லே
னகட்டிரை யின்பொருட் டாலலேந் தேன்றனை யாள்வருண் [டோ
பகட்டுரிப் போர்வை புனைந்தாய்குற் ருலப் பரம்பொருளே. (20)

விரிவான வண்டங்கள் செய்வதற் காவிதி யாயிருந்தாய்
யரியாகி யன்னது காத்தாயிக் காத் தரனுருவாய்
பெரிதா யிருந்தென்னை யாண்டாய் வழுதி பெருவிலைக்காப்
பரியேறிச் சேவகஞ் செய்தாய்குற் ருலப் பரம்பொருளே. (21)

எத்திக்கு மோடி யலமந் திராப்பக லெய்த்திளைத்துச்
சுத்தியு நாதனைக் காண்பரி தாகுஞ்சும் மாவிருந்தும்
நத்தித் தமதுள றிவாம் பொருளென நாடுகின்ற
பத்தற்கு முத்தி கொடுக்குங்குற் ருலப் பரம்பொருளே. (22)

பூகத்தில் வாளை பகடேறிப் பாய்ந்துவிண் போந்துமலை
மேகத் துலாவும்பு டாற்சுனத்தாய்விழி வேல்மடவார்
சோகத் தழுந்து மெனையாண்டுன் பாதத் துணையருள்வாய்
பாகங் குழல்மொழிக் கீந்தாய்குற் ருலப் பரம்பொருளே. (23)

ஆதலு மானதைக் காத்தலுங் காத்த தழித்தது நீ
யீதலு மீந்ததை யேற்பது நீயெனி லென்னுடைய
சாதலு மீண்டு பிறப்பையுந் தீர்த்துன் பதந்தருவாய்
பாதல வாச லுடையாய்குற் ருலப் பரம்பொருளே. (24)

ஆண்டிப் படிவங்கொண்டேசிறுத் தொண்டனை யாண்டு [கொண்டாய்
மீண்டிப் படியந்த வேளாளனைக் காத்தனை வேடனிடம்
பூண்டிமே வெம்பழி தீர்த்தாயெனையும் புரந்தருள்வாய்
பாண்டித் துரைத்தனஞ் செய்தாய்குற் ருலப் பரம்பொருளே. (25)

எவ்வெவ ரெப்படி யாவினை செய்தங் கியற்றினரோ
அவ்வவர்க் கப்படி யாயிருந் தாயடி யேனுளத்திற்
செவ்விதின் வைத்துத் தொழுதேன் கதியருள் தேவருய்யப்
பவ்வனஞ் சுண்டருள் செய்தாய்குற் ருலப் பரம்பொருளே. (26)

*அஞ்சாது தென்புலத் தூதர் வரவென தப்பனென்றே*
*நெஞ்சாற் ரெழுதுன்னே வாழ்த்தல்செய் வேனந்த நேரத்திலே*
*மஞ்சார் குழலி மணுளா கணங்கள் வரவிடுப்பாய்*
*பஞ்சாக் கரப்பொரு ளாஞய்குற் ருலப் பரம்பொருளே.* (27)

*காரந்த மாங்குழ லாரிளஞ் சேயைக் கறிசமைக்க*
*ஈரந் தருமன மில்லா துரைத்தது போற்சிறி யேன்*
*தீரந் தரும்பத்தி யில்லேன் கடைக்கண் சிறிதருள்வாய்*
*பாரந் தருமலே வில்லாய்குற் ருலப் பரம்பொருளே.* (28)

*நாத்தழும் பேறும் படிதிரு நாமத்தை நன்மனதாய்த்*
*தோத்திரஞ் செய்யும் பழவடி யார்வினே யைத்துரத்திக்*
*காத்தருள் செய்யுந் தொழிலா யடியேனைக் காத்தருள்வாய்*
*பார்த்தன் தனுவடி கொண்டாய்குற் ருலப் பரம்பொருளே.*
(29)

*நஞ்சணி கண்டத்துச் சோமே சனேயுங்கா ஞயகனும்*
*மஞ்சணி தேக்கு வரைதிரி கூட வடவருவி.*
*யெஞ்சுமென் வல்வினே தீர்த்தான் விமானமு மோரிடத்திற்*
*பஞ்ச தரிசனந் தந்தாய்குற் ருலப் பரம்பொருளே.* (30)

*ஆடிய சேவடி வாழிநின் ஞகத்தி லன்புடனே*
*கூடிய செல்வி குழல்வாய் மொழிபதம் வாழிகுன்ரு*
*நீடிய நின்னடி யார்வாழி வாழியை யானுநின்னேப்*
*பாடும் பரம்பொருள் மாலேகுற் ருலப் பரம்பொருளே.* (31)

*முற்றிற்று.*

உ

சிவமயம்.

## மேலகரம், திரிகூடராசப்பக் கவிராயமூர்த்திகள்

இயற்றியருளிய

# திருக்குற்றாலக் கோவை.

## கைக்கிளை.

### காட்சி.

பூமேவுகஞ்ச நறுநீல முல்லைபொற் கோங்கநெடுங்
காமேவுகாந்தளு மோர்கொடி மேற்கடி கொண்டலர்ந்து
கோமேவு மேனியர் குற்றாலநாதர் கொழுஞ்சினைப்பூந்
தேமேவு சண்பகக் காவூடு நின்று சிறந்தனவே. (1)

### ஐயம்.

அலையா ரதிர்திருப் பாற்கடலோ விண்ணவரிடமோ
மலையோ மலையை வளைத்தே சிலைகொண்டு வானவர்க்குந்
தலையானவர் திருக்குற்றாலர் வெற்பினிற்றாழ்குழற்கு
நிலையாயெஃதிட மென்றுரைப்போமன நிச்சயித்தே. (2)

### துணிவு.

தேடித்துளபனுங்காணுக் குற்றாலர் திருப்பதத்தை
நாடிப் பணிகிலர் நெஞ்சமொரு பொருணண்ணலின்றி
வாடிச்சுழல்வது போலே யிவள் கண்கள் வாட்டமுற்று
நீடிச்சுழல்வதனாலுமின்னாட்கிந் நிலமிடமே. (3)

### குறிப்பறிதல்.

அயர்த்தவர் தம்மை யறியாக் குற்றாலரடன்மறலி
பயத்துக்கு மந்தப் பயந்தீர்ந்தன் பின்மனம் பற்றுதற்கு
நயப்புறு மந்தணற் கேபாத நீட்டிய நாட்டமெனக்
கயற்கண்ணிலேயிரு பார்வையு முற்றதிக் காரிகைக்கே. (4)

**கைக்கிளை முற்றிற்று.**

## இயற்கைப் புணர்ச்சி.

### இரந்து பின்னிற்றற்கெண்ணல்.

மகத்தே சிகரெனுங் குற்றாலநாதர் வரையிடத்தே
மிகத்தே சிகம்படைத் தேவளர்வோ ரம்மிகுதியினை
யகத்தே சிறைப்படுத்திக்கொள்வரோ கொண்டதாகினுமே
யிகத்தே சிறிதிரப்பார்க்கில்லை யென்பதில்லை நெஞ்சமே. (5)

### இரந்து பின்னிலை நிற்றல்.

அந்தரர் போற்றுங் குற்றாலர் தம்மான்முனமாவதின்றுஞ்
சுந்தரர்க் குத்துயர் தீர்த்தார் நடந்தொரு தோகையினை
மந்தரப் பூண்முலை மாதேயுன் றுற்றுயர் மாற்றுவை நீ
கந்தரப் பூகமின் னேதுயர் தீரக்கருத்துவையே. (6)

### முன்னிலையாக்கல்.

தெவ்வரை வென்ற நகையார்குற் றாலர் சிலம்பிடத்தே
யவ்வரைத்தோளிய ராயத்துடன் விளையாடலின்று
மைவரைதாண்டு மறியென்புயவரைவாவுதிற
மிவ்வரையென்னென்று பார்ப்பதற்கோநிற்றலேந்திழையே. (7)

### மெய்தொட்டுப் பயிறல்.

மாதொருபாகத்தர் குற்றாலநாதர் மணிவரையா
ரோதியலங்கற்படிவண்டு காளிடை யொல்குதற்கே
யாதிமகன் செய்தலானீவிராரப்பொருதவர்தம்
போதினிற் போயுண்ணுவீர்மது வீகுவர் போதவுமே. (8)

### பொய்பாராட்டல்.

தண்பொழில் சூழ்திருக்குற்றாலர் வெற்பிலுன் றன்னைமின்னே
பண்பொடுலகமின்றுரின் மிகவும் படைத்தனனுன்
மண்பொதுத் தந்தையெனும் பேரை மாற்ற வருமெனவே
நண்பொருவாம லயன்வாக்கின் செல்வியை நாக்கொண்டதே. (9)

### இடம்பெற்றுத்தழால்.

*படமாசுணகங் கணத்தார் குற்றாலர் பனிவரை மேல்*
*விடமார் கடலமிர்தந்தரல் போனமை வெல்விடக்கண்*
*ணிடமா கருணையுண்டுழிருட்காவு முண்டிங்ஙன்மின்னார்*
*தடமார்பின் கொங்கை தழீஇக்கொளலா நிசந்தானெஞ்சமே.*
(*10*)

### வழிபாடுமறுத்தல்.

*பொருசிறை வாரண கேதனர்மீதி லன்போர்குரண்டந்*
*தருசிறை வேய்ந்த சடிலர் குற்றாலர் தடவரைமே*
*லிருசிறை கொண்டெழும் பூஞ்சினை வார்குருகீரெமை நீ*
*ரொருசிறையாய் வைத்துக் காப்பீ ரடைந்தனமும்மிடத்தே.*
(*11*)

### இடையூறுகிளத்தல்.

*அடர்விடங்கையொன்றமைத்துக் குற்றாலரஞ்சேலெனவோர்*
*தடவனசக்கரம் விண்ணோர்க்குக் காட்டுந்தகைமையைப்போல்*
*விடமதுகைக்குளமைத்தெளியேனெனவேயறிந்தோ*
*திடமுறவார் கொங்கை வாரிசங்காட்டினை தேமொழியே.* (*12*)

### நீடு நினைத்திரங்கல்.

*சூட்டானையனமென்றுட்கொள் குற்றாலத்தன்றொல்வரை*
*வாய்க்*
*கோட்டானை வார்தளைவிட்டே யகலத்திற்கொண்டுசென்று*
*மீட்டானையல்லெனுமாரன் கரும்பினைமென்றுதின்று*
*போட்டானையமிதெந்நாட்கிட்டுமோ சொல்க பூங்கொடியே.*
(*13*)

### மறுத்தெதிர்கோடல்.

*சரத்தைவிட்டே மதனகாமத்தழல் கொளுத்தச் சுட்டுமான்*
*கரத்தர் குற்றாலத்தர்பாற்கொண்டவனையுங்காய்ந்தவைபோ*
*லுரத்தண்ணலுக்கென்விகாரத்தழல்பற்றி யோங்கியதென்*
*றிரக்கற்புக்காத்திடு நாண்வேலியும் பற்றிச்சென்றெழலே.*
(*14*)

### வறிது நகைதோற்றல்.

காம்படுதோளி முகத்தா மரைத்தடங்காட்டியதி
லாம்பலின் முல்லையலர்விக்கச் செய்தவதிசயந்தான்
பாம்பணி வேணியர் குற்றாலநாதர் பனிவரைமேற்
றேம்பலுறுமயல் கவ்வையுமங்ஙனந்தேறவென்றே. (15)

### முறுவற் குறிப்புணர்தல்.

பனகா பரணத்தர் குற்றாலநாதர் பனிவரைமேற்
கனகாபரணத்து மிக்காய்ப் பொன்மாது கனிந்தெமக்கு
மனதாரப் பின்னுஞ்செவ்வாயாரத்தந்தமணி நகையின்
றெனதாருயிர்க்கு முடற்கும்புணை தற்கிசைந்ததுவே, (16)

### முயங்குதலுறுத்தல்.

கொம்புடை வேழமுரித்ததன் போர்த்தவர் கோதிலன்பர்
நம்புபதாம்புயர் குற்றாலர் வெற்பிலிந்நாளுறைப்பா
யம்புருவச்சிலை கொண்டவர் நாணிழந்தாரதனால்
வம்புறக் கட்டிய பொற்கோட்டையுங்கை வரப்பெற்றதே. (17)

### புணர்ச்சியின் மகிழ்தல்.

கன்னலஞ்சாறொடு பால்வளங் குன்றியுங் காய்கனியின்
றன்னல நோக முதிர்ந்து மிரசந்தருஞ்சடிலப்
பின்னலராந்திருக் குற்றாலர் வெற்பினள் பெய்யிதழ்த்தேன்
பன்னலந்தங்கிய தந்நீர்மையில்லைப் பகரமிக்கே. (18)

### புகழ்தல்.

பொன்னுமுத்தும் பெறலாற்கொங்கை மானிலம் போருகஞ்சென்
றின்னிலத்திற்சில முட்டாளிடங்கொண்ட தேந்துகொங்கை
மின்னிவளுக்கறி வின்கணுயர்ந்ததிம் மேன்மையினுன்
மன்னர் குற்றாலத்தர் வெற்பினி லொப்புமொவ்வாததுவே. (19)

**இயற்கைப் புணர்ச்சி முற்றிற்று.**

## வன்புறை.

### அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

*பொன்னணியும்புனை சாந்தமும் பொன்னம் புடவையுநீ*
*டுன்னறுங் கூந்தற்றொடையலுங் கோட்டங்கடோற்றமின்றி*
*மின்னமர்பாகத்தர் குற்றாலநாதர் வியன் சிலம்பின்*
*முன்னது போலணிந்தேனணங்கேயம் முறைப்படிக்கே.* (20)

### பெருநயப்புரைத்தல்.

*மங்கைபங்காளர் நங்குற்றாலர் வெற்பின் மருதநெய்த*
*லெங்கும் புகுவண்டு காவோர் கொடியிலெழு மலரிற்*
*பைங்கொடி பூத்தவிதழாம்பலென்றும் பருகிடத்தேன்*
*றங்குதல் போற்றகுமோ நீவிராய்மலர்ச்சாதியிலே.* (21)

### தெய்வத்திறம் பேசல்,

*அந்நாணமக்கு விதிகை யொருவர்க்கெட்டாதலிஞ*
*லிந்நாள் விலக்க வெவர்வல்லர் காணிடை வேணிரவி*
*செந்நாவனன்மதிக் கண்ணுடையாரெனுஞ் சித்ரசபை*
*நந்நாயகர் திருக்குற்றாலர் வெற்பினினன்னுதலே.* (22)

### பிரியேனென்றல்.

*ஒருநாளு முன்னைப் பிரியேன் பிரியிலுலகிலென்றும்*
*பெருமான் குற்றாலக் குழல்வாய் மொழிதயப் பிரிந்தனனாற்*
*றருமோர் பயமின்றி முப்பொறி யோடுந்தனிப்பிரிய*
*வருமோ வராதணங்கே நிசமாக மனத்திலெண்ணே.* (23)

### பிரிந்துவருகேன்றல்.

*மானேயிடத்து மழுவே வலத்தினும் வைத்துயிரோ*
*டூனேயெனவு மிசைந்த குற்றாலர்வெற்புன்னைமின்னே*
*நானே பிரியினும் வாளுடுபட்டமு நற்கயிறுந்*
*தானே யெனவருவேன் வருவேனிது சத்தியமே.* (24)

இடமணித்தென்றல்.

ஒன்னலர் முப்புரங் காய்ந்த குற்ருலர்க் குறுபதியா
நன்னகர் வெற்பிலணங்கே நும்மூர்க்கய நாடொறுமென்
ருென்னகர் வேழத்திரள்புக்குமெய்சுதை தோயப்பெற்றே
பொன்னகர் வேழத்தையொப்பாகவே வந்து புக்கிடுமே. (25)

**வன்புறை முற்றிற்று.**

---

## தெளிவு.

நோற்றுங் குற்ருலர்பொற்ருளின் பங்கண்டவர் நோன்றலினை
மாற்றும்படிக்கு நினைகுவரோதனிவைத்திலது
தேற்றும்படிக்கு வருவார் வெங்காமச் செந்தீப்பசிமுன்
பாற்றுங்கலவியமுதுண்ட நன்றியவர்க்குண்டுமே. (26)

**தெளிவு முற்றிற்று.**

---

## பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங்கிளத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல்.

மைத்தாழ் குழற்றினை வாசமுஞ் சிற்றிடை வாசமுஞ்செங்
கைத்தாமரைகளுறைவண்டலம்பவுங் கன்னிகையோ
வத்தாரை செல்வதல நம்முயிரதுவா மனனே
நத்தார் குழைத்திருக் குற்ருலத்தார் நன்னகர்வெற்பிலே. (27)

**சோகங் கண்டவன் பாகனொடு சொல்லல்.**

விருப்பகலார்க்கருள் குற்ருலர்வெற்பினில் வேழம்பர்க்கு
முருக்குவடமது நேர்நினைவாற்செல்வருண்ணினைவைப்
பெருக்கவென்மேல் வைத்தும் பாங்கியர்க்கஞ்சியும் பெண்மலைவா
யிருக்கும் வழிசெல்வது வலவாவின்றியம்பரிதே. (28)

**பிரிவுழி மகிழ்ச்சி முற்றிற்று.**

---

## பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோ வென்றல்

*தெள்ளறிவோருங் குற்றாலர் செயலித்துணையெ னுள்ளங்*
*கொள்ளாப்படாதெனல் போலாயினேன் பெண்கள் கூட்ட*
*வெள்ளம்வழிபடலாற்றனி வந்திவண்மேவியவா [மென்னும்*
*றுள்ளபடி மணமோ மாயமோ சொல்லுணர்ந்து நெஞ்சே.* (29)

## வாயில்பெற்றுய்தல்.

*வானம்புலியொடு மீனங்களுமிமையா நிற்றல்போல்*
*ஞானந்தருந் திருக்குற்றாலர் வெற்பினற்பாங்குறுமத்*
*தேனம்புலியொடு நம்முயிரா குமித்தேனிருகோ*
*மீனங்களுமிமையா நிற்குமுய்வினிமேலுமுண்டே.* (30)

## பண்பு பாராட்டல்.

*விண்ணுக்கு மண்ணுக்குமெட்டார் குற்றாலத்தர் வெற்பின்*
*மொழிப்*
*பண்ணுக் கிணைகுயிலென்னிற் சிறையுறும் பார்த்தளகத்*
*தெண்ணுக்கிருளுக்குக் கார்மணலேயொப்பெனிலறலாங்*
*கண்ணுக்கிணைகய லென்னிற் புலவொப்புக்கன்னிக்கென்னே.*
(31)

## பயந்தோர்ப்பழிச்சல்.

*துதித்தே யெவரும்பரவுங் குற்றாலர்தந் தோழனெனு*
*நிதிக்கோனிலுமிக்க வாழ்வெய்தவேயெந் நிறையணைத்து*
*மதித்தேசெவ் வாய்முத்தந்தந்து நெஞ்சார வளர்தனத்தைப்*
*பதித்தேநல் லின்பம் பயந்தாளை முன்னம் பயந்தவர்க்கே.* (32)

## கண்படைபெறாது கங்குனோதல்.

*மணிவியெனுங்குழல் வாய்மொழி மேவிய மன்னவரின்*
*றெணிவிழி துஞ்சவொட்டாதே யிருள்செய் திருள்வலிக்கண்*
*டணிவிழியாமலிருந்தவர் தம்மை யுண்டெனவே*
*மீனையுந் தெளிவொடு சென்றுமின்றுள்முன நிற்பதற்கே.*
(33)

**பிரிவுழிக்கலங்கல் முற்றிற்று.**

---

## இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச் சேறல்.

தம்மையொப்பாரிலர் குற்றாலர் முன்னுந்தவமுயன்றோர்க்
கும்மையுங் காத்துப் பின்னிம்மையிலாட்கொண்டுய்விப்பது
னம்மையுமுய்யும்படி திரிகூடத்து நன்னுதலைச் [போ
செம்மையுறுமுன்றரல் போற்றருவர் செல்வாய் நெஞ்சமே.
(34)

முன்புறக்காண்டல்.

முற்காலத்திற்றவமிக்காகச் செய்தவர் முன்சயில
விற்கால் வளைத்தவர் குற்றாலர் காட்சி விரைந்துபெறு
நற்காலம்போலுந் திரிகூடலெற்பினினன்னுதலைச்
செற்கா வனத்தினிற் கண்டெதிர்கொண்டதிறமிதுவே (35)

முயங்கல்.

கவரிலைச்சூலத்தர் குற்றாலர்வெற்பினிற் கன்னியைமுற்
றவமதனாற்புணர்ந்துண்டிதழ் தித்தித்ததைக்கண்டுமே
துவரிதழென்ற சொன்முற்றும்பொய்யாச்சு தொண்டைக்
கனியென்
றவர்சொலும் பாதிபொய்யாச்சு திணையினியாவதென்னே. (36)

புகழ்தல்.

கருங்கடலோடிப்படிவது மீண்டுங்கரியவனைத்
திருந்தவு மேற்சுமந்தூர்தலுங் கார்திருந்தார்புரத்தைப்
பொருங்குறுமூரலர் குற்றாலர் வெற்பினிற் பூங்கொடிதன்
சுரும்புறை வார்குழல் போற்கருப்பேறியுந் தோன்றுகவே. (37)

உடன்புணர்ந்தாயத்துய்த்தல்.

ஏயவெள்ளங்குறு நெய்போலிருந்தெங்கணும் புரந்துந்
தோயவெள்ளஞ்சென்று மால்வளர்ந்தாரென்றொடர்
புடைத்துஞ்
சீயவெள்ளங்கத்துரியார் குற்றாலர் சிலம்பிடத்தி
லாயவெள்ளஞ் செல்லுவீரவர்போல வணங்கரசே. (38)

**இடந்தலைப்பாடு முற்றிற்று.**

## பாங்கற் கூட்டம்.

### தலைவன் பாங்கனைச் சார்தல்.

*கல்வியுள்ளார்க்கவையச்சமில்லையொண் கனநிதியச்*
*செல்விய ஃ ளார்க்கிரவச்சமில்லையித் திறமுடிக்க*
*நல்விறற் பாங்கனுண்டச்சமெனக்கொருநாளுமில்லை*
*வெல்விடையார் திருக்குற்றாலநாயகர் வெற்பிடத்தே.* (39)

### பாங்கன் தலைவனையுற்றதுவினாதல்.

*துறந்தோர் தபசுகள் வேள்விகள்காக்கத் துணிந்தங்ஙனே*
*மறந்தோரரக்கர் கணங்களடா நின்று மாற்றினையோ*
*விறந்தோர் சிரம்புனை குற்றாலர்வெற்பி லெமதிறைவா*
*நிறந்தோயு மேனிமெலிவானதென்ன நினைவுரையே.* (40)

### தலைவனுற்றதுரைத்தல்.

*துப்பாலரவங்கொழுவி வரைசுழற்றக்கடுவிட்*
*டப்பாலின் சிந்தையடைந்தெழல் போற்கற்றறிந்த தொகை*
*முப்பாலினசிந்தையிற் குற்றாலர் வெற்பினள்மோகவரா*
*விப்பாலென்னெஞ்ச வரையுஞ் சுழற்றிநச்சிட்டனவே.* (41)

### கற்றறிபாங்கன்கழறல்.

*கூனார்மதியமு நாகமும் வேணியிற்கொண்டவர்பூந்*
*தேனாருங் கொன்றைத்தொடையார் குற்றாலர் சிலம்பிடத்தே*
*மானாலுந்தாக்கும் புலிமருளாவந்தமானொருத்தி*
*தானாநின்றாக்கை மருட்டுமெய்தேறுக தாரண்ணலே.* (42)

### கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

*பூங்கயற்கண்ணி குழல்வாய் மொழிபங்கர் பொற்சயிலக்*
*கோங்கைநிகர்முலையாளாசை யெம்மட்டுங் கொண்டதுவோ*
*காங்கெயனார் தெய்வருபத்தைவிட்டருங்காவனம்போய்*
*வேங்கை மரமெனநின்றார் வள்ளிக்கொடி மேவுதற்கே* (43)

### கிழவோற்பழித்தல்.

*முன்னாகமேற்றுயிலம்மாற்கிளையர் முனையரக்கன்*
*றன்னாகபாசத்திற் கட்டுண்டு மீண்டனர் தையலுமை*
*பொன்னாகமேவிய குற்றாலநாதர் பொருப்பிடத்தின்*
*மின்னாக பாசத்திற் கட்டுண்டு நீயென்னமீண்டிலதே.* (44)

### கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல்.

*தாரார்புயநண்பனே திரிகூடத்தலைவரெனும்*
*பேராரருட்டிருக் குற்றாலர் வெற்பிற் பிடிகொடுத்த*
*தீராமயக்கமெனுமந்தகாரத்திரளறப்பன்*
*னீராயிரங்கதிர்வந்தாலுந் தீர்ப்பதெளிதலவே.* (45)

### பாங்கன்றன் மனத்தழுங்கல்.

*முன்னாகவெங்கணு நின்ற குற்றாலர் முகில்வரைவா*
*யென்னாதனையறி வாற்சேடனென்றதற் கொப்பனபோற்*
*பொன்னாகத்தந்த மடிகொண்டு மாலுறப் பூணலுற்றார்*
*சொன்னவெடுத்தென்ன வென்றுரைப் பேனின்னந்*
*தோன்றுதற்கே.* (46)

### பாங்கன்றலைவனோடழுங்கல்.

*நயனநுதற்றிருக் குற்றாலர் வெற்பினினன்னுதலாள்*
*குயவரிகண்டது தேறிலை பல்கலை கொண்டுரைத்துஞ்*
*செயமுறுகின்ற குயவரி கண்டவர் தேறுவரோ*
*நியமுடன் பல்கலை கண்டவர்தேற்ற நிசமெனவே.* (47)

### பாங்கனஃதெவ்விடத் தெவ்வியற்றென்றல்.

*நாதரெனுந்திருக் குற்றாலநாயகர் நாட்டிலொரு*
*பூதலமோவந்தப் பூமகளோநகை பூத்தலரு*
*மாதர் வரையிட மோவரைமாமகளோமனவா*
*நீதவறுதிவ்விடமீதியலென நேர்ந்துரையே.* (48)

### அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

*கடம்பொழிமாவிதட் குற்றாலர் கண்டங் கறைபடுத்தும்*
*விடம்பொருங் கண்ணவர் மேருவொப் பாங்கொங்கை*
*வேண்டியவர்*
*தடம்படுமார்பணியும் பணியாமிடை தானவளுக்*
*கிடந்திரிகூடத் தெழுஞ்செண்பகாடவியென்னண்பனே.* (49)

### பாங்கனிறைவனைத் தேற்றல்.

கடுத்திகழ் கண்டர்நங் குற்ருலர் பொற்பதங் காண்பளவு
மெடுத்த த[illegible]ருத்துக் கலங்காதன்ப ரேத்துதல்போ
லடுத்த[illegible]ாணியன்ஞணிலை யான்கண்டகன்றுமப்பால்
விடுத்துநின் பாலெய்தளவுமன் பாதெளி மெய்நெஞ்சமே. (50)

### பாங்கன்குறிவழிச் சேறல்

திரைவாரிவையத் தெவையுங்குற்ருலர் செயலெனவே
யுரையாவகப்பற்றினர்வாழ் விடையிற்றட்டுண்பது போல
விரையாருஞ் செண்பகக்காமீதி லோசைமிகுந்தெழுப்பொன்
றரைமேற் புடைத்தெழும் பந்தோங்கலையிடைதட்டுதுமே.
(51)

### பாங்கனிறைவியைக் காண்டல்.

எற்ருலியம்பகை வென்றவராயிரத் தெண்கலையார்
குற்ருல மேற்றிரிகூடவரையும் பொற்கொய்கலையார்
சிற்ருலமேற்றிரிகூடவரையுந் தெரிந்திருக
ணுற்ருரக்கண்டதனு லிவரேயன்பரோதுமின்னே. (52)

### பாங்கனிகழ்ந்ததற்கிரங்கல்.

அன்பகலாதவர்க்கன்பர் குற்ருலரணிவரைவாய்
மின்பல மாதருஞ் சென்றறியாமன்மின்வெய்யவிழி
வன்பயில் கூர்மையுறத்தைத்த புண்ணெஞ்சின் மன்னர்க்கு
நான்
முன்பயில் கூர்மையுறத்தைக்கச் சொன்னது மோசமதே. (53)

### பாங்கன்றலைவனைவியத்தல்.

முனியாயிரஞ்சமை யுங்கன்னிக்காக்கடன் மூழ்கினரத்
துனியாற் புரோகிதனும்பாதிநாட்கடற்ருேயப்பெற்ரு
னனியார் குற்ருலர் வரைமீதிலெம்மிறை நன்னுதற்பைங்
கனியானதைக்கண்டு மீண்டதனுற்றிறங் கற்றவனே. (54)

### பாங்கன்றலைவியைவியத்தல்.

கயல்விழியாள்குழல் வாய்மொழி மேவுகங்காதரர்மா
வயர்திரி கூடத்திறைகையினுற் செய்வருத்தமுற்றோ
குயின்மணி தன்னையொன்றுந் தொடர்செய்து கைக்
கொள்வதற்கே
தயவுடனே கைக்கொடுத்தார்முந்நூலுந் தலைவருக்கே. (55)

### பாங்கன்றலைவற்குத் தலைவிநிலை கூறல்.

குறும்பலவேயிடங்கொண்டபிரான் மனங்கொண்டவர்பா
லுறும்பரிவுள்ளத்தை நீங்காத போலுமுளத்தை நின்பாற்
பெறும்படிவைத்து நின்றுள்கோவண்டேவினள் போலரக்கர்
நறுந்துணரேமொய்த்திருந்து நின்பூத்திசை நாடுதற்கே. (56)

### தலைவன்சேறல்.

கோமிசை வாணர் பராவுங்குற்றாலர் கொண்டே நினைத்தோர்
பூமிசைச் சேறல் விரைவென லான்மலர்ப் பூங்கொடிவாழ்
காமிசைச் சேறற் கவர்பதஞ் சென்னி கருத்துமுத
னாமிசையுங்கொண்டு செல்வோ நெஞ்சேயிந்த நாழிகைக்கே.
(57)

### தலைவன்றலைவியைக் காண்டல்.

சேணேக்கி செஞ்சொற்குழன்மொழி பாகர்தஞ் சிந்தனையார்
தாணேக்கிய திருத்தானெதிரெய்துந் தகைமையைப்போ
னுணேக்கியேவந்த நன்னுதலாந்திரு நாட்டமெனு
மாணேக்கி நிற்கவுங் காணப்பெற்றேனிவ் வனந்தனிலே.
(58)

குறிப்பு:- இதற்குப்பின்வரும் பாக்கள் அகப்படவில்லை.



ஸ்ரீ மீனாக்ஷி பிரஸ், தென்காசி – '54.